

JAN. '49 Regd. No. M. 4975

மஞ்சரி

MAHARAJA SE... SWATHI MAHAL LIBRARY TANJORE

ஸர்வதாரி - தை

காங்கிரஸ் அமைப்பு . . . . . . ப்ரீ இந்தியா 1
வெள்ளை மாளிகை 6
பலி ஆடு . . . . ஸ்வதந்த்ரா 9
புதிய ஜப்பான் . . . . கர்மவீர 16
நாலாயிரம் வருஷப் பிராணி . . . . மாத்ருபூமி 18
சீனப் போர் - உலக அபாயம் . . . அமிர்த பஜார் பத்திரிகை 21
மூக்கைக் கவனியுங்கள் . . . . . . வுமன் அண்ட் ப்யூட்டி 26
காலத்தின் எச்சரிக்கை . . . . விசால பாரத் 32
கிரிக்கெட் விநோதம் . . . . பிக்சர் போஸ்ட் 34
பொங்கல் பண்டிகை . . . . கதாவளி 37
தியாகையர் வம்சம் . . . . ஆந்திர பத்திரிகா 40
கான்ஸர் நோய் . . . . ப்ரஜாமதம் 43
காந்திக் கிழவி . . . . பாரதவர்ஷ 46
பதவிக் கலகம் 50
ஜாலம் செய்யும் எதிரொலி . . . . பாரதி 59
தேவநாகரியே அரபியின் மூலம் . . . . போரம் 63
முதல் இந்திய சேனதிபதி 65
வேதத்தில் நெசவு 76

விசேஷப் பகுதிகள்

க்விஸ் 14
பிழையைத் திருத்துங்கள் 25
பரமஹம்ஸர் : வாழ்வும் வாக்கும் 48
பாபுராவ் பதில் சொல்கிறார் 55
குழந்தைகள் குறும்பு 57
கார்ட்டூன் கதம்பம் 68
சிறுகதை : குதிரைப் பந்தயம் . . . . ஜான் ஹாப்ஸ் 71
புத்தகச் சுருக்கம் : தாய்மையும்
குழந்தை வளர்ப்பும் . . . . பார்வதி ஸ்ரீநிவாசன் 77

அணா 6

திரட்டிய சுவை

எத்தனை பாஷைகளில் அழகழகான எத்தனை பத்தி-
கள்! (அட்டைப்படம்.) இத்தனையிலிருந்தும் மி-
சாரமான விஷயங்களைத் திரட்டித் தரும் 'மஞ்சரி' முழு-
சுவைநிரம்பி யிருப்பதில் என்ன ஆச்சரியம்!

நமக்குச் சுதந்தரம் தேடித் தந்த அரிய ஸ்தாபன-
'காங்கிரஸ் அமைப்பு' (பக்- 1) இன்று உருவாகியி-
நிலையை அனைவரும் அறியவேண்டும்; உங்கள் குணச்-
புக்களை அறிய 'மூக்கைக் கவனியுங்கள்' (பக்-26); இந்-
கீத விழாக்களிலே 'தியாகையர் வம்சம்' (பக்- 40-
நினைவுக்குரியது; எல்லாத் தாய்மாரும் கண்டிப்பாய்ப் -
தறிய வேண்டிய அரிய புத்தகச் சுருக்கம் 'தாய்மை-
குழந்தை வளர்ப்பும்' (பக் - 77).

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்	கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி	குமுதினி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	கி. சாவித்திரி அம்மா-
சீதா தேவி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை, 4. பிர-
மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. -
சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தா-
தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்பு-
விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணை-
குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளு-
கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

காங்கிரஸ் அமைப்பு

டாக்டர் என். வி. ராஜகுமார்

தியிலிருந்து தேசியத்தை
வளர்த்து வரும் ஸ்தாப
காங்கிரஸ் ஒன்றுதான். எப்
துமே அந்நிய நாட்டு ஆதிக்
ச அது தீவிரமாக எதிர்த்து
க்கிறது. காந்திஜி அரசியலில்
வதற்கு முன் காங்கிரஸ்
படிப்பாளிகளின் கூட்ட
வ இருந்தது; ஆனால் அவர்
ம ஏற்றதும் அது பொது
ளின் ஸ்தாபனமாக மாறிவிட்
பிறகு காங்கிரஸில் நடந்த
யமெல்லாம் எல்லோருக்கும்
ந்ததே.

ீப காலம் வரை 18 வயதுக்கு
ட்ட எவரும் காங்கிரஸில்
முடிந்தது. வருஷ சந்தா
ை கட்டிவிட வேண்டியது;
மும் அமைதியுமான முறை
யராஜ்யம் அடையப் பாடுபடு
ன்' என்ற காங்கிரஸ் நிபந்த
அடங்கி நடப்பதாக எழுதிக்
டுக்க வேண்டியது - அவ்வளவு
. காங்கிரஸ் அங்கத்தினர்
ன் தொகை நாளுக்கு நாள்
க்கொண்டே வருகிறது.
து வருஷத்துக்கு முன் 6½ லட்ச
இருந்தது இப்போது 55 லட்ச
ட்டது. அதன் பலம்
இதோடு நின்று விடவில்லை. அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளாமல் இன்னும் எத்தனையோ காங்கிரஸ்வாதிகள் இருக்கிறார்கள். சாதாரண அங்கத்தினர்களைப் போலவே இவர்களுக்கும் காங்கிரஸிடம் விசுவாசம் உண்டு. தேர்தல் சமயங்களில் 'காங்கிரஸ்' என்றால் போதும்; இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு 'வோட்' போடுவார்கள். சென்ற சில வருஷங்களாக நகரசபை, சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் ஈடுபட்டிருக்கிறது. அப்போதெல்லாம் இவர்கள்தாம் மறைவாக இருந்து காங்கிரஸைத் தூக்கி விட்டிருக்கிறார்கள். மற்றக் கட்சிகளுக்கும்

சுதந்தரம் அடைந்த பின்பு காங்கிரஸ் மகாசபை முதல் முதலாகச் சில நாளைக்கு முன்தான் கூடியது. அதன் சிறப்புக்களை நேரில் கண்டவரெல்லாம் பத்தி பத்தியாக வர்ணிக்கிறார்கள். இவ்வளவு மகிமை வாய்ந்த காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பழைய அமைப்பையும் புதிய மாறுதலையும் சுருங்க அழகாக விளக்கும் இந்தக் கட்டுரையாளர் அ. இ. கா. க. அயல் நாட்டிலாகாவின் காரியதரிசி.

காப்பிரைட்: ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 19-12-'48),
53, ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை.

காங்கிரஸுக்கும் இதுதான் வித்தியாசம்!

கிராமக் கமிட்டியிலிருந்து தொடங்கி வட்டாரம், நகரம், தாலூகா, தாணு, மண்டலம், தாசீல், ஜில்லா இப்படிப் படிப்படியாகப் போய் மாகாணக் கமிட்டியில் முடிகிறது; இதுதான் காங்கிரஸ் அமைப்பு முறை.

அங்கத்தினர்களைப் பாஷாவாரியாகப் பிரித்திருக்கிறார்கள்; இதன்படி மொத்தம் 20 மாகாணங்கள் ஆகின்றன. ஒவ்வொன்றிலும் நகரத் தொகுதி, கிராமத் தொகுதி என்று இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். வருஷந்தோறும் நடக்கும் காங்கிரஸ் மகாசபைக்கு இவற்றிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களெல்லாம் சேர்ந்து மாகாணக் கமிட்டி அமைக்கிறார்கள். காங்கிரஸ் அமைப்பு முறை குலையாமல், எல்லாக் காங்கிரஸ்வாதிகளையும் சட்டுப்படுத்தும்படி விதிகள் வகுக்க அதற்கு உரிமை உண்டு. இதில் எட்டில் ஒரு பங்கு பேரை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்கு அடுத்த வருஷம் நடக்கும் அக்கிராசனர் தேர்தலில் இந்த அ. இ. கா. கமிட்டியார் கலந்து கொள்வார்கள்.

அ. இ. கா. கமிட்டியில் மாகாணப் பிரதிநிதிகளும் அக்கிராசனரும் பொக்கிஷதாரரும் இருப்பார்கள். இப்போதுள்ள அ. இ. கா. கமிட்டியில் 384 பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் நடக்க வேண்டிய அலுவல்களைக் குறித்துத் திட்டம் போட வேண்டியது இவர்கள் பொறுப்பு; இடையில் ஏதாவது விசேஷம் நேர்ந்தாலும் அதைக் கவனிக்க வேண்டும். மாகாணக் கமிட்டி மாதிரி அ. இ. கா. கமிட்டிக்கும் விதிகள் வகுக்கும் உரிமை உண்டு. இது சில மாதங்களுக்கு ஒரு முறை கூடும். ஏதாவது முக்கியமான விஷயத்தைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியிருந்தால் தான் இப்படிக் கூடும்.

ஆனாலும் உண்மையில் காரியக் கமிட்டிதான் எல்லாவற்றையும் நடத்துகிறது. இந்த வழக்கம் வெகு நாளாக இருந்து வருகிறது. காங்கிரஸ் அக்கிராசனரும் 14 அங்கத்தினர்களும் கொண்டது இந்தக் கமிட்டி. 1934 வரை இவர்களை அ. இ. கா. கமிட்டிதான் தேர்ந்தெடுத்து வந்தது. பின்னால் காங்கிரஸ் அமைப்பு விதிகளை மாற்றிய போது அக்கிராசனரே இவர்களை நியமிக்கலாம் என்று ஏற்பட்டது. காரியக் கமிட்டி அமைப்பை ஒரு விதத்தில் சோவியத் அரசியல் சபைக்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு வருஷமும் இது மாறியாக வேண்டும் என்பதில்லை. சென்ற சில வருஷங்களாகக் காங்கிரஸ் அக்கிராசனர்கள் மீண்டும் மீண்டும் பழைய அங்கத்தினர்களையே நியமனம் செய்து வந்திருக்கிறார்கள். பொதுவாக, பழுத்த காங்கிரஸ் தலைவர்களே இப்படி அங்கத்தினராக இருந்து வருகிறார்கள். ஏதோ சில பேரைத்தான் எப்போதாவது புதிதாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

விதிகள் வகுப்பதோடு காங்கிரஸ்காரர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லவும், மற்றக் காங்கிரஸ் கமிட்டிகளை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் காரியக் கமிட்டிக்கு உரிமை உண்டு. தனிப்பட்ட அங்கத்தினர்

களோ, ஒரு மாகாணக் கமிட்டியோ முறைதவறி நடந்துகொண்டால் அவர்கள மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் காரியக் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு. இந்த விஷயத்தில் அ. இ. கா. கமிட்டிக்கும் வருஷந்தோறும் கூடும் காங்கிரஸுக்கும் காரியக் கமிட்டி தகுந்த பதில் சொல்லியே ஆகவேண்டும்; இருந்தாலும் இந்தச் சிறு கமிட்டிதான் எல்லாவற்றையும் ஆட்டிவைக்கிறது; காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கே இது அச்சாணிபோல் விளங்குகிறது. முக்கியமான விஷயமாயிருந்தால் இந்தக் கமிட்டிதான் முதலில் அதைப்பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வரும். அதற்கு அடுத்த காங்கிரஸ் மகாசபையில் அ. இ. கா. கமிட்டி இதை ஆமோதிப்பது வழக்கம்.

சாதாரணமாக, வருஷத்துக்கு ஒரு முறை காங்கிரஸ் மகாசபை கூடும்; நடு நடுவே சட்ட மறுப்பு மாதிரி ஏதாவது இயக்கம் நடக்கும் பட்சத்தில் இதற்குத் தடை நேரலாம். இந்த வருஷாந்தரக் கூட்டத்தில் காங்கிரஸ் கொள்கையைப் பொதுவாக நிர்ணயிப்பார்கள். அப்போது அ. இ. கா. கமிட்டி கொண்டுவரும் தீர்மானங்களை ஓட்டுக்கு விடுவார்கள். இந்தச் சமயத்தில் அ. இ. கா. கமிட்டியே விஷயாலோசனைக் கமிட்டியாக இருந்து காரியம் நடத்தும். இப்படிக் கூடுவதற்குமுன் உள்ளே விவாதம் பலமாக இருக்கும்; பின்னால் கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டு வரும்போது விவாதம் அப்படி அதிகமாக இராது. இதனால்தான் அ. இ. கா. கமிட்டி கொண்டு வரும் தீர்மானங்கள் தோற்றுப் போவதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் காந்திஜிக்கும் காங்கிரஸுக்குமுள்ள உறவைப்பற்றிக் குறிப்பிடவேண்டியது அவசியம். ஜவாஹர்லால் சொன்னபடி, "மகாத்மாதான் காங்கிரஸின் நிரந்தரத் தலைவர்." காங்கிரஸ் அக்கிராசன பீடத்தின் பின்னால் இருந்துகொண்டு இயக்கும் சக்தி அவருக்குத்தான் உண்டு. காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் அடிக்கடி அவரைக் கலந்துகொண்டுதான் ஏதாவது செய்வார்கள்; அவரும் இந்தக் கூட்டங்களுக்குத் தவறாமல் வந்துகொண்டிருப்பார். முக்கியமான சமயங்களில் தாமே ஆஜராகி அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்திலும் காங்கிரஸ் வருஷாந்தரக் கூட்டங்களிலும் தீவிரமாகக் கலந்துகொண்டு உழைப்பார். அப்போதெல்லாம் அவர் சொன்னபடிதான் காங்கிரஸ் நடக்கும். நாலணா அங்கத்தினராகக்கூட இராத மகாத்மாவை, எத்தனையோ தரம் சத்தியாக்கிரக இயக்கம் நடத்திவைக்கும்படி காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருக்கிறது என்றால் பாருங்களேன்! அவரை எல்லாரும் இப்படிக் கொண்டாடினதில் ஓர் ஆச்சரியமும் இல்லை; இன்று காங்கிரஸ் இவ்வளவு பெரிய ஸ்தாபனமாயிருப்பதற்கு அவர்தாமே காரணம்? "பொது ஜனங்களுக்கு அவர்மேல் அன்பு; அதனால்தான் காங்கிரஸிலும் அவருக்கு அவ்வளவு செல்வாக்கு" என்று சொல்லியிருக்கிறார் ஜவாஹர்லால். இன்றும் காந்திஜியின் ஆத்மாவே காங்கிரஸை இயக்கும் சக்தியாக இருந்து வருகிறது.

ஆசியாவிலேயே பிரசார பலத்தில் முன்னணியில் நிற்கும் ஸ்தாபனம் ஒன்று உண்டென்றால்,

அது காங்கிரஸ்தான். பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டுமென்றிச் சமஸ்தானங்களிலும் அது அபாரமான வேலை செய்திருக்கிறது. ஜோராக ஈடுபடாவிட்டாலும் சமஸ்தானக் காங்கிரஸ்களுக்கும் பிரஜாமண்டலங்களுக்கும் பக்கபலமாக இருந்திருக்கிறது. இப்போது இந்தியா முழுதும் எத்தனை குட்டிக் காங்கிரஸ் கமிட்டிகள் இருக்கின்றன தெரியுமா? காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத் திறமையைச் சட்டசபைத் தேர்தல், நகரசபைத் தேர்தல் சமயங்களில் பார்க்கவேண்டும்! காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஒரு தொகுதி பாக்கியில்லாமல் வேலை செய்வார்கள். பிரசாரத்திலும் சரி, விளம்பர விஷயத்திலும் சரி, காங்கிரஸ் அதிருஷ்டசாலி; தேசியத்தை ஆதரிக்கும் பத்திரிகைகளெல்லாம் காங்கிரஸை எப்போதுமே விட்டுக்கொடுத்ததில்லை; அதன் கஷ்டதசையில்கூட நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் காங்கிரஸ் செய்தி பரவப் பத்திரிகைகள் அரும்பாடுபட்டிருக்கின்றன. ஆனாலும் காங்கிரஸின் உயர்ந்த கொள்கைகளும் கிராமங்களில் காங்கிரஸ்காரர் செய்து வந்த தொண்டுமே அதன் மேல் பொதுஜனங்களுக்கு மதிப்பு ஏற்படுவதற்கு முக்கியமான காரணம்.

காங்கிரஸ் கோரிக்கை பூர்த்தியாகிவிட்டது; 'ஐக்கிய இந்தியா' என்ற லட்சியம் குலைந்தாலும் நமக்குச் சுதந்தரம் கிடைத்துவிட்டது. ஆனல் புதிய தொல்லைகள் ஏற்பட்டுவிட்டன. அவற்றைக் காங்கிரஸ் சமாளித்தாகவேண்டும். இத்தனை நாள் அது கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தது; இப்போதோ பலவிதமான ஆக்க வேலைகளில் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது.

சமீபத்தில் பம்பாயில் கூடிய அ. இ. கா. கமிட்டி, காங்கிரஸின் புதிய அமைப்பு முறையை அங்கீகரித்தது; இனிமேல் காங்கிரஸ் கட்சி என்பது ஒரு தனி அரசியல் கட்சி. சுதந்தரம் கிடைத்ததும் இப்படி ஆவது சகஜந்தான். எப்படியோ ஒரு விதமாகப் பொதுஜனத் தொண்டு புரியவேண்டும்; இதுதான் காங்கிரஸின் நோக்கம். ஆகவே, இப்போதைய சூழ்நிலைக்குத் தகுந்தபடி அமைப்பு முறையையும் திட்டங்களையும் மாற்றிக்கொண்டிருக்கிறது. "இந்தியா சுபிட்சமாக இருக்கவேண்டும். சட்ட வரம்புக்குட்பட்டு அமைதியான முறையில் முன்னேற வேண்டும். எல்லாருக்கும் சம சந்தர்ப்பமும், அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளும் கிடைக்க வேண்டும். பரஸ்பர ஒத்துழைப்போடு பொது நலத்தை விரும்பும் நாடாக இந்தியா விளங்கவேண்டும். உலக சமாதானமும் நல்லுறவும் நீடிக்கப் பாடுபடவேண்டும்." — காங்கிரஸின் அடிப்படையான கொள்கைகளில் இது ஒரு முக்கியமான மாறுதல்.

புதிய அமைப்பின்படி காங்கிரஸ் அங்கத்தினர்களில் மூன்று வகை உண்டு.

(1) ஆரம்ப அங்கத்தினர்: 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும். காங்கிரஸ் கொள்கையில் தங்களுக்கு நம்பிக்கை உண்டு என்பதை எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ளவேண்டும். அரசாங்க வாக்காளர் ஜாபிதாவில் இருக்கும் எந்த வாக்காளரும் இப்படிச் சேரமுடியும்.

(2) தகுதி பெற்ற அங்கத்தினர்: தொடர்ந்து இரண்டு வருஷ கால மாவது ஆரம்ப அங்கத்தினராக இருந்திருக்கவேண்டும். எப்போதும் (உத்தரவாதமுள்ள) சுத்தமான கதரையே உடுத்துபவர்களாக இருக்கவேண்டும். எந்த விதமான லாகிரிப் பழக்கமும் இருக்கக் கூடாது. வகுப்பு ஒற்றுமையை வளர்ப்பதில் நம்பிக்கை இருக்க வேண்டும். வருஷ சந்தா ரூ. 1 செலுத்தவேண்டும். வேறு எந்த அரசியல் கட்சியிலும் ஸ்தானம் வகிக்கக்கூடாது; இதுதான் எல்லா வற்றையும் விட முக்கியம். அப்போதுதானே காங்கிரஸ் தனி அரசியல் கட்சியாக இயங்க முடியும்?

(3) தீவிர அங்கத்தினர்: குறைந்தபட்சம் ஒரு வருஷமாவது தகுதி பெற்ற அங்கத்தினராக இருப் பவர்கள் தீவிர அங்கத்தினராக லாம். இவர்கள் தவருமல் தேசீய அலுவல்களிலோ நிர்மாண வேலை களிலோ ஈடுபடவேண்டும். இதை ஜில்லாக் கமிட்டி ஆமோதித்து மாகாணக் கமிட்டிக்குத் தகவல் அனுப்ப வேண்டும். மாகாணக் கமிட்டியாரிடம் இந்த மாதிரி அங்கத்தினரின் ஜாபிதா ஒன்று இருக்கும்.

புதிய அமைப்பில் குட்டிக் கமிட்டிகளுக்கு, 'ஆரம்பக் காங்கிரஸ் பஞ்சாயத்து' என்று பெயரிட்டிருக் கிருர்கள். தகுதி பெற்ற அங்கத் தினர்கள்தாம் இந்தப் பஞ்சா யத்துத் தேர்தலில் கலந்துகொள்ள முடியும். தீவிர அங்கத்தினர் களுக்கு உயர்தரக் கமிட்டியில் சேர உரிமை உண்டு.

இன்னும் சில விசேஷ அம் சங்கள்: (1) காங்கிரஸ் கொள் கையை ஆதரிக்கும் வேறு எந்த ஸ்தாபனமா யிருந்தாலும் இதில் சேர முடியும்; அ. இ. கா. கமிட்டி யில் அவைகளுக்குப் பிரதிநிதித்து வம் உண்டு. (2) மூன்று வருஷத் துக்கு ஒரு முறை தேர்தல் நடக் கும். (3) 6 அங்கத்தினர் கொண்ட மத்திய பார்லிமெண்டரி போர்டு ஒன்று சட்டசபை சம்பந்தமான அலுவல்களை மேற்பார்வையிடும். இந்த 6 பேரோடு அ. இ. கா. கமிட்டியில் இருக்கும் 5 அங்கத் தினர் சேர்ந்து அபேட்சகர்களை நியமனம் செய்வார்கள்; இந்தக் கமிட்டிக்கு மத்தியத் தேர்தல் கமிட்டி என்று பெயர். (4) இனி மேல் சமஸ்தானங்களில் காங்கிரஸ் கோர்முகமாகக் காரியத்தில் ஈடுபடும். (5) முன்னே இருந்த கமிட்டி களுக்குள் சரியானபடி தொடர்பு இல்லை; இனி அப்படி இராது.

கட்டுப்பாடாகவும் கோவையாக வும் காங்கிரஸ் ஸ்தாபனம் நடக்க வேண்டும் என்றுதான் இப்படி அமைப்பு முறையை மாற்றி யிருக்கிருர்கள்.

படை எதற்கு?

பேராசை இல்லாவிட்டால், படை திரட்டத் தேவையில்லை.

—மகாத்மா காந்தி.

வெள்ளை மாளிகை

பூலோக சொர்க்கமென்றால் இப்போது அமெரிக்கா தேசத்தைத்தான் சொல்ல வேண்டும். பணத்தாலும் போக வஸ்துக்களாலும் நிரம்பின நாடு அது. அந்த நாட்டின் தலைவர் வாழும் அரண்மனை எப்படி இருக்கும்? இந்திரனுடைய மாளிகையைப் போலத்தான் இருக்குமென்று தோன்றும். மகாராஜாக்களின் அரண்மனையைப் போல எல்லாவிதமான சௌகரியங்களும் குறைவின்றி இருக்குமென்றே நினைக்கத் தோன்றும்.

உண்மை என்ன தெரியுமோ? பழங்காலம் முதல் அந்த ‘வெள்ளை மாளிகை’ - அதுதான் அமெரிக்க ஜனாதிபதியின் உறைவிடம் - தலைவருடைய ஜாகையாக இருந்து வருகிறது. நவீன வசதிகளெல்லாம் அமைய வேண்டுமானால், இந்தக் காலத்துக்கு ஏற்றபடி ‘பிளான்’ போட வேண்டும். பழைய காலத்து மாளிகையில் எந்த அளவுக்குப் புதுமையைக் கொண்டுவர முடியுமோ அந்த அளவில்தான் முடியும். ஆகவே, ஜனாதிபதியின் மனைவிக்கு ‘வெள்ளை மாளிகை’ பிடிப்பதே இல்லை.

“மிஸௌரியில் உள்ள எங்கள் வீடு எவ்வளவோ உசத்தி” என்றுதான் ஹாரி ட்ரூமனின் மனைவி இன்று சொல்கிறாள். ட்ரூமன் வெறும் ஸெனடராக இருந்தபோது வாஷிங்டனில் ஒரு வீட்டில் இருந்தார். அதுகூட எவ்வளவோ தேவலையென்று அவளுக்குத் தோன்றுவது ஆச்சரியமே இல்லை.

வாஷிங்டனில், பென்ஸில்வேனியா அவென்யூவில் 1600-ஆம் எண் உள்ள வீடுதான் ‘வெள்ளை மாளிகை’. ஜார்ஜ் வாஷிங்டனைத் தவிர மற்ற எல்லா ஜனாதிபதிகளும் இந்த வெள்ளை மாளிகையில் இருந்திருக்கிறார்கள்.

அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளினில் ட்யூக் ஆப் லீன்ஸ்டருக்குச் சொந்தமான அரண்மனையை மாதிரியாகக் கொண்டு காப்டன் ஜேம்ஸ் ஹோபன் என்பவர் ‘பிளான்’ போட்டார். அதன்படி இந்த மாளிகையைக் கட்டினார்கள். இதைக் கட்டின காலத்தில் இப்போதைப் போன்ற பண நடமாட்டம் இல்லை. பிளான் தயாரித்தவருக்கு ஐந்நூறு டாலர் கொடுத்துவிட்டு, மேலே கட்டிடத்துக்குக் கல்லும் சுண்ணாம்பும் வாங்கப் பணம் இல்லாமல் விழித்தார்கள். ஊரிலிருந்த வியாபாரிகள் கூடக் கவர்ன்மெண்டுக்குக் கடன் கொடுக்கத் தயங்கினார்கள்.

இந்த மாளிகையில் பிரிட்டிஷ் சைன்யம் தீ வைத்தது. அதனால்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ருமன் தோற்றிருந்தால், இந்த வெள்ளை மாளிகை ஜாகையை ஜனவரி 20-ஆம் தேதி காலி செய்யவேண்டியிருக்கும். வென்ற அவருக்கு இன்னும் நாலு வருஷம் அந்தக் கவலை இல்லை. இந்தக் கட்டுரை லண்டன் ‘இல்லஸ்டிரேடெட்’ பத்திரிகை தரும் விவரங்களை ஆதாரமாகக் கொண்டது.

புகைபடிந்து பாழான இடத்தைச் சரிப்படுத்தி 1814-ஆம் வருஷம் வெள்ளைப் பெயிண்ட் அடித்தார்கள். அது முதல் இதற்கு வெள்ளை மாளிகை என்ற பெயரையே ஜனங்கள் வழங்கி வந்தார்கள்; 1903-ஆம் வருஷம் முதல்தான் வெள்ளை மாளிகை என்ற பெயர் அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெற்றது.

148 வருஷங்களாக அமெரிக்க ஜனங்களின் சொத்தாக இருக்கிறது இந்த மாளிகை. இதை வந்து பார்க்கும் உரிமை யாவருக்கும் உண்டு. வெளியூர்களிலிருந்து வாஷிங்டனுக்கு வரும் போதெல்லாம் இதை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்ப்பதோடு, படங்களும் எடுத்துப் போவார்கள். அமெரிக்கத் தலைவருக்குத்தான் இது சொந்தம் என்று எப்படிச் சொல்லலாம்? அவர் வாடகையா கொடுக்கிறார்?

1829-ஆம் வருஷம் ஆண்ட்ரூ ஜாக்ஸன் தலைவராக இங்கே கிருஹப்பிரவேசம் நடத்தியபோது, 20,000 பேர்கள் அதிதிகளாக வந்திருந்தார்கள். அவர்கள் மனம் போனபடி யெல்லாம் உலாவிக் கூத்தடித்தார்கள்; குடித்து மகிழ்ந்தார்கள்; விருந்துண்டார்கள். அப்புறம் அவர்கள் போட்ட குப்பையை அள்ளி யெறிந்து மனிதர் நடமாடும்படி செய்ய ஒரு வாரகாலம் பிடித்தது! அமெரிக்க ஜனநாயகம்! நாற்காலிகளின் உறையிலே தடவியிருந்த பாலாடையையும் விரிப்புக்களில் இருந்த மண்ணையும் சுத்தப் படுத்த வேண்டியிருந்தது.

இந்த அற்புதமான மாளிகையின் மேல்சிறகில் ஜனாதிபதி ஆபீஸை நடத்துகிறார். அவ்வப்போது இந்தப் பகுதியை விஸ்தரித்துக்கொண்டேயிருக்கிறார்கள். இந்த இடத்தில் ஜனாதிபதி வருகிறவர்களுக்குப் பேட்டி அளிக்கிறார். வாரத்துக்கு இரண்டு தடவை பத்திரிகைக்காரர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

இப்போதெல்லாம் அமெரிக்க ஜனாதிபதிக்கு வேலை செட்டி வாங்குகிறது. முன்னே சுகமாகச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ரோட்டு வழியே போகிறவர் வருகிறவர்களைப் பார்த்தபடி காலத்தைக் கழித்தவர்களும் உண்டு.

அமெரிக்காவின் தலைநகரம் வாஷிங்டன். மேரிலாண்டும், வர்ஜீனியாவும் தங்கள் தங்கள் பிரதேசத்தில் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்து உதவின. ஏறக்குறைய நூறு சதுரமைல் உள்ள அந்தப் பிரதேசத்துக்குத் தம் பெயரை அளித்தார் ஜார்ஜ் வாஷிங்டன். அமெரிக்க நாட்டின் தலைநகராக அது விளங்குகிறது. ஒரு காலத்தில் 10,000 பேரே அங்கே வசித்தார்கள். இப்போதோ பத்து லட்சத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களில் லட்சம் பேர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள். ஐந்நூற்று மூன்று பேர்கள் ஜனாதிபதியின் வேலையில் நேரடியாக உதவி செய்கிறவர்கள். அவர்கள் ஜனாதிபதியின் பார்வைக்குச் செல்லவேண்டிய காகிதங்களை ஒழுங்கு படுத்தி வைக்கிறார்கள். காலை 8 மணிக்கே தலைவர் வேலை பார்க்கத் தொடங்கிவிடுகிறார்.

ஜனாதிபதி சர்ச்சுக்குப் போகும் போது ரகசியப் பாதுகாவலராக நாலைந்து பேர்கள் செல்வார்கள். எந்தச் சமயத்திலும் எடுத்துச் சுடும் படியாகத் துப்பாக்கிகளை வைத்திருப்பார்கள். அவருக்கு வரும் தபால்களை ஜாக்கிரதையாகச் சோதிப்பார்கள். பார்ஸலில் ஏதாவது அபாயச்சரக்கு இருக்கக்கூடுமல்லவா? தினந்தோறும் ஜனாதிபதிக்கு

வரும் தபால்களைக் கவனிப்பதே ஒரு பெரிய காரியம். சில சமயங்களில் ஒரு வாரத்தில் லட்சம் தபால்கள் வருகின்றன. போன வருஷம் 18,95,066 தபால்களை இருபது உத்தியோகஸ்தர்கள் 'பைசல்' செய்தார்கள். ஸ்டாம்புகளை ஜாக்கிரதையாக எடுத்து அதைச் சேகரிப்போருக்கு அனுப்பிவிட்டார்கள்.

"இன்றைக்கு எவ்வளவு தபால்கள் வந்திருக்கின்றன?" என்று ஜனாதிபதி கேட்டால் ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டிருக்க முடியுமா? கார்டு கவர்களை அடுக்கி நாடாவினால் அளந்து, அதைக் கொண்டு கணக்கிட்டுச் சொல்லி விடுவார்கள். முக்கியமான பத்துப் பதினைந்து கடிதம் மட்டும் அவர் பார்வைக்குப் போகும்.

ஜனாதிபதியின் சம்பளம் வருஷத்துக்கு 75,000 டாலர். இதல்லாமல் செலவுக்காக 20,000 டாலர் கொடுக்கிறார்கள். இதைக்கொண்டு பிரமாதமான விருந்துகளை ஜனாதிபதி நடத்த முடியாது. செட்டாகவே செலவழித்தால்தான் முடியும்.

ஜனாதிபதி அமரும் ஆசனத்தில் அவர் பெயர் பொறித்த தகடு இருக்கும். தலைமைப் பதவியை விட்டு விட்டுப் போகும்போது, இந்த ஆசனங்களை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகலாம். ட்ரூமனுக்கு இன்னும் நாலு வருஷங்களுக்கு அந்த விசாரமே வேண்டாம். வெள்ளை மாளிகை வாசியாக அவர் இன்னும் நாலு வருஷங்கள் இருக்கப் போகிறார்.

க்விஸ்

டப்ளின் நகரில் ஒரு நாடகக் கொட்டகை மானேஜரான டேலி என்பவருக்கும் அவர் நண்பருக்கும் ஒரு நாள் ஒரு பந்தயம். "அர்த்தமேயில்லாத எந்தப் புது வார்த்தையை வேண்டுமானாலும் நான் இருபத்து நாலுமணி நேரத்துக்குள் சகல ஜனங்களும் புழங்கச் செய்கிறேன்" என்று டேலி கூறினார். **க்விஸ்** என்று ஒரு புதிய வார்த்தையைச் சொன்னார் நண்பர்.

கொட்டகை மானேஜர் ஏராளமாய்ச் சாக்கட்டிகள் தயாரித்தார். ஆட்களைப் பிடித்தார். இரவோடு இரவாக நகரின் சுவர்கள், மூலை முடுக்குகள் அனைத்திலும் 'க்விஸ்', 'க்விஸ்' என்று எழுதச் செய்துவிட்டார்.

மறுநாள் காலையில் விழித்த சகல மக்கள் கண்ணிலும் இந்த மாயாவி வார்த்தை தென்பட்டது. 'ஏதோ கொள்ளைக் கூட்டம் வருகிறது!', 'குட்டிச் சாத்தான் லீலை!' என்றெல்லாம் ஜனங்கள் மிரண்டார்கள். யாருக்கும் என்ன என்றே புரியவில்லை. நகரெங்கும் இதே பேச்சாயிற்று. நாடகக் கொட்டகையின் மானேஜர் பந்தயத்தில் ஜயித்தார்.

'இது என்ன?' என்ற பொருள் கொண்ட வார்த்தையாக ஆங்கில அகராதியில் 'க்விஸ்' ஏறிவிட்டது.

சொர்க்கம், நரகம் இவற்றின் வாசலிலே நடக்கிறது இந்தக் காட்சி. கட்டுக் கதைதான்; ஆனால், ரஸமான அரசியல் மதிப்பு.

பலி ஆடு

எஸ். பார்த்தசாரதி

ஒரு நாள் மாலை, கடவுளுக்கும் சைத்தானுக்கும் போதே போகவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் திருமாளிகையின் வாசலில் நின்றபடியே வழியில் போகிறவர் வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். இருவர் இருப்பிடங்களும் எதிரும் புதிருமாக இருந்தன. ரோட்டில் யாரும் போகவே இல்லை. ஜீவர்களின் வாசனையே இல்லாமல் இருந்தது. ஆகவே சிறிது நேரம் கழித்துச் சைத்தான் கடவுளைப் பார்த்து, "பயங்கர மௌனமாக இல்லையா?" என்று கேட்டான். கடவுள் இதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை; தலையை மட்டும் ஆம் என்பவரைப் போல அசைத்தார். "போது போக ஒரு காரியம் செய்தால் என்ன? நம் இருவர் இல்லங்களின் விலாசங்களையும் மாற்றிக் கொள்ளலாமே. உங்கள் வீட்டுக்கு நரகம் என்றும் என் வீட்டுக்குச் சொர்க்கம் என்றும் பெயரை மாற்றிப் போட்டுவிடலாம். அப்படிப் போட்டுவிட்டு யமனைக் கூப்பிட்டு ஆயுசு முடியும் தருணத்தில் உள்ள சில பேர்வழிகளைப் பூமியிலிருந்து இங்கே அனுப்பச் சொல்லலாம். அவர்கள் இங்கே வரும்போது நம் மாளிகைக்கதவுகளை அகலத் திறந்துவிட்டு உள்ளே உள்ளவற்றை அவர்கள் கண்களிலே நன்றாகப் படும்படி செய்யலாம். பிறகு அவர்கள் உள்ளே நுழைவதற்குத் தகுதியுடையவர்களா என்பதை விசாரிக்கலாம். இது கொஞ்சம் வேடிக்கையாக இருக்கும். என்ன சொல்கிறீர்கள்?" என்று சைத்தான் கேட்டான். கடவுள் அசுவாரசியமாக, "பேஷாகச் செய்யலாம்" என்றார்.

உடனே யமனுக்கு ஆளனுப்பி வருவித்து விஷயத்தைச் சொல்லி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ரோட்டின் குறுக்கே இரண்டு ஆசனங்களைப் போட்டு, கடவுளும் சைத்தானும் அமர்ந்தார்கள். பூலோகத்திலிருந்து வரும் மனிதர்களைப் பார்த்துப் பேசச் சௌகரியமாக இரண்டு மாளிகைக்கும் எதிரில் ரோட்டின் நடுவில் அந்த ஆசனங்கள் இருந்தன. சிறிது நேரத்தில் பூலோகத்திலிருந்து சில பேர் வந்தார்கள். கொழு கொழு வென்ற தேகமும் வர்ணத்தலைப்பாகையுமாய் ஒருவன் அந்தக் கூட்டத்தின் முதலில் இருந்தான். வந்த மனிதர்கள் தலையை நீட்டி நீட்டி இரண்டு மாளிகைகளுக்குள்ளேயும் என்ன இருக்கின்றன என்று பார்த்தார்கள். 'நரகம்' என்ற விலாசமுள்ள மாளிகைக்குள்ளே போக போக்கியத்துக்குள்ள பொருள்களும் பிரகாசமும் இருந்தன. சொர்க்கம் என்ற பேரைக்

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 11-12-'48), சென்னை.

கொண்ட மற்றொரு மாளிகையில் மரணத்தையும் இருட்டையும் கண்டார்கள். அவர்கள் திகைப்பிரமை அடைந்து நின்று விட்டார்கள். சைத்தான் அவர்களின் மௌனத்தைக் கலைத்து, முதலில் நின்ற கொழுத்த உடம்புள்ள மனிதனைப் பார்த்து, "இரண்டு மாளிகைகளும் திறந்திருப்பதைப் பார்த்தாயே; நீ எதற்குள்ளே போக விரும்புகிறாய்?" என்று கேட்டான். அந்தக் கொழுகொழுப் பேர்வழி, "சொர்க்கத்துக்குள்ளே தான்... சே, சே, தவறிச் சொல்லிவிட்டேன்... நரகம், நரகத்துக்குள்ளே" என்றான்.

"நரகத்துக்குப் போகும்படி நீ என்ன காரியங்களைச் செய்திருக்கிறாய்?" என்று சைத்தான் கேட்டான்.

அந்த மனிதன் இப்போது சமாளித்துக்கொண்டான். "சாமி, திரும்பிப் போய் இன்னும் சில வருஷங்கள் இருந்துவிட்டு வரத் திருவுள்ளம் கொள்ளுவீர்களா? பல காரியங்களை அரைகுறையாக விட்டு வந்திருக்கிறேன். அவை பூர்த்தியானால் எனக்கு ஏராளமான பணம் கிடைக்கும். என்னைப் போகும்படி அநுமதித்தால் தேவரீருக்கு ஐந்து லக்ஷம் ரூபாய் சமர்ப்பிப்பேன்" என்றான்.

"அந்தமாதிரிக் காரியம் இங்கே நடக்காது" என்று சைத்தான் கோபத்தோடு சொன்னான்.

"அப்படியானால், என் சாமி நீங்களே என்னோடு வந்து சுகமாக இருக்கக்கூடாது? எங்கள் தேசத்தில் முக்கியமான இடங்களிலெல்லாம் எனக்குப் பெரிய பெரிய அரண்மனைகள் இருக்கின்றன. நீங்கள் ஏதாவது ஒரு மாளிகையில் ராஜாவைப் போல இருந்து வரலாம். உங்களுக்கு வேண்டியது எதுவானாலும் கிடைக்கும். இப்போது நீங்கள் இருக்கும் வீட்டைக்காட்டிலும் அது எவ்வளவோ சௌக்கியமாக இருக்குமே!"

சைத்தான் சிரிப்பை அடக்கிக் கொண்டான். "அந்தப் பேச்செல்லாம் இங்கே உதவாது. சரி, சரி. உன்னுடைய நியாயங்களைச் சட்டுப் புட்டென்று சொல்" என்றான்.

அந்தக் கொழுத்த ஆசாமி ஆரம்பித்தான்: "நான் கோடி கோடியாகச் சம்பாதித்திருக்கிறேன். கொள்ளை லாபம், கள்ள மார்க்கெட், ஏமாற்ற வழிகள், மட்டரகச் சரக்குகளைக் கொடுத்து லாபம் சம்பாதிப்பது, வரி கொடுக்காமல் ஏமாற்றுவது, அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பது— இவைகளைப் போலப் பல காரியங்களைச் செய்திருக்கிறேன். தானியங்களை விற்று லாபம் சம்பாதித்தேன். ஜனங்கள் பட்டினி கிடந்து செத்துப்போனாலும் என் லாபத்தை நான் விடமாட்டேன்."

"இவன் உன்னைச் சேர்ந்தவன்" என்று தீர்ப்பளிப்பவரைப் போலக் கடவுள் சைத்தானிடம் சொன்னார்.

அடுத்தபடி நின்றவன் அரசியல்வாதி. அவன் எப்போதும் கொழுத்த ஆசாமியின் கொடுக்கைப் பிடித்துக்கொண்டே நின்றான். சைத்தான் அவனை, "எந்த மாளிகைக்கு எந்தக் காரணங்களைக் கொண்டு போக விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

"என்னை யாரும் ஏழை யென்று தான் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் பணக்காரருக்குரிய சௌகரியங்களனைத்தையும் அநுபவிக்கிறேன்; ஆனால் அவர்களுக்குள்ள தொல்லைகள் எனக்கு இல்லை. இதோ இருக்கிறாரே இவரைப் போன்றவர்கள் எங்களை நன்றாகக் கவனித்துக்

கொள்கிறார்கள். அதற்குப் பதிலாக நாங்கள் சில உபகாரங்களைச் செய்கிறோம். அரசியல்வாதி என்ற முறையில் நானும் என்னைச் சேர்ந்தவர்களும் தெளிவாக ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். எல்லாருக்கும் நல்லவராக மகாத்மா காந்தியைப் போல இருப்பதென்பது எல்லாருக்கும் சாத்தியமான காரியம் அல்ல. ஆகவே நான் வகுப்புக்கும் வகுப்புக்கும் சாதிக்கும் சாதிக்கும் சண்டை மூட்டிவிட்டுப் புதிய கோஷ்டியைக் கிளப்பி அந்தக் கோஷ்டிக்குத் தலைவனாக இருக்க ஏற்பாடு செய்வேன்" என்றான் அரசியல் கட்சிக்காரன்.

"இவனும் உன்னைச் சேர்ந்தவனே" என்றார் கடவுள்.

மூன்றாவது ஆசாமி, ஒரு ராஜாங்க மந்திரி. "நான் எழைக்கும் பணக்காரனுக்கும் கடுமையாக வரி போட்டேன். ஆனால் பணக்காரனிடமிருந்து வரியை அவ்வளவு வற்புறுத்தி வசூல் செய்யாதபடி பார்த்துக் கொண்டேன். உடல் கொழுத்த மனிதனையும் அரசியல்வாதியையும் நான் நம்பியிருக்கிறேன். அவர்களுக்கு வேண்டியதை நான் செய்து கொடுக்கிறேன்" என்றான்.

மறுபடியும் கடவுள், "உன் ஆசாமிதான் இவனும்" என்றார்.

நாலாவது ஆசாமியாக வந்தவன் தொழிலாளர் தலைவன். "தொழிலாளர்களிடமிருந்தும் நான் சம்பாதித்தேன்; முதலாளிகளிடமிருந்தும் பணம் கிடைத்தது. தொழிற்சங்க வரவு செலவில் பொய்க் கணக்கெழுதியும், முதலாளிகளைப் பயமுறுத்தியும் பணம் சம்பாதித்தேன். பணத்தட்டு எனக்கு ஏற்படும் போதெல்லாம் தொழிலாளருக்கும் முதலாளிக்கும் முடிச்சுப் போட்டுக் கலகத்தைக் கிளப்பி லாபம் அடித்ததோடு என் தலைமைப் பதவியையும் காப்பாற்றிக் கொண்டேன்" என்றான்.

"இவனையும் உன் கூட்டத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டியதே" என்று அருளினார் கடவுள்.

அடுத்தபடி கம்யூனிஸ்டு வந்தான். "பாட்டாளி மக்களின் நலத்துக்காக நான் உழைக்கிறேன். என் கட்சிக்காரர்களுக்குச் சொர்க்கத்திலும் நரகத்திலும் நம்பிக்கையில்லை. இங்கே வருகிறவரைக்கும் எனக்குக்கூடத்தான் நம்பிக்கை இல்லை. ஆனால் பூலோகத்தில் சொர்க்கத்தை நிலைநிறுத்துவோம் என்று அலங்காரமாகப் பிரசாரம் செய்திருக்கிறேன். இங்கே வந்து பார்த்தபிறகு, மறுபடியும் போய் ஜனங்களுக்குப் பூலோகத்தில் நரகத்தை நிலைநிறுத்துவதாகச் சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. அந்த லட்சியத்தை அடைவது சுலபமென்றே படுகிறது" என்றான் அவன்.

"சரி, சரி; இவனையும் நீ சேர்த்துக்கொள்" என்று கடவுள் ஆணையிட்டார்.

ஆறாவது பேர்வழியாக ஸோஷலிஸ்டு வந்தான். "எனக்கு முன் வந்த அரசியல்வாதியும் கம்யூனிஸ்டும் கெட்டவர்கள்; பாவிகள். என்னைப் பொறுத்தவரையில், ஜனங்களுக்கு எது நல்லது, அதை அடைய வழி என்ன என்று இன்னும் தெளிவாகவில்லை. எப்படியானாலும் தெய்வசகாயம் இல்லாமல் ஒன்றுமே செய்யமுடியாது." இவ்வாறு சொல்லிவிட்டுக் கடவுளைப் பார்த்து, "ஸோஷலிஸ்டுகள் அதிகாரத்துக்கு வரும்படி தேவரீர்

திருவருள் பாலிக்கவேண்டும். எங்கள் கொள்கைப்படி தவருக இருந்தாலும், நாங்கள் தேவரீருடைய அருளை நினைந்து பாராட்டிப் போற்றுவோம்'' என்ருன்.

"இவன் ஒரு தர்ம சங்கடமான பேர்வழியாக இருக்கிருனே; இவன் உன்னையும் சேர முடியாது; நம்மையும் சேரமுடியாது. என்ன செய்யலாம்?'' என்று கேட்டார் கடவுள். "இப்போதைக்கு நடு ரோட்டிலேயே நிற்கட்டும்'' என்ருன் சைத்தான்.

கருநிறமும் ஆத்திரப் பார்வையும் கறுப்புச் சட்டையும் தாடியுமாக ஏழாவது பேர்வழி, தான் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொண்டு வந்தான்.

"உனக்கு எங்கே போகப் பிரியம்? அங்கே போக உனக்குள்ள தகுதி என்ன?'' என்று சைத்தான் அவனைக் கேட்டான்.

"இதில் சந்தேகம் என்ன? நான் தெய்வத்துக்குக் கொடிய விரோதி. தெய்வம் இருப்பதாகவே நான் நம்பமாட்டேன். அவர் சர்வசக்திமான் என்ற நம்பிக்கை இல்லை. சொர்க்கத்திலும் நம்பிக்கை இல்லை.''— இப்படியே இன்னும் அவன் சொற்பொழிவாற்றிக் கொண்டே போயிருப்பான். நல்ல வேளையாகக் கடவுள் இடைமறித்தார்.

"இப்போது நீ பிரத்தியட்சமாகச் சொர்க்கத்தைப் பார்க்கிருயே; இப்போது என்ன சொல்கிருய்?'' என்று அவர் கேட்டார்.

இது காதில் விழுந்ததோ இல்லையோ அந்த மனிதனுக்குக் கோபம் மூண்டது. கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு, "யாரோ சில பார்ப்பனர்களின் சூழ்ச்சியினுல் என்னை இங்கே கொண்டு வந்திருக்கிருர்கள். என்னைக் கேள்வி கேட்க நீர் யார்? நீர்......'' என்று கத்தினுன்.

கடவுள் இடியைப்போல முழங்கி, "வாயை மூடு'' என்று கட்டளையிட்டார். அந்த மனிதன் உடனே நடு நடுங்கிக் கீழே விழுந்து வேர்வை வெள்ளத்தில் புரண்டான். கடவுள் சைத்தானைப் பார்த்து, "இவனையும் நீயே கொண்டு போ'' என்ருர். "உங்கள் கட்டளைப்படி நடப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று வேண்டா வெறுப்போடு சைத்தான் சொன்னுன்.

கடைசியாக ஒருவன் வந்தான். எலும்புந் தோலுமாக இருந்தான்.

"நீ யாரப்பா?'' என்று கேட்டார் கடவுள்.

"சாமி, நான் சாமான் வாங்குகிற கூட்டத்தைச் சேர்ந்தவன். சாமானிய மனிதன், பள்ளிக்கூட வாத்தியார், குமாஸ்தா, அற்றைக் கூலிக்காரன்'' என்ருன்.

"ஏன் இப்படி இளைத்துப் போயிருக்கிருய்?'' என்ருர் கடவுள்.

"எனக்கு முன்னுலே இங்கே வந்தவர்களால்தான் நான் இவ்வளவு கஷ்டத்துக்கு ஆளானேன். விலைவாசி அதிகமாகிவிட்டது. நான் சம்பாதிப்பதைக் கொண்டு எனக்கும் என் குடும்பத்துக்கும் அவசியமான உடையும் உணவும் வாங்க என்னுல் முடியவில்லை. "எனக்குக் கிடைக்கும் இந்தச் சின்ன வரும்படியில்கூடப் பல பல வரிகளைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனக்கு அவசியமான தேவைகளுக்குக்கூட ராஜாங்கம் வரிபோட்டுப் பிராணனை வாங்குகிறது. என்னைப் போன்றவர்களே தேசத்தில் பெரும்பான்மையாக

இருக்கிறார்கள். ஆனாலும், மற்றவர்கள் எங்களைச் சுரண்டுவதைத் தவிர ஆதரிப்பதே இல்லை" என்று அந்த நோஞ்சல் ஆசாமி சொன்னான்.

"நீ எங்கே அப்பா போக விரும்புகிறாய்? அதற்குக் காரணம் என்ன?" என்று சைத்தான் அவனைக் கேட்டான். அவன் இரண்டு மாளிகைகளையும் ஒரு பார்வை பார்த்தான். "இப்போது இந்த நரகம் சொர்க்கத்தைப் போலவே தோற்றுகிறபடியால் நான் அதற்குள் போக விரும்புகிறேன். நான் சில பாவங்களைச் செய்திருக்கிறேன்: அது இது வாங்கித் தரவேண்டுமென்று நச்சரித்தபோது என் மனைவியிடமும் குழந்தைகளிடமும் கடுமையாகப் பேசியிருக்கிறேன்; உலகத்தில் நடக்கிற அக்கிரமங்களும் கொடுமைகளும் கண்டனையும் தண்டனையுமின்றி வளர்வதைப் பார்க்கும்போது சில சமயங்களில், கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்றுகூடச் சந்தேகித்ததுண்டு."

"அதற்காக நீ நரகத்துக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. நீ என்னைச் சேர்ந்தவன் போலத் தோன்றுகிறதே!" என்றார் கடவுள்.

"என்ன? இங்கே கூட நான் பலி ஆடுதானா?" என்று அழுதான் அந்த ஏழை.

"கவலைப் படாதே, அப்பா" என்று அருள் ததும்ப மொழிந்தருளினார் கடவுள்.

கேள்வி கேட்பது முடிந்த பிறகு கடவுள் அந்த மனிதர்களைத் தாங்கள் இருந்த இடத்திலே இருக்கும்படி கட்டளையிட்டுவிட்டு, விலாசங்களைப் பழையபடியே மாற்றி வைத்தார்.

ஜுரம் போயிற்று

இந்தியாவுக்குத் திக்விஜயம் செய்து கீர்த்தி பெற்ற மகா அலெக்ஜாந்தரின் தளபதிகளுள் மிகச் சிறந்தவர் ஆண்டிகோனஸ் ஸைக்ளாப்ஸ். அவர் ஒரு சமயம் தம் மகன் ஜுரத்தால் கஷ்டப்படுவதாகக் கேள்வியுற்று அவனைப் பார்க்கச் சென்றார். மகன் இருந்த ஜாகையின் வாயிற்படியில் ஓர் அழகான பெண் வெளியே வருவதைக் கண்டார். உள்ளே போனார். மகன் துளியும் வாட்டமின்றிச் சௌக்கியமாயிருப்பதைப் பார்த்துப் பிரமிப்படைந்தார்.

"அப்பா, என் ஜுரம் போய்விட்டது!" என்று சமாதானம் சொன்னான் மகன்.

"ஆமாம், வாயிற்படியில் பார்த்தேன்; அது போயிற்று" என்றார் தளபதி.



க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள். எங்கே, உங்கள் கவன சக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 20-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

அரசியல் :

1. காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் கடைசியாகச் சென்னையில் நடந்தது எப்போது?

2. அகில இந்தியக் காங்கிரஸ் அக்கிராசனர் ஒருவர் ரெயில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போதே உயிர் நீத்தார்; அவர் யார்?

3. இந்தியாவிலேயே முதல் முதல் எந்த ஜில்லாவில் மதுவிலக்கு அமலில் வந்தது?

4. 1937 - இல் ராஜாஜி அமைத்த மந்திரிசபையில் இருந்தவர்களில் யார் யார் இப்போதுள்ள சென்னை மந்திரி சபையில் இருக்கிறார்கள்?

விவசாயம் :

1. நல்ல முலாம் பழம் நிறைய விளையும் இடம் எது?

2. வறட்சி தாங்கும் புல் எது?

3. இரண்டு வருஷங்களில் காய்க்கக்கூடிய எலுமிச்சை எது?

விஞ்ஞானம் :

1. டெலெஸ்கோப் கண்டுபிடித்தவர் இந்த மூவரில் யார்? — (அ) நியூடன், (ஆ) ஹான்ஸ் லிப்பர்ஷீ, (இ) மிக்கேல் பாரடே.

2. பிரிட்டிஷ் ஆலை முதலாளிகள் வேர்க்கடலைக்கு ஒரு நூதன உபயோகம் கண்டுபிடித்திருக்கிறார்கள்; பின்வரும் சரக்குகளில் எதைத் தயாரிப்பது அந்த உபயோகம்? - (அ) காகிதம், (ஆ) கண்ணாடி, (இ) கம்பளி.

3. 'ஜெட் ப்ளேன்' என்ற விமானத்தில் இந்த மூன்றில் எது இல்லை?— (அ) இறக்கைகள், (ஆ) முன்புறமுள்ள விசிறி, (இ) வால்புறமுள்ள திருப்பும் கருவிகள்.

சரித்திரம் :

1. உள்ளம்போல் உடலும் கோணலாய் அமைந்த ஒரு கூனன் பிரிட்டிஷ் அரசனாக இருந்து பிறகு போர்க்களத்தில் உயிர் நீத்தான்; அவன் யார்?

2. யாருடைய ஆட்சியின்போது இந்தியாமீது தைமூர் படையெடுத்தான்?

3. டில்லி சிம்மாசனத்தில் அமர்ந்து ஒரே ஒரு பெண்மணிதான் அரசாண்டிருக்கிறாள்; அவள் யார்?

சங்கீதம் :

1. 'கலிலோ ஹரிஸ்மரண முகடி' யின் சாகித்தியகர்த்தா (அ) தியாகையரா? (ஆ) பூச்சி ஐயங்காரா? (இ) முத்தையா பாகவதரா?

2. 'உமாதாசன்' என்பது (அ) கோடீசுவர ஐயர், (ஆ) ஆனை ஐயா, (இ) முத்துத்தாண்டவர் இவர்களுள் யார் முத்திரை?

3. பின்வரும் இரட்டைகளில் எது எது ஜன்யம்? எது எது ஜனகம்? (அ) ஹநுமதோடி; தோடி (ஆ) சலநாட்டை; சுத்த நாட்டை.

பூகோளம்:

1. ஆசியாவைச் சேர்ந்த ஒரு தீபகற்பம் போல் இருந்த ஆப்பிரிகா தனித் தீவாக மாறியது எப்போது?

2. குளிர் காலத்தில் இரவில் 35 டிகிரியும் வெயிற்காலத்தில் பகலில் 118 டிகிரியுமாகச் சீதோஷ்ணம் பெரிதும் வித்தியாசப்படும் பட்டணம் இந்தியாவில் இருக்கிறதா? பாகிஸ்தானில் இருக்கிறதா? அது எது?

3. இந்தியாவில் வருஷம் முழுவதும் ஐந்து அங்குலம் கூட மழை பெய்யாத இடம் எது?

விளையாட்டு:

1. இந்தியா எந்த விளையாட்டில் இணையற்று விளங்குகிறது?

2. 1946, 1948 - இந்த இரண்டு வருஷங்களிலும் ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த கிரிக்கெட் போட்டிகளில் ஒவ்வொன்றிலும் ஜயம் எதற்கு?

3. ஒரே கிரிக்கெட் டெஸ்ட் மாட்சில் இரண்டு இன்னிங்ஸிலும் செஞ்சுரி எடுத்த இந்தியர் யார்?

பொது:

1. ஒரு பாட்டில் சோடா பானத்தில் எவ்வளவு சோடா உப்புக் கலந்திருக்கிறது?

2. கோச்சு வண்டியை (அ) பிரிட்டன், (ஆ) சீனா, (இ) பிரான்ஸ் இந்த மூன்றில் எந்த நாடு முதலில் அமைத்தது?

3. சீட்டுக் கட்டு முதலில் எங்கே, எதற்காகத் தயாராயிற்று?

பக்தரின் சங்கடம்:

ஒரு பக்தருக்கு முருகனிடமும் பக்தி; திருமாலிடமும் பக்தி. ஆசையால் அவர் ஷஷ்டி விரதத்தின்போது தினைமாவும் ஏகாதசியின்போது உப்புமாவும் சாப்பிடுவார். இரண்டு விரதங்களும் சேர்ந்து வந்தால் என்ன சாப்பிடுவார்?

பிரயாணியும் கிளைவழியும்:

ஒரு பிரயாணி ரஸ்தாவிலே நடந்து கொண்டிருந்தார். ஓர் இடத்தில் நாலு கிளைகளாக ரஸ்தா பிரிந்தது. இவர் போகும் ஊருக்கு எந்தக் கிளையில் திரும்புவது என்று தெரியவில்லை. கை காட்டியைப் பார்த்தாலோ அது கீழே விழுந்து கிடந்தது. ஏதோ ஒரு ராணுவ லாரி அதை ஒரு திசையில் மோதித் தள்ளியிருந்தது. கவலையுடன் சிறிது சிந்தித்துக்கொண்டே இருந்த அவருக்குத் திடீரென்று ஏதோ யோசனை வந்தது. விழுந்து கிடந்த கைகாட்டியை மறுபடியும் பார்த்தார். "ஓஹோ! சரிதான்" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். ஒரு கிளைவழியில் திரும்பினார். அதுதான் சரியான வழி. எப்படிக் கண்டுபிடித்தார்?

மேல் நாடுகளுக்குச் சமமாய்த் தொழில் துறையில் முன்னேறிய கீழ்நாடு என்று பெயர்பெற்ற ஜப்பான் யுத்தத்திலே வீழ்ந்துவிட்டது. அதன் வருங்காலம் எப்படி இருக்கும்?

புதிய ஜப்பான்

வி. என்.

யுத்தத்துக்கு முன்பு ஜப்பானின் வியாபாரமும் கைத்தொழிலும் மிகவும் பிரசித்தமாக இருந்தன. எந்தச் சாமானை எடுத்தாலும் எந்தக் கடைக்குப் போனாலும், ஜப்பான் சாமான்தான். இந்த வியாபாரமும் பணக் கொழுப்புமே ஜப்பானைப் பாதாளத்தில் ஆழ்த்தி விட்டனவோ என்று தோன்றுகிறது. தன்னோடு யாருமே போட்டிபோட முடியாத உச்ச நிலையில் இருந்து விட்டு இன்று அது ஐக்கிய நாடுகளின் கையில் சிக்கிக்கொண்டு விட்டது. இனி, 'ஜப்பானில் தொழிலாவது! வியாபாரப் போட்டியாவது!' என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. ஆயினும் அதைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் நமக்கு ஆவல் உண்டாகிறது.

நேசதேசங்கள் ஜப்பானைப் பிடித்தவுடன் நிறைவேற்றிய முதல் தீர்மானம், ஜப்பானியர்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும் என்பதுதான். இதனால் ஜப்பானியரின் படைப்பலம் அடியோடு குலைந்தது. இப்போது ஜப்பானின் பலம் 1,25,000 சேவகர் அடங்கிய போலீஸ் படைதான். யுத்தத்தில் பயன்பட்டு நாசமானது போக மீதி இருந்த கருவிகளை நேசநாடுகள் பங்கிட்டுக்கொண்டன. ஹிம்சா மார்க்கத்தில் இறங்கிய ஜப்பானைத் திருத்தி நல்ல வழியில் திருப்புவது தான் நேசதேச நாடுகளின் முக்கியக் கொள்கை. ஜப்பானியரை உயர்த்த எல்லா வகைகளிலும் முயல வேண்டும் என்று முறையிடுகிறார்கள். ஜப்பானும் யுத்தத்தை மறந்து சுயநலத்தையும் முன்னேற்றத்தையும் கோருகிறது. ஜப்பான் முன்போலவே உலகத்து மற்ற ஐக்கிய நாடுகளில் ஒன்றாக இருக்கவேண்டும் என்பதுதான் எல்லாருடைய விருப்பமும்.

ஜப்பானில் தொழில் முன்னேற்றம் அநேகமாக ஒரு குடும்பத்தாரை மட்டுமே பொறுத்ததாக இருந்தது. இந்தக் குடும்பத்துக்கு 'ஜைபத்ஸா' என்று பெயர். இது 67 கிளைகளாய்ப் பிரிந்து, ஜப்பானின் எல்லாத் தொழில்களையும் பிடித்துக்கொண்டிருந்தது. இப்படி இல்லாமல், தொழிலை ஒரே இனத்தாரிடமிருந்து பறித்து எல்லாருக்கும் சௌகரியத்தை உண்டாக்குவதுதான், நேசதேசங்களின் இரண்டாவது வேலை. அளவுக்கு மீறிப் பொருளுற்பத்தி செய்து வியாபாரத்தில் போட்டிக்கு வருவதைத் தடுக்கச் சட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். ஒருவிதத்தில் ஜப்பானின் சக்தி பறிபோனாலுங்கூட, வேறு விதத்தில் எல்லா மக்களும் முன்னேற்றமடைய இப்போது சந்தர்ப்

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்: 15-8-'48), ஹுப்ளி.

பம் கிடைத்திருக்கிறது. தனிக்கட்சி ஒன்று எல்லாத் தொழில்களேயும் பிடித்துக்கொள்ள, மற்றவர்கள் திணறும் நிலைமை இன்று இல்லை.

இப்படித் தொழிலுக்கு வசதிகள் செய்தது போலவே, தொழிலாளிகளுக்குத் தேவையான சௌகரியங்களை அளிக்கவும் சட்டமியற்றியிருக்கிருர்கள். விவசாயத்திலும் இப்படித்தான். பழைய ஜப்பானில் இருந்த ஜாகீர்தார், ஜமீன்தார் எல்லாரும் இப்போது இல்லை; நிலங்களைக் குடியானவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிருர்கள்.

ஐக்கிய நாட்டுத் தீர்மானங்களில் இரண்டொன்றைப் பற்றி ஜனங்களுக்குத் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானின் முன்னேற்றத்தைத் தடுத்துத் தொழில் அபிவிருத்திக்கும் வெளிநாட்டு வியாபாரத்துக்கும் முட்டுக்கட்டை போட்டிருப்பதாகப் பலர் நினைக்கிருர்கள்; இது பிசகு. இதைக் குறித்து ஐக்கிய நாட்டுச் சங்கத்தினர்கள் ஓர் அறிக்கை விட்டிருக்கிருர்கள். அதில், "ஒரு நாட்டில் செய்த ஆயுதத்தையோ யந்திரத்தையோ வேருெரு நாட்டுக்கு அனுப்ப வேண்டுமானல், வீண் செலவுதான். அதனல் பலனும் ஒன்றும் இருப்பதில்லை. இப்படிச் சொல்வது உண்மையல்ல என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனல் ஜப்பான் விஷயத்தில் இது மிகவும் பொருத்தமானது. இங்கே தயாராகிய ஆயுதங்களும் யந்திரங்களும் துரு ஏறிக் கிடக்கின்றன. மேலும் இவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் பயன்படுவதற்கென்றே செய்யப்பட்டவை. அந்த இடத்துக்கு அனுப்பஞல்தான் இவை உபயோகப்படும். பழக்க முள்ளவன்தான் இவற்றை உபயோகப்படுத்த முடியும். இதற்காகப் பயிற்சி பெற்ற ஆசாமிகள் வேண்டும். இப்படிப்பட்ட ஆயுதங்களையும் யந்திரங்களையும் யார் வாங்குவார்கள்? வாங்கித்தான் பயன் என்ன?" என்று விவரமாய் விளக்கி யிருக்கிருர்கள்.

ஜப்பான் யந்திரங்கள் கிடைக்குமென்று எதிர்பார்த்துப் பல நாடுகள் ஏமாந்து போகின்றன. யுத்தம் ஜப்பானைக் குலைத்து விட்டது. அதன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த சில நாடுகள் கை நழுவிப் போயின. அதனல், தொழில் முன்னேற்றத்துக்குத் தேவையான நிலக்கரி, இரும்பு முதலியவை அகப்படுவதில்லை. இந்த நிலையில், உலகத்து வியாபாரத்தில் ஜப்பான் எப்படிப் போட்டிக்கு வர முடியும்? புதிய திட்டங்கள் ஜப்பானின் ஏகசக்ராதிபத்தியத்துக்கும் தொழில் முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை போட்டுவிட்டன.

1930 - 32 - இல் இருந்த பழைய ஜப்பானை மறுபடி 1952 - இல் நாம் பார்க்கலாமோ, என்னவோ! தொழிலாளிகள் எல்லாரும் ஜப்பானின் முன்னேற்றத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிருர்கள். ஜப்பான் சீக்கிரத்தில் தன் பழைய சக்தியை மீண்டும் பெற்றுத் தலை தூக்கவேண்டும்.

கால்கள் ( ) இப்படி அல்லது)(அமைந்தவர்களுக்கெல்லாம் நீண்ட அங்கி அருமையான உடை.

வீட்டுக்கு வீடு பூனை இருக்கிறது. ஆனால், அதன் குண விசேஷங்களை எத்தனை பேர் அறிவோம்?

நாலாயிரம் வருஷப் பிராணி

'டி'

பூனையைப்பற்றி யாரும் விசேஷமாக ஆராய்வதில்லை. நாய்க்குக் கொடுக்கும் பெருமையைப் பூனைக்குக் கொடுப்பதில்லை. பூனைகளை யாரும் சீந்தாமலிருந்தாலும் வீடுகளிலும் ஹோட்டல்களிலும் தொழிற்சாலைகளிலும் அவை வாழ்கின்றன.

அமெரிக்க என்ஸைக்ளோபீடியா பூனைக்குக் கௌரவமான ஸ்தானத்தை அளிக்கிறது. அமெரிக்காவில் வாழ்ந்த சிவப்பு இந்தியரை விரட்டி, முதல் முதலில் அங்கே ஐரோப்பியர் குடியேறியபோது, பூனை அவர்களுக்கு உதவி செய்தது. அந்த நாளில் அங்கே குடியேறிய ஒவ்வொருவனும் ஒரு மண்வெட்டி, ஊசி, நூல், பாத்திரம், பைபிள், பூனை ஆகியவற்றோடுதான் அங்கே வந்தான். பூனை அப்போது விலையுயர்ந்த பொருளாக இருந்தது. கலிபோர்னியாவில் தங்கம் இருப்பதாகக் கேள்விப்பட்டு, வெள்ளையர் அங்கே ஏராளமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். எஸ்.எஸ். ஒஹியோ என்ற கப்பல் ஸான் பிரான்ஸிஸ்கோ நகரை அடைந்தபோது, நூற்றுக்கு மேற்பட்ட பூனைகளை 10- முதல் 20-டாலர் வீதம் விற்றார்கள். தங்கத்தைத் தேடிச் சென்ற வியாபாரிகளைவிடப் பூனைவியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைத்தது.

முன் ஒரு சமயம் 'மெம்பிஸ்' என்ற இடத்தில் எலிகளைப் 'பிளேக்' துன்புறுத்தியது. அந்த எலிகள், தெருவில் வந்து மனிதர் மேல் பாய்ந்தும், குழந்தைகளின் விலா எலும்பைக் கவ்வித் தின்றும் துன்புறுத்தின. தெருவகள் எல்லாம் அப்போது பாழாய்த் தென்பட்டன. அந்தச் சமயத்தில், பக்கத்து நகரத்தைச் சார்ந்த ஒருவர் ஒரு விளம்பரம் செய்திருந்ததை ஜனங்கள் கண்டார்கள். "எலியைப் பிடிப்பதற்கு ஒரு புதிய கருவி இருக்கிறது. அது ஒரு நாளில் ஓர் எலியையாவது தவறாமல் பிடிக்கும் என்பதற்கு உத்தரவாதம். அதன் விலை ஒரு டாலாதான்" என்று அந்த விளம்பரம் கூறியது. இதன் மேல் அந்தக் கருவிக்கு வந்த ஆர்டர்களுக்குக் கணக்கில்லை. விளம்பரம் செய்தவர், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பூனையை அனுப்பிவைத்தார். இந்த ஏமாற்றத்தைக் கண்டு மக்கள் ஆவேசம் கொண்டார்கள். விளம்பரம் செய்தவர்மேல் நடவடிக்கை எடுக்க யோசித்தார்கள்; அவரைச் சிறையில் அடைக்கவும் தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்பே, அந்த நாட்டில் எலிகள் ஒழிந்துவிட்டன. ஆகவே பூனைகளையும்

காப்பிரைட் : மாத்ருபூமி (மலையாளம் : 12-12-'48), கள்ளிகோட்டை.

அவற்றை அனுப்பியவரையும் அவர்கள் நன்றியோடு நேசித்தார்கள்.

ஒன்றைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தால், அதைச் செய்து முடிக்கும்வரையில் பூனை சும்மா இராது. முதல் முயற்சி வீணானால், அது மறுபடியும் முயற்சி செய்யத் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும். அதிலிருந்து யாரும் எவ்விதத்திலும் அதைத் தடுக்க முடியாது.

பூனை மனிதர்களோடு நாலாயிரம் வருஷங்களாகவே வாழ்ந்து வருகிறது. அன்று முதல் இன்று வரையில் அதன் உருவத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

பெண் மனதை அறிந்தாலும் அறியலாம், பூனையின் மனத்தை அறியவே முடியாது. பூனை மெதுவாக வாலை ஆட்டினால், அது அன்பு நிறைந்து ஆனந்தமாக இருக்கிறது என்று அர்த்தம். எதிரியின்மேல் பாயத் தயாராக இருக்கும் பூனை, பார்க்கப் பயங்கரமாக இருக்கும்.

மனிதனைவிடப் பூனைக்கு அறிவுத் திறமை அதிகம். மங்கிய வெளிச்சத்தில் மனிதனைவிடப் பூனைக்குக் கண் நன்றாகத் தெரியும். பகலிலும் அதற்குக் கண் தெரியும். ஆனால், இருட்டில் தெரியாது. வர்ணங்களைக் கண்டு அறியும் சக்தி பூனைக்கு இல்லை என்று சிலர் சொல்கிறார்கள்; அது சரியல்ல. வாசனை இல்லாத சாயத்தைக் கரைத்துப் பூனைக்குத் தண்ணீர் வார்த்தால் அது குடிப்பதில்லை.

பூனையின் காதில் மிகவும் நுண்மையான சத்தங்கூட நன்றாகக் கேட்கும். எலி அடி எடுத்து வைத்தாலும், பாம்பு லேசாக ஊர்ந்தாலுங்கூட, உடனே அந்தச் சத்தத்தைப் பூனை அறிந்துகொள்ளும்.

பூனைக்கு இப்படிக் கூர்மையான காது இருப்பதே, யுத்த காலத்தில் அதற்கு ஆபத்தாய் முடிந்தது. கப்பல்களில் எப்போதும் பூனைகள் இருக்கும். கப்பல் கரைக்கு வந்ததும், அவை கரையில் குதித்து ஊருக்குள் போகும். மீண்டும் கப்பல் புறப்படச் சங்கு ஊதியதும், பூனைகள் ஓடி வந்து கப்பலில் ஏறிக்கொள்ளும். ஆனால் யுத்த காலத்தில் கப்பல்கள் சங்கு ஊதாமல் புறப்படவேண்டி யிருந்ததனால், பூனைகள் பல புதிய ஊர்களில் அங்கங்கே அநாதைகளாகத் தங்கிவிட்டன.

மணத்தை மோந்து அறியும் சக்தி மனிதனைவிடக் குரங்குக்கும் பூனைக்கும் அதிகம். பன்னீர்ப்பூவும் மல்லிகைப்பூவும் பூனைக்கு மிகவும் பிரியமானவை. அழகாய் மலர்ந்த பூவை அணுகி அதைத் தொடாமலே பூனை குதித்து விளையாடும். அவ்வளவு ரசனை அதற்கு!

பொருள்களின் தன்மையைக் கண்டு அறிவதற்குப் பூனையின் மீசை பயன்படுகிறது. பழக்கமில்லாத ஒரு பொருளைக் கண்டால், பூனை முதலில் அதன் மணத்தை மோந்து பார்க்க முயலும். பிறகு மீசையின் நுனியால் அதைத் தொட்டுப் பார்க்கும். அதிலிருந்து அந்தப் பொருளின் தன்மையை பூனை அறிந்து கொள்ளும்.

க்விஸ் விடை

[14-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விகளுக்கு விடை]

அரசியல்:

1. 1927 இல்.

2. டாக்டர் அன்சாரி.

3. சேலம் ஜில்லாவில்.

4. டாக்டர் தி. சே. சௌ. ராஜனும், பி. கோபால் ரெட்டியும்.

விவசாயம்:

1. சித்தவடம் (கடப்பை ஜில்லா).

2. ஆஸ்திரேலியப் புல்.

3. மால்டா லெமன்.

விஞ்ஞானம்:

1. ஹான்ஸ் லிப்பர்ஷீ; இவர் விஞ்ஞானி அல்ல. ஹாலந்து தேசத்து மூக்குக்கண்ணாடி வர்த்தகர்.

2. கம்பளி.

3. முன்புறமுள்ள விசிறி.

சரித்திரம்:

1. மூன்றாம் ரிச்சர்ட்.

2. மாமூத் டோக்ளக்.

3. சுல்தானா ரஜியா.

சங்கீதம்:

1. முத்தையா பாகவதர்.

2. ஆனை ஐயா.

3. ஹநுமதோடியும் சலநாட்டையும் ஜனகம்; தோடியும் சுத்தநாட்டையும் ஜன்யம்.

பூகோளம்:

1. 1869 - இல் சூயெஸ் கால்வாய் வெட்டி முடிந்தபோது.

2. பாகிஸ்தானில் இருக்கிறது; லாகூர்.

3. ராஜபுதனத்திலுள்ள தார் பாலைவனம்.

விளையாட்டு:

1. ஹாக்கி ஆட்டத்தில்.

2. இரண்டிலும் ஆஸ்திரேலியாவுக்குத்தான்.

3. விஜய் ஹஜாரே.

பொது:

1. சோடாவில் சோடா உப்பே கலப்பதில்லை.

2. பிரான்ஸ்.

3. பிரான்ஸில் நாலாம் சார்லஸ் மன்னனின் மனக்கவலையை மாற்ற, 1390 - இல் தயாரித்தார்கள்.

பக்தரின் சங்கடம்:

சங்கடம் ஏது? ஷஷ்டி ஆறாவது திதி; ஏகாதசி பதினோராவது திதி; இரண்டும் எங்கேயாவது சேர்ந்து வருமா?

பிரயாணியும் கிளைவழியும்:

இவர் வந்த ஊரின் திசை இவருக்கு நன்றாகத் தெரியும். விழுந்த கைகாட்டியின் ஒரு கையில் இவர் ஊரின் பெயரும் இருக்கும் அல்லவா? அந்தக் கை அந்த ஊரை நோக்கி இருக்கும்படி நிற்பதாகக் கற்பனை செய்து பார்த்துக் கண்டுபிடித்தார்.

சீனப்போர் - உலக அபாயம்

எம். என். ராய்

சென்ற இரண்டு மாதங்களில் சீனாவில் சில விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவை உலகம் முழுவதையுமே பாதிக்கக்கூடியவை. சீனாவின் உள் நாட்டுச் சண்டை முற்ற முற்ற அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் மனஸ்தாபம் அதிகமாகி இரண்டும் மோதிக் கொள்ள நேரிடும். இப்போதே ஒருவிதமாக அந்தமாதிரி யுத்தம் தொடங்கி விட்டது என்று சொல்லலாம். பெர்லின் முற்றுகையாலோ சீன உள்நாட்டுச் சண்டையாலோ சீக்கிரமே மகா யுத்தம் மூளலாம். போட்டி இந்த இரண்டு வல்லரசுகளோடு நிற்கவில்லை; உலகத்திலுள்ள மற்றத் தேசங்களும் இவற்றின் வலையில் சிக்கி இரண்டு பட்டுக் கிடக்கின்றன. இரண்டு இடத்திலும் ஒரே சமயத்தில் சண்டை மூள யார் முதலில் தலையிலே அட்சதை போட்டுக் கொள்வது என்பதுதான் கேள்வி! இந்த விஷயத்தில் இரண்டு வல்லரசுகளும் வெகு ஜாக்கிரதையாகவே இருக்கின்றன. அதனால் இப்போதைக்கு அபாயம் இல்லை; கொஞ்ச காலம் தள்ளலாம்.

சீனாவில் நடப்பது சீனர்களின் சண்டை அல்ல; அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் நடக்கும் மறைமுக யுத்தம் என்றே தோன்றுகிறது, இவர் சொல்வதைப் பார்த்தால்! கட்டுரையாளர் மூன்றாவது இண்டர்நேஷனலின் ஸ்தாபக அங்கத்தினர். லெனின், ஸ்டாலின் ஆகிய இருவருக்கும் தோழராக இருந்தவர். இப்போது இந்திய ஸோஷலிஸ்ட் கட்சியோடு சேர்ந்து உழைக்கத் தீர்மானித்திருக்கிறாராம்.

பெர்லின் முற்றுகை விஷயத்தில் மேற்கத்திய வல்லரசுகள் கை கலக்காமல் சும்மா விட்டுக்கொடுத்து விடத் தயாராயில்லை. 'பெர்லினில் அவர்கள் பகுதியிலுள்ள மக்களுக்கு உணவு கொண்டுபோக முடியாமல் திண்டாடி அந்த இடத்தை விட்டுப் போய்விடுவார்கள். அப்புறம் நகரம் முழுவதையும் நாம் பிடித்துக்கொண்டுவிடலாம்' என்றுதான் ருஷியர் முதலில் எண்ணினார்கள். ஆனால் ஆகாய மார்க்கமாக உணவுப் பொருள் வந்து குவிவதைப் பார்த்ததும் ருஷியர்கள் பாடு ஏமாற்றமாகி விட்டது. ஒன்று, அதை ஒப்புக் கொண்டாக வேண்டும்; இல்லாவிட்டால் சண்டையை ஆரம்பித்து விடவேண்டும். ருஷியாவோ அதற்குத் தயாராக இல்லை. இது தான் சமயம் என்று மேற்கத்திய வல்லரசுகள் பகிரங்கமாகவே சண்டைக்கு ஆயத்தமாகிவிட்டன. அதற்கு அமெரிக்காவிலிருந்து ராணுவ உதவியும் பொருளுதவியும் வரவேண்டியிருக்கிறது; அப்போது தானே ருஷியாவை ஜயிக்க முடியும்?

இதே சமயத்தில் சீனாவில் பொதுவுடைமை பரவிவருகிறது; இதுவும் அமெரிக்காவுக்கு ஆபத்தாயிற்றே! ஆகவே, இரண்டு இடத்துக்கும் அது உதவவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதை யெல்

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 7 - 12 - '48) கல்கத்தா.

லாம் பார்த்தால், 'சீனாவில் உள் நாட்டுச் சண்டை முற்றுவதற்குக் காரணம் ருஷியாவின் ராஜ தந்திரச் சூழ்ச்சியாக இருக்குமோ?' என்று தான் நமக்குப் படுகிறது. ஐரோப்பாவில் ருஷியர் முன்னேற வேண்டுமானால் பெரும் போருக்கு ஆயத்தம் செய்யவேண்டும்: அதற்கு அவர்கள் இன்னும் தயாராயில்லை. 'சீனாவைப் பிடித்துவிட்டால் ஆசியாவில் நாம் சுலபமாக ஜயித்துவிடலாம்' என்று அவர்கள் எண்ணுவது சகஜந்தான்; ஆனாலும் அது அவ்வளவு லேசில் முடிகிற காரியமா? அட்லாண்டிக் பக்கமும் சரி, பஸிபிக் பக்கமும் சரி, பொதுவுடைமை பரவாமல் இருக்கவேண்டுமே என்று அமெரிக்காவுக்குக் கவலை. ஆனால் கிழக்கிலோ நிலைமை திருப்திகரமாக இல்லை. சீனாவில் இப்போது நடக்கும் குவோமிண்டாங் ஆட்சியில் லஞ்ச ஊழல் மலிந்து கிடக்கிறது; இப்படி உளுத்து வரும் ஓர் அரசாங்கத்துக்குத்தான் அமெரிக்கா ஒத்தாசை செய்துவருகிறது. அது கவிழ்ந்தால் அமெரிக்கா நேர்முகமாகவே ருஷியாவுடன் போரில் ஈடுபடவேண்டியிருக்கும்; ருஷியாவும் பகிரங்கமாகச் சண்டை போட நேரிடும். சீனப் பொதுவுடைமைக் கட்சிப் படைகளுக்கு முன் சியாங்கின் படை நிற்கமுடியாது. ஆனால் அமெரிக்கத் துருப்புகள் வந்து இறங்கினால் நிலைமை மாறலாம். அப்போதுகூட ருஷியர் கை ஓங்கியே இருக்கும். ஏனென்றால், ஆயுத நிலையங்கள் அவர்களுக்கு வெகு சமீபத்தில் இருக்கின்றன. ஏற்கனவே சீனப் பொதுவுடைமைக் கட்சியில் ஏராளமான பேருக்கு, அவர்கள் பயிற்சியும் அளித்திருக்கிறார்கள். அமெரிக்கர்களும் இப்படித்தான் செய்வார்கள். இவர்கள் போட்டியில் பீரங்கிக்கு இரையாகப் போகிறவன் பாவம், சீனாக்காரன்தான்; அவன் அடியோடு தொலைகிற வரைக்கும் சண்டை நடக்கும்; அது முப்பது வருஷம் ஆனாலும் ஆகும்; நூறு வருஷமும் ஆகலாம்.

1945-இல் ஜப்பான் தோற்றதுமே பொதுவுடைமைவாதிகள் தெற்கே யாங்ட்ஸி நதி வரைக்கும் பிடித்துக்கொண்டிருக்க முடியும். ஆனால் ருஷியர்கள் அவர்களைத் தடுத்துவிட்டார்கள்; குவோமிண்டாங்காரர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதனால் குவோமிண்டாங் ஆட்சி நீடிக்க முடிந்தது. இப்போது ருஷியர் தங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 1945-இல் சீனாவில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருந்தால் கிழக்கில் வல்லரசுகளுக்குள் போர் மூண்டிருக்கும். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் அது மூள்வது ருஷியர்களுக்குச் சம்மதமில்லை. அவர்கள் மட்டும் மனம் வைத்திருந்தால் மஞ்சூரியாவிலேயே இருந்துகொண்டு சீனப் பொதுவுடைமைவாதிகளுக்கு உதவி செய்திருக்கலாம்; அதனால் குவோமிண்டாங் சர்க்காருக்கு எதிராகப் பீட்பிங்கில் போட்டி சர்க்காரும் ஏற்பட்டிருக்கும். ஆனால் அப்போதே இந்த விஷயத்தில் ருஷியா தீவிரமாகப் போயிருந்தால் அமெரிக்கா இதில் தலையிட்டிருக்கும். ஆகையால், ருஷியர் நிதானமாகத் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதென்று தீர்மானித்தார்கள். ஐரோப்பாவில் தங்கள் கை வரிசையைக் காட்டுவதற்காகவே சீனாவில் சும்மா இருந்தார்கள். ருஷிய - சீன உடன்

படிக்கையில் பொதுவுடைமைவாதிகளையும் சேர்த்துக்கொண்டு கூட்டுச் சர்க்கார் அமைக்கவேண்டு மென்று ஒரு ஷரத்து இருந்தது. ஆனல் தேசீயவாதிகளுக்கு உள்ளூற ஒத்துழைக்க விருப்பமில்லை; பொதுவுடைமைவாதிகளும் இழுத்துப் பிடித்தார்கள். இதனுல் உடன் படிக்கை ஏற்பட்டும் பலனில்லாமல் போயிற்று.

சீனப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரான மாவோ த்ஸே டுங் நாங்கிங்குக்கு வர மறுத்தார். உடனே சியாங் சண்டையில் இறங்கிவிட்டார். ஆரம்பத்தில் சியாங்குக்கு வெற்றியேல் வெற்றி கிடைத்தது. அதனுல் வடக்கே மேலும் மேலும் போய்த் தாக்கத் தொடங்கினர். பொதுவுடைமை வாதிகளும் அப்போது ருஷியாவின் சொல்படி வடமேற்குச் சீனவை விட்டுப் பின் வாங்கினர்கள் போல் இருக்கிறது! மஞ்சூரியாவுக்கு வந்ததும் அவர்களுக்குப் பல வசதிகள் கிடைத்தன. ருஷியாவுடன் அடிக்கடி போக்குவரத்தும் சாத்தியமாயிற்று; தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு, தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது. சென்ற இரண்டு வருஷ காலமாக ஐரோப்பாவில் சச்சரவு மூளப் போகிறதே என்றுதான் எல்லாரும் கவலைப்பட்டுக்கொண் டிருந்தோம். இந்தச் சமயத்தில் ருஷியரின் மேற்பார்வையில் சீனப் பொதுவுடைமை வாதிகள் புதிதாகப் பயிற்சி பெற்றுவந்தார்கள். அது வரைக்கும் அவர்களில் சிலர் குட்டிப் படைகளுடன் சீனவில் பல இடங்களுக்கும் போய்ச் சியாங்குக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். பிறகு அவர்கள் சேனையின் பெரும் பகுதி மஞ்சூரியாவிலிருந்து புறப்பட்டது. அதற்குள் குவோமிண்டாங் எதிர்ப்பும் குன்ற ஆரம்பித்தது. அந்தக் கட்சியில் லஞ்ச ஊழல் மலிந்து ஒற்றுமை குலைந்துவிட்டது. திறமை படைத்தவர்களும் அதில் இல்லை. பொதுவுடைமைவாதிகளுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

முதலில் நாங்கிங் வீழ்ந்துவிடுகிற மாதிரிதான் இருந்தது. ஆனல் அப்படி நேரவில்லை. பொதுவுடைமை வாதிகளின் எதிரே நிற்க முடியாமல் ஓடிய குவோமிண்டாங் படைகளுக்குத் திடீரென்று சண்டையில் உற்சாகம் மூண்டுவிட்டதா? பலந்தான் பெருகிவிட்டதா? சியாங் தொண்டை வறளக் கத்தியும் அமெரிக்காவிலிருந்து அப்படி அதிக உதவி வந்ததாகக்கூடத் தெரியவில்லையே! இன்னும் கேட்டால், 'குவோமிண்டாங் ஆட்சி நிச்சயமாகக் குலைந்துவிடும். இனிமேல் அவர்களுக்குப் பொருளுதவியோ பண உதவியோ செய்வது வீண்' என்ற அபிப்பிராயந்தான் அமெரிக்காவில் பரவி வருகிறது. ஆனலும் பொதுவுடைமைக் கொள்கை பரவுவதைச் சீக்கிரமே தடுத்தாக வேண்டும் என்ற கவலையும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பஸிபிக் பக்கம் ருஷியாவுக்கு இடங்கொடுக்க அமெரிக்கர்கள் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்கள். ஜப்பான் வீழ்ந்தவுடனே அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சீனவில் சண்டை மூளலாம். பஸிபிக் முழுதும் அமெரிக்கர் கையில்தானே இருக்கிறது? அப்போது ஜப்பானைத் தளமாக வைத்துக்கொண்டு அமெரிக்கர் இடைவிடாமல் எல்

லாப் பொருள்களையும் தங்கள் நாட்டிலிருந்து கொண்டு வரலாம். குவோமிண்டாங் ஆட்சி குலைந்தால் சீனாவில் உள் நாட்டு யுத்தம் முடிந்த மாதிரிதான். ஆனால் அங்கே அமைதி ஏற்படும் என்று சொல்ல முடியாது. ருஷியரும் அமெரிக்கரும் அங்கே தங்கள் கை வரிசையைக் காட்டிக் கொள்ளப் போகிறார்கள். அந்தச் சமயம் ருஷியாவுக்குச் சாதகமாகச் சீனப் பொதுவுடைமைவாதிகள் இருப்பார்கள். ஜப்பானியப் படை அமெரிக்காவுக்கு ஒத்தாசையாக இருக்கும். ஆரம்பத்தில் ஐரோப்பாவிலும் சரி, சீனாவிலும் சரி, ருஷியாவுக்கு வெற்றி கிடைக்கலாம். ஆனால் அமெரிக்காவுக்கு ஏராளமான பொருள் வசதி இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு எத்தனை நாள் வேண்டுமானாலும் யுத்தம் நடத்த முடியும்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் ருஷியர் ஐரோப்பாவில் தங்கள் ஆட்டத்தை ஒரு விதமாக நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள்; ஆசியாவிலும் அந்த மாதிரிதான் இருப்பார்கள் என்று தோன்றுகிறது. சமீபத்தில் சீனாவில் நிலைமை மாறியிருப்பதற்கு - பொதுவுடைமைவாதிகள் ஓரளவுக்குமேல் முன்னேறாமல் இருப்பதற்கு - இதுதான் காரணமோ என்னவோ? சீனப் பொதுவுடைமைவாதிகளுக்கு, "இதோடு நிறுத்திக் கொண்டு வடக்கிலேயே இருங்கள்" என்று ருஷியா உத்தரவிட்டிருக்கலாம்! பொதுவுடைமைக்கு எதிராகச் சீனாவில் ஓர் அரசாங்கம் நடக்கிற வரை அமெரிக்கா அந்த நாட்டு விவகாரத்தில் தலையிட அதிகாரம் இல்லை. இதனால்தான் குவோமிண்டாங் ஆட்சி ஒரேயடியாகக் குலைந்து விடாதபடி ருஷியா பார்த்துக் கொள்கிறது.

இதையெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் சீனாவில் சீக்கிரமே ஒரு கூட்டுச் சர்க்கார் ஏற்படும் என்று தோன்றுகிறது. அதில் பொதுவுடைமைவாதிகள் நிச்சயமாக முக்கிய ஸ்தானம் வகிக்கப் போகிறார்கள். இதுதானே வேண்டும் ருஷியாவுக்கு? அப்போது அமெரிக்காவுடன் நேர்முகமாகச் சண்டை போடவேண்டியிராது. ஆனாலும் ஒரு கட்சி மற்றொரு கட்சியை அழுத்தச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கும். எந்தச் சமயத்தில் என்ன நேரும் என்று சொல்ல முடியாதபடி நிலைமை அபாயகரமாகவே இருக்கும். அதே சமயம் மறுபடியும் ஐரோப்பாவில் சச்சரவு மூளும். வல்லரசுகள் மற்றத் தேசங்களைத் தம் தம் கட்சிக்கு இழுக்கப் பார்க்கும். அப்போது ஆசியாவில் இனவெறி மூளும்; அரசியல் வளர்ச்சியும் நாகரிக முன்னேற்றமும் இராததால் பரஸ்பர துவேஷமும் முற்றும்; அதனால் கொலையும் களவும் மேலிட்டு வீணாக ரத்தவெள்ளம் பெருகும். 'பொதுவுடைமை, பொதுவுடைமை' என்று சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம் இந்த மாதிரி ஈனமான காரியமெல்லாம் செய்யப் போகிறது.

ஆனிக்கும் ஆடிக்குமுள்ள வித்தியாசம், ஆனியில் ஆடியை நீங்கள் எதிர்பார்ப்பதுதான்; வேறு ஏதுமில்லை.

பிழையைத் திருத்துங்கள்

கீழே வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு பிழை இருக்கும். எழுத்துப் பிழையோ, சொல் பிழையோ, வாக்கியப் பிழையோ, விஷயப் பிழையோ இருக்கலாம். அதைக் கண்டுபிடித்துத் திருத்துங்கள். நீங்கள் கண்டுபிடித்தது சரியா இல்லையா என்பதை 70-ஆம் பக்கத்தில் உள்ள விடையைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

1. வீரமும் ஆவேசமும் உடையவர்களானாலும் பதட்டம் இல்லாமல் யோசித்துத் தொண்டாற்ற வேண்டும்.

2. பாரதநாட்டில் விடுதலைப் போர் திலகர் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தது முதல் ஆரம்பமாயிற்று.

3. அப்பொழுது முதலே தொண்டர் கூட்டம் வரவர அதிகமாகிக் காந்தியடிகளுடைய ஆணையின் படியே சத்தியாக்கிரகம் ஆரம்பித்த போது கணக்குக்கு அடங்காமல் பெருகினார்கள்.

4. "கடன்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கம்பன் சொன்னது போல இந்திய நாடு கடன் சுமையால் மிகவும் தொல்லைக்கு உட்பட்டு வருந்தியது.

5. விவசாயிகளும் தொழிலாளர்களும் ஏழ்மையில் அழுந்தி வாழ்க்கையின் அவசியமான தேவைகளே கிடைக்காமல் நலிந்தார்கள்.

6. இந்தக் கஷ்டங்களின் காரணமாக, விடுதலைப் போராட்டம் வர வர அதிக வேகம் பெற்றுத் தீயைப் போலப் பரவலாயிற்று.

7. உண்மையையும் அஹிம்சையையும் கடைப்பிடித்துச் சத்தியாக்கிரகப் போரை முதல் முதலாகக் காந்தியடிகள் இந்திய நாட்டில் தொடங்கினார். அந்தப் போர் முறையின் புதுமையைக் கண்டு உலகமே வியந்தது.

8. ஆளும் அதிகாரவர்க்கத்தினர் தங்கள் லாபத்தைமட்டும் கருதியிருந்தார்களே ஒழியப் பொறுப்பை உணர்ந்து குடிமக்களின் க்ஷேம லாபத்தைக் கவனிக்கவில்லை.

9. காந்தியடிகளுடைய அஹிம்சைப் போரின் உத்வேகம் ஆண் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தது பெரிதல்ல; பெண்குலத்திலும் ஒவ்வொருவளும் சிறிதாவது அதைப் பற்றி உணர்ந்தாள்.

10. ஐம்பத்தெட்டுத் தேசமென்று பழங்காலத்தில் சொன்னார்கள். பிரிட்டிஷார் ஆட்சியிலோ நூற்றுக்கணக்கான குட்டி ராஜ்யங்கள் தலையெடுத்தன.

11. இந்த நிலையில் அடிமை இந்தியாவில் மாட்சிமை தங்கிய மன்னரின் ஆட்சி நடை பெற்று வந்ததை மாற்ற வேண்டுமென்று அங்கங்கே தேசத்தலைவர்கள் காந்தியடிகளின் ஆணைப்படி தொண்டு புரிய முன்வந்தார்கள்.

12. சில அறிவாளிகள் இந்தப் புரட்சிப் போரில் ஈடுபடாமல் சுவற்றின்மேல் உள்ள பூனையைப்போல், ஒரு துணிவும் இன்றி, வழவழ கொழகொழ மார்க்கத்தைக் கடைப்பிடித்தார்கள்.

பெண்

பெ1

பெ2

****

மூக்கைக் கவனியுங்கள்

மன நோய் வைத்தியர் உங்களைப் பார்த்தவுடனே, எதைக் கவனிப்பார், தெரியுமா? கண்ணையோ வாயையோ அல்ல; மூக்கைத்தான். உள்ளத்தின் உணர்ச்சி விகாரங்களைப் பிரதிபலிப்பது கண்; ஆயுள் முழுதும் மனத்தில் எழுந்த ஆசைகளின் முத்திரை விழுந்திருப்பது வாய். என்றாலும், இந்த இரண்டையும் விட்டு அவர் உங்கள் மூக்கைத்தான் கவனிப்பார்.

****

ஆண்

ஆ1



ஆ2

காப்பிரைட்: வுமன் அண்ட் ப்யூட்டி

பெ3 பெ4 பெ5 பெ6

எலும்புகளின் அமைப்பே நம் உடலுக்கு அஸ்திவாரம். அந்த அஸ்திவாரத்தின் ஒரு பகுதி மூக்கு. நம் அஸ்திவார எலும்பு அமைப்பே, நம் அஸ்திவார குணத்தைப் பிரதிபலிப்பது. க்ளியோபாட்ராவின் மூக்குத் துளி ஏறியோ இறங்கியோ இருந்தால், உலகத்தின் சரித்திரமே அடியோடு மாறிப்போயிருக்கும் என்று சொல்வார்கள்.

உங்கள் மூக்கு வகையைப் படத்திலே பார்த்துக் கொண்டு அதுபற்றி மன வைத்தியர் என்ன சொல்வார் என்பதைப் பின் பக்கங்களிலே படியுங்கள்.



ஆ3 ஆ4 ஆ5 ஆ6

(ஆங்கிலம்: ஜூலை '48), லண்டன்.

பெ. 1: நேரான சிறிய மூக்கு; கொஞ்சம் கூர்மை; நேர்த்தியான நாசித் துவாரங்கள். இது உங்களுக்கு இருந்தால், நீங்கள் சிறந்த பெண். உங்கள் ஆடையாபரணங்களையும் வீட்டையும் அழகாய் வைத்துக் கொள்வீர்கள். விருந்தோம்புவதிலே சிறந்து விளங்குவீர்கள். உங்களுக்கு வெளி விவகாரங்களிலே திட்டமான அபிப்பிராயம் இருக்கும்; நல்ல காரியத்தைச் செய்வதிலே ஆவல் மிகுந்திருக்கும். எல்லோரும் இன்புறும்படி கலகலப்பாய்ப் பழகுவீர்கள். நண்பர்களுக்கு நல்ல யோசனை கூறுவீர்கள். வழக்கத்தை மீறி எதவும் செய்யமாட்டீர்கள். உபாத்திமை, வைத்தியம் முதலிய தொழில்களை நீங்கள் அழகாய்ப் புரியமுடியும். என்றாலும், மண வாழ்க்கையே உங்களுக்குச் சிறந்தது. ஆ. 4 நம்பரிடம் உங்களுக்குக் கவர்ச்சி உண்டாவது போல் தோன்றலாம். ஆனால், ஆ. 3 நம்பரே உங்களுக்குத் தகுந்த கணவர்.

பெ. 2: நடுத்தரமாக அல்லது அதிக நீளமாக இருப்பது உங்கள் மூக்கு. நடுவே நன்றாக உட்பக்கம் குழிந்திருக்கும். பாதம் விதையைப் போன்ற நாசித் துவாரங்கள். நீங்கள் பெண்மைக்குரிய சரசத்துடன் நடந்துகொள்ள மாட்டீர்கள். ஆனால், வீட்டுக்கு வெளியே விளையாட்டு, உடை அழகு முதலிய வற்றில் சிறந்து, ஆணுக்கு நல்ல தோழியாக இருப்பீர்கள். புத்திசாலித்தனம், குறும்பு, சிந்தனை, சுறுசுறுப்பு இவை நிறைந்திருப்பீர்கள். பல ஆண்களை வசீகரிக்கமாட்டீர்கள். ஆனால், ஓர் ஆணுக்கு உங்களிடம் காதல் உண்டாகிவிட்டால், கடைசி வரையில் அவன் உங்கள் மீது காதல் செலுத்துவான். உங்கள் மணவாழ்க்கை இன்பமாயிருக்கும். சமூக உறவுகளில் உங்களுக்குச் சிரமமே உண்டாகாது. பிற பெண்களுக்கு உங்களைக் கண்டால் சந்தேகம் வந்து மனஸ்தாபம் உண்டாகலாம். ஆ. 4 நம்பர் உங்களுக்கு ஏற்ற கணவர்.

பெ. 3: நடுத்தர நீளம்; மெல்லிசு; தளுக்காய் வளைந்திருக்கும். நாசித்துவாரங்கள் வட்டமாயிருக்கும். இந்த மூக்குச் சிலருக்கே உண்டு. உங்களுக்குக் கூச்சமும் உணர்ச்சியும் மிகுந்திருக்கும். அதிகமாய்ப் பேச மாட்டீர்கள். அற்புதமான சில நண்பர்களைப் பெறுவீர்கள். கலை, இலக்கியம் முதலிய சிருஷ்டித் துறைகளில் வெற்றி அடைவீர்கள்; அல்லது உங்கள் கூச்சத்தால், ஒன்றிலும் ஈடுபடாமலே இருந்து விடுவீர்கள். மனிதர்களிடமும், பொருள்களிடமும் பிரத்யட்ச நிலைமையை அநுசரித்து நடந்து கொள்ள மாட்டீர்கள். யாரிடமும் சண்டை; ஓர் உறுதி கிடையாது. யாரிடமாவது அன்பு வந்து, பிறகு வெறுப்பு வரலாம்; அப்படி வந்தாலும் அவர்களின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடிக்காத விஷயங்களையெல்லாம் தவறு என்று தள்ளாதீர்கள். உங்கள் சிந்தனைத் திறனால் மனிதர்களை இசைத்துக் கட்டுப்பாடு கொள்ளச் செய்யலாம். அதைவிடப் பொருள்களைத் திரட்டி இசைப்பது உங்களுக்கு அதிகச் சுலபமாயிருக்கும். புத்தகசாலை அமைப்பது, ஆராய்ச்சிகள் புரிவது ஆகிய தொழில்கள் உங்களுக்கு மிகவும் ஏற்றவை. அவதிப்படுபவரிடம் அநுதாபம் கொள்ளும் உங்கள் சுபாவத்தால், எவளுக்கும் பிடிக்காத ஒருவனை நீங்கள் மணந்துகொண்டுவிடக் கூடும்; இது தவறு. குடித்தனப் பொறுப்பைச் சிறப்பாய் வகிக்க

உங்களுக்குத் தெரியாது. ஆனால், வீட்டை மகா அழகாய் வைத்துக் கொள்வீர்கள். ஆ. 1 நம்பர் உங்களுக்கு ஏற்றவர். குடித்தனப் பாங்கு தெரியாவிட்டாலும், சிறந்த தாயாக விளங்குவீர்கள். குழந்தைகள் உங்களிடம் அளவற்ற பிரேமை கொள்ளும்.

பெ. 4: மேலே புடைத்துக் கொண்டு நிற்கும் அகந்தையான மூக்கு இது. இதோடுகூட உங்கள் முழங்கால் எலும்பு நீளமாகவும், கணுக்கால் லலிதமாகவும் இருக்குமானால், நீங்கள் அறிவுக் கூர்மை மிகுந்திருப்பீர்கள். உலகத்தின் மிகப் பிரசித்தியான சில பெண்களுக்கு இத்தகைய மூக்கே இருந்திருக்கிறது. அவர்களின் அறிவுத்திறமை உங்களுக்கும் இருப்பது நிச்சயம். அதை நீங்கள் அறிந்தும் இருப்பீர்கள்; உங்கள் நண்பர்கள்கூட அறிந்திருப்பார்கள். அசடுகளிடம் நீங்கள் மிகுந்த சகிப்புத்தன்மை காட்ட வேண்டும். அவர்கள் முகராசியும் சீலகுணமும் நிறைந்திருக்கக்கூடும் என்பதை நீங்கள் அறியவேண்டும். ஏதாவது சமூகத்தொண்டு, கல்வி, அரசியல் முதலிய தொழில்களை நீங்கள் மேற்கொள்ளலாம். புதுமையாகவும் முற்போக்காகவும் எது இருந்தாலும் அதில் நீங்கள் பற்றுக் கொள்வீர்கள். உங்களுக்குக் காதல் கிடையாது; தோழர்தாம் வேண்டும். ஆ. 2 நம்பர் அல்லது சற்று நீண்டு நாசித்துவாரங்கள் அகன்று மாறிய ஆ. 3 நம்பர் உங்களுக்கு ஏற்ற துணைவர்.

பெ. 5: மிகச் சிறிய மூக்கு. நுனி சிறிது சாய்ந்திருக்கும். எப்போதும் நீங்கள் மகிழ்ச்சியாயிருப்பீர்கள். விகடமாயும் சாமர்த்தியமாயும் பேசுவீர்கள். கலை, இலக்கியங்களைப் படைக்கும் சிருஷ்டித் திறமைதான் உங்களுக்கு உண்டு. அநுபவ ஞானம் போதாது. எதிலும் உங்கள் சுய சாமர்த்தியத்தைக் காட்டுவீர்கள். கொஞ்சம் சோம்பேறித்தனம் உங்களுக்கு இருக்கலாம். இதை நீங்கள் கைவிட்டால், நடிப்பு, நூல் இயற்றுவது, திட்டங்கள் போடுவது, வேடிக்கைக் காட்சி முதலிய தொழில்களில் மிகுந்த வெற்றி பெறுவீர்கள். வீண் வம்பிலே பொழுது போக்க இச்சை உண்டாகும். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். ஆ. 3 நம்பரிடம் உங்களுக்குக் கவர்ச்சி ஏற்படலாம். அவர் பயனில்லை. ஆ. 5 நம்பரே ஏற்றவர்.

பெ. 6: குட்டையான மழுங்கல் மூக்கு. பூனை மூக்குப்போல் சிறிது மேலே முட்டிட்டு மழுங்கியிருக்கும். நீங்கள் நற்குணமும் வசீகரமும் நிறைந்திருப்பீர்கள். கொஞ்சம் கலைச் சுவையும் பெற்றிருப்பீர்கள். உங்கள் சாந்த சுபாவத்தைக் கண்டு, பிறர் உங்களை ஆதிக்கம் செலுத்தப் பார்ப்பார்கள். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். கலை, இலக்கியங்களைப் படைக்கும் திறமை உங்களுக்கு இராது; அவற்றை விளக்கும் திறமை இருக்கும். உங்களிடம் யாருக்கும் பிரியம் விழும். உங்களுக்கு நல்ல பதவிகள் கிடைக்கும்; அரிய நண்பர்கள் கிடைப்பார்கள். தங்களுக்கு இன்னது வேண்டும் என்று பெரும்பாலான பெண்களுக்குத் தெரிவதில்லை. உங்களுக்கு வேண்டியதை நீங்கள் மிக நன்றாய் அறிவீர்கள். இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். துணிமணி, வீட்டு அலங்காரம் முதலியவற்றில் உங்களுக்குச் சுவை போதாது. சுவை உடையவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

எப்படிப்பட்ட ஆணும் உங்களிடம் அன்புகொள்வார். என்றாலும் ஆ. 1 நம்பரை மணந்துகொண்டால், நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழலாம்.

ஆ. 1: புராதன சிற்பங்களில் காண்பது போன்ற நேர் மூக்கு. நாசித் துவாரங்கள் பாலமிட்டது போல் சிறிது வளைந்திருக்கும். கிரேக்க சிற்பங்களின் புருவமும் இருந்துவிட்டால், இந்த மனிதருக்கு மிகுந்த வசீகரம் இருக்கும். பிறர் மனதை மிக நன்றாய்ப் புரிந்து கொள்வார். பெண்களுக்கு இவரிடம் அன்பு விழும். சிலசமயம் இவர் மனசு சலனமடையும். இவருடைய காதல் உறுதியாயிராது. இவர் கூச்சம் நிறைந்திருப்பார். அதை மறைக்க வீறாப்புப் பேசுவார். அது சில சமயம் சோமாளித்தனமாக முடியும். இவரோடு வாழ்வது கஷ்டம். ஆனால், இவரை அறிந்தபெண் - பெரும்பாலும் பெ. 3 நம்பர் - இவருடன் சௌக்கியமாய் வாழலாம்.

ஆ. 2: முட்டிட்டுப் பெரும்பாலமாய், கிளிமூக்குப் போல் இருக்கும். இவர் அறிவில் சிறந்தவராயிருப்பார். ஆனால், இவருக்கு உலக விஷயங்களே தெரியாமல் போகக் கூடும். ‘இவர் கடினசித்தக்காரர்; பொல்லாதவர். இவருடன் பழகுவது மகா கஷ்டம்’ என்றே பல பெண்கள் நினைப்பார்கள். உண்மை என்னவென்றால் இவருக்கு ஆசையிருந்தும் பிறரை நெருங்கத் தெரிவதில்லை. பிறர் தம்மிடம் வந்து பழகுவதிலே இவருக்கு ஆவல். முக்கியமாய்ப் பெண்களைக் கண்டால் இவருக்கு மிகுந்த கூச்சம். குடும்பத்தில் இவருக்குப் பற்று இராது. வேலையிலும், தம் மனத்தைக் கவர்ந்த விஷயங்களிலும் ஆழ்ந்து விடுவதால், கால அட்டவணைப்படி இவர் நடப்பதேயில்லை. தொண தொணக்காமல் நடந்து கொள்ளும் மனைவி கிடைத்தால், அவளுக்கு மிக நல்ல கணவராக இவர் அமைவார்.

ஆ. 3: இந்த மூக்கின் இரண்டு அம்சங்கள் மிகவும் விசேஷம். ஒன்று, மூக்குக்கும் புருவத்துக்கும் இடையே உள்ள ஆழ்ந்த கோணம்; இரண்டு, நாசித்துவாரங்கள் கச்சிதமாய்ச் சுழிந்திருப்பது. மூக்கின் கோணத்தினால் புருவங்கள் கரடுமுரடாயிருப்பதுபோல் தோன்றும். இந்த மனிதர் வீட்டிலே மிக நல்ல கணவராக இருப்பார். ஆனால், ஆபீஸிலே நிர்வாகத் தலைவராயிருக்கத் தகுந்தவர் அல்ல. பெ. 1. நம்பர் இவருக்கு மனைவியாக வாய்த்துவிட்டால், அவளிடம் மகா அன்பு பாராட்டுவார். அவளுடைய குடித்தனப் பாங்கைப் பெரிதும் வியப்பார். ஏனென்றால், வாழ்க்கையிலே காணும் நல்ல பொருள்களையெல்லாம் ரசிப்பவர் இவர். ஆனால், ஒரு வேடிக்கை: தம் உடம்பை அலங்கரித்துக் கொள்ள மாட்டார்; லௌகிக விஷயங்களைப் புரிந்து கொள்ள மாட்டார்; சம்பிரதாயங்களைவிட்டுச் சிறிதும் வழுவமாட்டார்; பெண்களிடம் பழகத்தெரியாமல் சிலசமயம் தத்தளிப்பார். இதனால், இவரைத் தங்கள் விரோதி என்று சில பெண்கள் நினைத்துவிடுவதுண்டு. உண்மையில், இவர் மிகவும் நியாயமாக நடந்து கொள்பவர்; பிறருடைய அன்புக்கு ஏங்குபவர்.

ஆ. 4: எலும்பில்லாத ரப்பர் மூக்கு இது. நீளம். மெல்லிசு. நாசித் துவாரங்கள் சிறுத்திருக்கும். மூக்கின் நுனிமட்டும் அகன்றிருக்கும். இவரை விருந்துக்கு அழைத்தால் வந்தவுடனே எல்லாருடனும் கலகலப்பாய்ப் பழகுவார். நீங்கள் பெ. 2 நம்பராக இருந்தால், இவர்

செய்வதெல்லாம் உங்களுக்குச் சரியாய்ப் போகும். எந்தப் பெண்ணுடனும் இவர் வெகு சீக்கிரம் பழகுவார்; சிநேகம் கொள்ளுவார். நீங்கள் பெ. 1 நம்பராக இருந்தால், இதிலே உங்களுக்குக் கோபம் வரும். அதனால் தொல்லைகளும் விளையும். உண்மையிலே இவர் ஏகபத்தினி விரதக்காரர்தாம்; உத்தமக் கணவராகவும் தந்தையாகவும் நடந்து கொள்ளக் கூடியவர். பிரமாதமான மூளை உள்ளவர் அல்ல; என்றாலும் செல்வாக்கும் தொழிலிலே வெற்றியும் பெறக்கூடியவர்.

ஆ. 5: இது உப்புச மூக்கு. 'பும்' என்று நுனி மூக்கு உப்பியிருக்கும். இவரைக் கணவராகவோ, எஜமானராகவோ பெற்ற பெண் அதிருஷ்டக்காரி. இவருக்குக் குடித்தனம் மகா அழகாய் நடக்கவேண்டும். ஆனால், மனைவி சிரமப்படக் கூடாது. இவர் சிறந்த அறிவாளி அல்ல. ஆனால், எதையும் புரிந்து கொள்ளுவார். தோழர்களுக்கு எப்போதும் உற்சாகம் அளிப்பார். அதிகமாகச் சம்பிரதாயம் பார்க்கமாட்டார். இவர் உங்களுக்குக் கிட்டியும் எட்டாமற் போனால், அது உங்கள் தவறே. ஏனென்றால், இவர் ஒரு முறை கொடுத்த வாக்கைத் தாமாக மீறுவதேயில்லை. இவரை மணந்தாலும் சரி, இவரிடம் உத்தியோகம் பார்த்தாலும் சரி, வாழ்க்கை ஒருபோதும் மந்தமாயிராது.

ஆ. 6: இந்த மூக்கிடம் மகா ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும். இது குட்டையாய் அகலமாயிருக்கும். மேல் நோக்கி நிமிர்ந்திருக்கும். விசாலமான நாசித் துவாரங்கள். கோம்பை நாய்த் தோற்றம் அளிக்கும். இதைக் கண்டாலே எச்சரிக்கை கொள்ளுங்கள். இவரை மணந்து கொண்டால், இல்வாழ்க்கையில் இவருக்குப் பூர்ண திருப்தி அளிக்கவேண்டும். இவர் மனங் கோணுதபடி நடந்து கொள்ள வேண்டும். உங்கள் ஆயுள் முழுதும் இவருடைய சுயநலத்துக்கு நீங்கள் அடிமையாக வேண்டும். இவருக்குச் சிறு பிள்ளைத் தனமும் பிடிவாதமும் நிரம்பியிருக்கும். இவர் எந்தச் சுமையையும் பிறர் தலையில் கட்டுவாரேயல்லாமல், தாம் சுமக்க மாட்டார். இவரிடம் சில நற்குணங்கள் உண்டு. இவர் சொன்ன சொல் தவற மாட்டார்; ஒளிக்காமல் பேசுவார்; யாரையும் ஏமாற்ற நினைக்க மாட்டார். இவருக்கு நல்ல மூளை. ஆனால், சிரமப்படாமல் இருக்க அதைச் செலவழிப்பாரே ஒழிய, தொழில் வெற்றி பெறவோ, படிப்பில் சிறப்படையவோ செலவழிக்க மாட்டார்.

'க்ஷேமம், க்ஷேமத்துக்கு எழுதவும்'

விக்டோரியா மகாராணிக்கு ஒன்பது குழந்தைகள். ஒவ்வொரு குழந்தைக்கும் தினந்தோறும் மிகவும் சுருக்கமாக அவள் கடிதம் எழுதுவாள். அது இவ்வளவு தான்:

"அன்புள்ள குழந்தாய்!

நான் சௌக்கியம். நீ மிகவும் சௌக்கியம் என்று நம்புகிறேன்.

உன் அன்புள்ள அம்மா"

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

அரசியல் மாறிவிட்டது; சுதந்திர சர்க்கார் ஏற்பட்டு விட்டது. கோடிக்கணக்கான ஏழை மக்களின் நிலைமையும் இதற்கு ஏற்றபடி மாறியாக வேண்டும்.

காலத்தின் எச்சரிக்கை

பாங்கேபிஹாரி ஸ்ரீவாஸ்தவ

பொன்னும் வெள்ளியும் பெட்டியிலே கொழிக்க, நெல்லும் கோதுமையும் களஞ்சியத்தில் மூட்டை மூட்டையாகக் கிடக்க, பட்டணங்களில் ஆலைகளும் கிராமங்களில் பண்ணைகளும் நடத்தும் முதலாளிகளைப்பற்றி இங்கே பேச்சில்லை. ஆயிரமும் ஐந்நூறுமாகச் சம்பளம் வாங்கிக் காரிலே திரியும் ஆபீசர்களைப் பற்றியும் பேச்சில்லை. அவர்கள் மின்சார விசிறியின்கீழ் உட்கார்ந்து உழைப்பாளிகளை அதட்டிவிட்டுப் போவார்கள். வாழ்க்கையிலே முன்னும் பின்னும் ஒன்றுமே இல்லாதவர்களைப் பற்றியே நான் பேசுகிறேன். காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரையில் மூளை தேய உழைத்துவிட்டு, முதல் தேதி 60-70 ரூபாய் வாங்கிக் கொண்டு போனால், பத்தாம் தேதி பத்துக் காலணக் கூடக் கையில் இருப்பதில்லை. படை பதைக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், வெட வெடக்கும் குளிரிலும் பொன் போன்ற மேனியைச் சிறிதும் சட்டை செய்யாமல் ஓடாக உழைத்தால் ஒருவனுக்கு முக்கால் ரூபாய் கிடைக்கிறது. வீட்டிலோ பெரிய குடும்பம்; கிழப் பெற்றோர் முதல் கைக் குழந்தை வரைக்கும்!

உலகத்தில் என்ன நடந்தால் அவர்களுக்கு என்ன? பெர்லின் பிரச்னையில் பிரிட்டனும் அமெரிக்காவும் என்ன முடிவு செய்தன? பாலஸ்தீனில் என்ன அரசியல் தந்திரம் நடக்கிறது? காஷ்மீர் கமிஷன் எப்போது வந்தது, எப்போது போயிற்று? பாகிஸ்தானில் என்ன நடக்கிறது? நேற்று ரேடியோவில் எந்த வித்வான் பாடினார்?— இந்த வளப்பமெல்லாம் அவர்களுக்கு என்? வயிற்றுப் பாட்டைக் கவனிக்கவே பொழுது இல்லை. பத்திரிகை வாங்கும் பணத்தில் ஏதாவது வீட்டுச் சாமான் வாங்கலாமே. உலகத்துச் செய்தி கிடக்கட்டும்; வீட்டிலே மனைவிக்கு எப்போது முதல் ஜுரம், குழந்தைக்கு இன்று எத்தனை தரம் பேதியாயிற்று முதலிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவே ஓய்வு இருப்பதில்லை! தங்கள் உடல்நிலையைக்கூட அவர்கள் கவனிக்க முடிவதில்லை!

சாமான்களின் விலையோ விஷ வேகத்தில் ஏறுகிறது. நமக்காகப் பொருளாதார நிபுணர்களின் கமிட்டி வேலை செய்கிறது. இரண்டு வருஷம் கழித்து அந்தக் கமிட்டியின் ரிபோர்ட்டு, “நூறு ரூபாய் இருந்தால் ஒவ்வோர் இந்தியனும் தன் குடும்பத்தைச் சரிவரக் காப்

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி : நவம்பர், '48), கல்கத்தா.

பாற்ற முடியும்'' என்று கூறு கிறது! "நிறையப் பசுமையான காய்கறிகளைச் சாப்பிடுங்கள். நெய் யும் பாலும் உண்டால் நோய் வராது. தக்காளி உடம்புக்கு நல்லது. ஆப்பிள் ரத்தவிருத்தி கொடுக்கும்'' என்றெல்லாம் படித் துப் படித்து நம் உள்ளம் பூரிக்கிறது. மார்க்கெட்டுக்குப் போனால் வீசை 12 அணவுக்குக் குறைந்து காய்கறி கிடைப்பதில்லை. பால் நெய்யோ, சொல்லவே வேண்டியதில்லை. சரியான உணவு இல்லாமல் தேகம் க்ஷீணித்துவிடுகி றது. புதிய புதிய நோய்கள் வரு கின்றன. டாக்டர் பில் தாங்க முடிவதில்லை. தர்ம ஆஸ்பத்திரி என்பது பேருக்குத்தான். பண முள்ளவர்களுக்கே அங்கே இடம்.

நமது சர்க்காரைத்தான் நாம் நம்பியிருக்கிறோம். நாம் தேர்ந் தெடுத்த தலைவர்கள் அரசாட்சி நடத்துகிறார்கள். நமது நோயின் லட்சணம் அவர்களுக்குத் தெரியும். வெளிநாடுகளைப்போல இங்கே கமிட்டிகள் நியமித்துப் பயனில்லை. கமிட்டியின் ரிபோர்ட்டு ஒரு வரு ஷம் கழித்து வரும். நமக்குப் பங் களா வேண்டாம்; கார் வேண்டாம். மனித ஜன்மம் எடுத்ததற்கு நமக்கு அடிப்படைத் தேவைக்கான வசதி கிடைத்தால் போதும். நம் நாட்டில் ஒவ்வொருவனுக்கும் சராசரி வருஷ வருமானம் ரூ. 198. இதைக் கொண்டு வருஷம் முழுவதும் எப்ப டிச் சாப்பிடுவது? எப்படி மானம் காத்துக்கொள்வது?

புதிய புதிய வரிகளையெல்லாம் முதலாளிகளின்மேல் போடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்தச் சுமையை நாமேதான் தாங்க வேண்டியிருக்கிறது. இப்போது நம் நகரங்களை லண்டனைப் போலவோ பாரிஸைப் போலவோ மாற்றவேண்டிய அவசியமே இல்லை. நகரத்தில் ரேடியோ ஸ்டேஷனே, டவுன் ஹாலோ, சினிமாவோ இல் லாவிட்டால் அக்கறை இல்லை. "நகர வாசிகளுக்கு இரண்டு வேளையும் சாப்பாடு கிடைக் கிறதா? அவர்களுக்கு உடுக்கத் துணியும், வைத்திய வசதியும், குழந்தைக்குப் படிப்பு வசதியும் கிடைக்கின்றனவா?'' என்பது தான் முக்கிய விஷயம். நகர முன் னேற்றத்துக்காகச் செய்யும் முயற் சியில் நூற்றில் ஒரு பங்குகூட இன்று கிராம முன்னேற்றத்துக் காகச் செய்வதில்லை. கிராமங்களின் பெருமையை மறந்து, நகரங்களை விஸ்தரிக்கிறார்கள்.

முதலாளிகளே, ஜனங்கள் சோறின்றித் தவிக்கையில், நீங்கள் விருந்திலும் சினிமாக் கொட்டகை கட்டுவதிலும் பணத்தை வீண்செலவு செய்கிறீர் கள். கிராமத்தில் கிணறு கட்டச் சுண்ணும்போ சிமிட்டியோ கிடைப் பதில்லை; சினிமாக் கொட்டகை கட்டுவதற்கு மட்டும் சிமிட்டி மூட்டை மூட்டையாக அனுப்புகிறீர் கள். ஏற்கனவே உங்கள் நகரத் தில் எழெட்டுச் சினிமாக் கொட் டகைகள் இருக்கும்; இவற்றை இன்னும் பெருக்கி நீங்கள் யாருக்கு என்ன நன்மை செய்யப்போகிறீர் கள்? விலையேற்றம், கள்ள மார்க் கெட், பொருள் பதுக்கம் - இதெல் லாம் உங்களுடைய அருள்விழி யின் விளைவுதான். காலப்போக்கைக் கவனித்து நீங்களாக மாறினால் நல்லது. இல்லாவிட்டால் பயங்கர மான புரட்சி ஏற்பட்டு, அதில் உங்களுடைய செல்வம் துரும்பாய்ப் பறந்துபோகும். சாகத் துணிந்தவ னுக்குச் சமுத்திரம் முழங்கால்!

கிரிக்கெட் விநோதம்

ஹேர்பேர்ட் பார்ஜியான்

இது கிரிக்கெட் ஸீஸன். இந்தியக் கோஷ்டிக்கும் வெஸ்ட் இண்டீஸ் கோஷ்டிக்கும் நடக்கும் டெஸ்ட் மாட்ச் பற்றித் தினப் பத்திரிகை, அ. இ. ரே, பி பி. ஸி.. இன்னும் உலகத்து ரேடியோக்கள் ஆகிய எல்லாம் ஓயாமல் செய்தி பரப்பிக்கொண்டிருக்கின்றன. ஆனால், கிரிக்கெட் ஆட்டத்திலே திறமை கால் பங்கானாலும் ஸ்டைல்' முக்கால் பங்கு வேண்டும். அதைத் தமாஷ் செய்கிறார் இந்தக் கட்டுரையாளர்.

புதிசாகக் கிரிக்கெட் ஆடக்கற்றுக் கொள்பவர்களுக்காக நிபுணர்கள் எத்தனையோ பேர் புத்தகம் புத்தகமாக எழுதிக் குவித்திருக்கிறார்கள். ஆனாலும் என்னைப் போல் அரைகுறை ஆட்டக்காரனுக்கு வேண்டிய தகவல் எந்தப் புத்தகத்திலும் இல்லை; இதுதான் பெரிய குறை. எட்டுச் சுரைக்காயை நம்பினால் பிரயோஜனமில்லை என்று அநுபவத்தில் கண்டுகொண்டேன். பந்தடிப்பதோ (பாட்டிங), பந்தை எறிவதோ (பௌலிங), அதைப் பிடித்துத் திருப்பி வீசுவதோ (பீல்டிங்) எதிலும் நான் முன்னேறியிருப்பதாகத் தெரியவில்லை. கிரிக்செட் ஆட்டக்காரன் என்றால் இந்த மூன்று மட்டும் தெரிந்துவிட்டால் போதாது. பந்தை எப்படிப் பிடிப்பது என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதைப் பிடித்த பிறகு என்ன செய்வது என்றுதான் தெளிவாகப் புரியவில்லை. இதைப்பற்றி எனக்கு பற்றவர்கள் சொன்னதமில்லை; புத்தகங்களிலும் ஒன்றும் காணோம்:

பந்தைப் பிடிப்பது (காட்ச்) என்றால், ஜயித்தமாதிரிதானே? அந்த மாதிரி சமயங்களில் நாம் விநயமாக நடந்துகொள்வதா? அல்லது ஆர்ப்பாட்டம் செய்வதா? பிடித்த பந்தை அப்படியே கொஞ்சநேரம் வைத்துக்கொண்டிருப்பதா? அல்லது அதை உடனே பௌலரிடம் திருப்பி வீசிவிடுவதா? ஜனங்கள் நமக்கு உற்சாகமூட்ட ஆரவாரம் செய்வார்களே; அப்போது ஒருதரம் திரும்பிப் பார்த்து, தாழ்ந்து அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதா? வேண்டாமா? - கிரிக்செட்டும் ஒரு தமாவ்தானே; அதை ஆடுபவர்களும் நடிக்க வேண்டியதுதான்.

விக்கெட்டுக்கு மட்டை தாங்கி நடக்கும் மோஸ்தர்

காப்பிரைட்: பிக்சர் போஸ்ட் (ஆங்கிலம்: 15-11-'48) தி. நகர், சென்னை.

சில பேர் பந்தைப் பிடித்ததும் அதைத் தலைக்குமேல் தூக்கி எறிந்து மறுபடியும் பிடிப்பார்கள். 'முதல் தடவை ஏதோ குருட்டாம் போக்கில் பிடித்து விடவில்லை; தெரிந்துதான் பிடித்தோம்' என்று காட்டிக் கொள்வதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள். நானும் ஒரு தரம் இப்படித் தூக்கிப் போட்டிருக்கிறேன். ஆனால் என் துரதிருஷ்டம், அதைப் போட்டதும் சூரிய வெளிச்சத்தில் மேலே பார்க்க முடியவில்லை. மீண்டும் திரும்பிய பந்து நேராக என் தலை மேல் வந்து விழுந்ததுந்தான் விஷயம் தெரிந்தது; அப்புறம் எங்கே விளையாடுவது?

மறுபடி எறிந்த பந்து

அடுத்தபடியாக, 'விக்கெட்'டை நோக்கிச் செல்லும்போது எப்படி மட்டையை எடுத்துக்

'மட்டையைச் சரியாகப் பிடி'

கொண்டு போவது? துப்பாக்கியைப்போல் தோளில் வைத்துக் கொள்ள வேண்டுமா? கைத்தடி போல் ஊன்றிக் கொண்டு போவதா? குடை மாதிரி அக்குளில் அடக்கிக் கொள்வதா? - எது சரியான முறை?

நான் இப்படியெல்லாம் செய்து பார்த்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் வேண்டுமென்றே செய்கிறோம் என்று படுகிறதே யொழிய இயற்கையாகப் படவில்லை. ஒரு சமயம் மட்டையை அக்குளில் வைத்துக்கொண்டு விக்கெட்டை நோக்கிப் புறப்பட்டேன். பார்ப்பவர்கள், 'ஏது, ஆசாமி கிரிக்கெட்டில் கை தேர்ந்தவன் போல் இருக்கிறது! கணக்காக, இங்கே வந்து க்ளவ்ஸ் போட்டுக் கொள்கிறான் பார்' என்று ஆச்சரியப்பட வேண்டாமா? - அதற்காக நடந்து கொண்டே, க்ளவ்ஸ் போட்டுக் கொண்டேன். ஆனால் என் இடத்துக்கு வந்ததும் பார்த்தால் அக்குளில் மட்டையைக் காணோம்! அது விக்கெட்டுக்கும் கிரிக்கெட் மண்டபத்துக்கும் நடுவில் எப்போதோ நழுவி விழுந்துவிட்டது. இப்படி நேர்ந்தால் அப்புறம் நம் பாடு ஆபத்துத்

'டக்' அடித்து விட்டார்

தான்; பந்து எறிபவன் நம்மைத் திணற அடித்துவிடுவான்.

'அவுட்' ஆனதும் மண்டபத்தை நோக்கி எப்படிப் போவது என்பதும் பெரிய பிரச்னைதான். பந்தைக் கோட்டை விட்டால் பல்லை இளிக்கவேண்டுமோ? இல்லாவிட்டால், அப்படி நேர்வது சர்வ சகஜம் என்பதுபோல் முகத்தை வைத்துக் கொள்வதா? பேசாமல் பந்து மட்டையைக் காலிடுக்கில் வைத்துக் கொண்டு நழுவிவிடுவதா?

ஒரு ஸெஞ்சுரி அல்லது நூறு ஓட்டம் எடுத்ததும் கடைசிக் கொஞ்ச தூரம் மண்டபத்தை நோக்கி ஓடுவதுதான் சரி. நூறுக்கு மேல் ஆகிவிட்டது என்று நமக்கு நிச்சயப்படலாம் அல்லவா? அதே சமயம் ஜனங்கள் கரகோஷம் செய்வதைக் கேட்டாலும் காது புளித்துப் போய்விடும். அதனால் சற்றுத் தள்ளிப் போவது நல்லதுதான்.

கூடவே ஓட்டம் அதிகப்படியாக எடுத்துவிட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் நம்மைப் பின்னும் உற்சாகப்படுத்த ஜனங்கள் கரகோஷம் செய்வார்கள். அப்போது நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இதுவும் எனக்குப் புரியவில்லை.

இன்னும் ஒரு விஷயம்: மட்டையை வைத்துக்கொண்டு தயாராக இருக்கும்போது, அம்பயர், 'மட்டையைச் சரியாக நிமிர்த்திப் பிடி' என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? பட்டென்று பதில் கொடுத்துவிடுவதா? அல்லது பேசாமலே பொறுத்துக் கொண்டு மனம் குன்றுவதா?

நான் எப்போது ஆட்டம் ஆடப் புறப்பட்டாலும் அதற்கு முன்னால் ஒரு மணி நேரம் மட்டையைச் சரியாகப் பிடிக்கப் பழகிக்கொள்வேன். இப்படிச் செய்தும் ஒரு சமயம் ஆட்டம் ஆரம்பமானவுடன், "மட்டையைச் சரியாகப் பிடி" என்று சொல்லி என் மானத்தை வாங்கி விட்டார், ஐயா, அந்த அம்பயர்!

ஆட்டத்தின் நடுவிலும் ஒரு தடவை அவர் இந்த மாதிரியே சொன்னார். இப்போது பந்தைச் சரியாக அடித்து நிறுத்தி விட்டேன் போலிருக்கிறது; அந்த ஜோரில், "எனக்கு அதைப் பற்றி யெல்லாம் அக்கறையில்லை. என் வேலை, விக்கெட் கொம்பின் மேலேயோ கீழேயோ பந்து படாத படி பார்த்துக்கொள்ள வேண்டியது; அவ்வளவுதானே?" என்று சுடச் சுடப் பதில் கொடுத்து விட்டேன்.

அப்புறந்தான் என் மனத்துக்கு நிம்மதி ஏற்பட்டது.

•••○@○•••

பிரயாணச் சிங்காரம்

படுக்கையறையை நோக்கி, "என்ன, கடைசித் தடவையாகக் கூப்பிடுகிறேன். நீ இன்னும் புறப்படத் தயார் ஆகவில்லையா?" என்று கத்தினார் கணவர்.

"இங்கே பாருங்கள், கொஞ்சம் சும்மா இருக்க மாட்டீர்களா? நான்தான் ஒரு மணி நேரமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறேனே, 'இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்' என்று; காதில் விழவில்லையா?" என்றாள் மனைவி.

— 'பர்ரோ'

பூமியே அழகு பொலிந்து, பொருள் கொழிக்கும் இந்தப் பருவ காலத்தைத் தென்னுடெங்குமே கொண்டாடுகிறார்கள்.

பொங்கல் பண்டிகை

கிரிபாலே

அன்புள்ள தங்கச்சி,

உன் கடிதம் கண்டு மிகவும் சந்தோஷம். வரும் வெள்ளிக் கிழமை சங்கராந்தி பண்டிகை. இங்கே அதைப் பொங்கல் என்று சொல்லுவார்கள் என்பது உனக்குத் தெரியும். நீ இப்பொது புதிய ஊர்க் காரியாகிவிட்டாய். ஜனவரி பண்டிகை கொண்டாடும் சமயமும் இதுவேதான். நம் ராஜுவும் வழக்கப்படி காலண்டர் சேர்ப்பதில் முனைந்திருக்கிறான். ஆனால் நான் உனக்கு எழுத வந்தது அதைப் பற்றி யல்ல. நீ இதுவரையில் எங்களுடன் இருந்தாய். நமது கிராமத்தில் பொங்கல் பண்டிகை என்றால், முதல் நாளே வீட்டைச் சுத்தம் செய்து மெழுகி மாக்கோலம் இட்டு மாவிலைத் தோரணம் கட்டுவோம்; சாமான்கள் சேகரிப்போம். இதை யெல்லாம் நீ மறந்திருக்க முடியாது. சென்ற வருஷம் நீ எங்களுடன் இங்கே இருந்து சங்கராந்தி பண்டிகை கொண்டாடியதை அத்திம்பேர் இன்றுகூட நினைத்துக்கொண்டார். "அவளுக்கென்ன? பெரிய மனிதர் வீட்டு நாட்டுப் பெண். நம்மையெல்லாமா நினைத்துக் கொள்ளப் போகிறாள்?" என்றார். நாம் எல்லாரும் மலைக்குப் போய்விட்டு வரும் பொழுது வண்டி விழுந்து தவித்தது மறந்து போய்விடுமா என்ன? இதெல்லாம் இருக்கட்டும். முக்கியமான விஷயத்தை விட்டு, எதையோ வளர்த்திக் கொண்டு போகிறேனே. இதைப் பார்த்தால் அத்திம்பேர் மிகவும் கோபிப்பார். "கடிதம் எழுதினால் நான் சௌக்கியம், நீ சௌக்கியம் என்று என்ன எழுத்து? படிக்கத் தக்க விஷயம் ஏதாவது வேண்டாமா?" என்பார். அது நியாயம் என்றே எனக்கும் தோன்றுகிறது.

நான் எழுத வந்தது சங்கராந்தி பண்டிகையைப் பற்றி. நீ இதுவரையில் அம்மாவிடமோ என்னிடமோ குழந்தையைப்போல் இருந்துவிட்டாய். உலக விவகாரங்களைப் பற்றியோ வீட்டு விஷயங்களைப் பற்றியோ நீயும் கவலைப் பட்டதில்லை; நாங்களும் உன்னிடம் சொல்லியதில்லை. உண்மையில் சங்கராந்தி பண்டிகையை ஏன் கொண்டாடுகிறோம் என்று உனக்குத் தெரியுமா?

இதை 'உத்தராயண புண்ணிய காலம்' என்று சொல்லுவது வழக்கம். உங்கள் மைசூரில் 'மகர சங்க்ரமணம்' என்று சொல்லுவார்கள். 'சூரியன் மகர ராசிக்கு வருகிறான்' என்று அதற்குப் பொருள். ஐப்பசியில் அடைமழையும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஊதைக் காற்றும் மிகுந்திருக்கும். அவை பீடையுள்ள மாதங்கள். அவற்

மூலம்: கதாவளி (கன்னடம்: ஜனவரி '48), பெங்களூர்.

திலே மழை, காற்று, பனி முதலிய வற்றால் அடிபட்டுப் பயிர் பச்சைகள் சூரியவெளிச்சத்துக்காக ஏங்கிக் கிடக்கும். நாமும் உலராத துணி, ஈர விறகு, ஜலதோஷம், இருமல், ஜுரம் இவற்றுடன் போராடிக் கொண்டு தை பிறப்பதற்குக் காத்துக் கிடப்போம். தை மாதம், நாட்டுக்கே மங்களத்தைக் கொண்டு வரும் மாதம்; வயல்களிலே கதிர் சாய்ந்து அறுவடைக்குத் தயாராக நிற்கும் மாதம்; மக்கள் தானியங்களைக் குவித்துக் கை நிறையப் பணம் சேர்த்து வயிறு நிறையச் சாப்பிடும் மாதம்; பூச்சி புழுக் களை அண்டவிடாமல் காக்கும் சக்திவாய்ந்த பசு மஞ்சள் குவியும் மாதம்; தென்னை, வாழை முதலிய மரங்கள் எல்லாம் காய்த் துக் குலுங்கும் மாதம். தண்ணீரைக் கண்டு செழித்துக் காய்த்துக் குலுங்கும் பயிர் பச்சைகளைப் பாழாகாது பாதுகாக்கும் தேவதை போல் பிறப்பது தை மாதம். இது நம் நாட்டிலே குடியானவர் முதல் தொழிலாளிவரை அனைவரும் ஆவ லுடன் வரவேற்கும் கல்யாண மாதம்; வீடு கட்டுவோர், கல்யா ணம் செய்வோர், புதுத்தொழில் தொடங்குவோர் ஆகிய எல்லாரும் விருப்பத்துடன் வரவேற்கும் மாதம்; பயிர் பச்சை மட்டும் அன்றி மக்களும் வியாதி வெக்கையின்றிச் சுகமாய் வாழும் மாதம். மகர ராசியில் தோன்றும் சூரிய வெப்பம் மிகவும் ஆரோக்கியமானது என்று ஆராய்ச்சியாளர் இன்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆகவே, சங் கராந்தி பண்டிகை நமக்கு மட்டுந் தான் என்று நினைத்துவிடாதே, தங்கச்சி. மங்களத்தை வரவேற் பதில் ஜாதி மதம், ஏழை பணக் காரர், சிறியவர் பெரியவர் என்ற வேற்றுமைகள் உண்டா? சங் கராந்தி நாட்டுக்கே உயர்ந்த பண் டிகை. அவரவர் சக்தி சௌகரியங் களுக்குத் தகுந்தபடி எல்லாரும் அதைக் கொண்டாடுகிறார்கள்.

யதேஷ்டமான கரும்புப் பயிர் விளைந்திருக்கும் இந்தக் காலத்தில் மக்களுக்கு ஆரோக்கியத்தையும் நாட்டிக்கு வளத்தையும் தரும் சூரிய பகவானை எந்த விதத்தில் தான் பூஜை செய்யக்கூடாது? கரும்பு, இளந்தேங்காய், மஞ்சள் கொத்து இவற்றைக் கட்டிப் பொங் கல் பானை வைக்கும் வழக்கம் உனக்குத் தெரியும். வீட்டுக்கெல் லாம் வெள்ளை அடித்துக் காவியும் சுண்ணும்பும் பட்டையாகப் பூசு வதை ஒவ்வொரு வருஷமும் நீ பார்த்ததில்லையா? செழிப்பான இந்த நாளிலே எந்தக் காய்கறிக்கும் நம் ஊரிலே குறைவில்லை. எல்லாக் காய்களையும் போட்டு ஒரு கூட்டுச் செய்வோமே நம் வீட்டில்; அது உனக்குக்கூட மிகவும் பிடிக்கும். ஆனால், இப்பொழுது உன் புக்கக வழக்கத்தை அல்லவா நீ கொண் டாட வேண்டும்?

நீ புகுந்த ஊர் வழக்கமும் எனக்குக் கொஞ்சம் தெரியும்; உனக் குத்தான் அது புதியதாக இருக் கும். அம்மாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. தை பிறந்தபின் பீடாபரிகாரமாகவே பொங்கலுக்கு மறுநாள் கனுப்பிடி வைக்கிறோம். அது உன் புக்ககத்திலும் உண்டு என்று எனக்குத் தெரியும். அதைத் தவிர, 'எள்ளுப் பிறவது' என்ற புதிய வழக்கம் ஒன்று வரும், பார். அது ஒன்றும் பிரமாதமில்லை; பயந்துவிடாதே! அதுவும் பீடா பரிகாரந்தான். வெளுப்பாகத் தேய்த்த எள்ளைப் பொறித்து,

மனிதனின் உயிருக்குயிரான ஜீவ அணுக்களே அவனுக்குச் சத்துருவாய் மாறுமா? மாறமாட்டா என்றுதான் நாம் நினைப்போம். ஆனால் மாறுகின்றன. அதன் விளைவே—

கான்ஸர் நோய்

கே. வி. ஷெணாய்

கொடுமையான நோய்களுள் ஒன்று 'கான்ஸர்'. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த நிபுணர்கள் கூடச் சில வேளைகளில் இந்த நோயைக் கண்டுபிடிப்பதில் ஏமாந்து போய் விடுவார்கள். மக்களில் எவ்வளவு பேர் இதனால் கஷ்டப்படுகிறார்கள், எத்தனை உயிருக்கு இதனால் அபாயம் வந்தது என்று கண்டுபிடிப்பதும் கஷ்டம். சுமார் இருநூறு பேரில் ஒருவர் இதனால் சாகிறார்கள் என்று சொல்லலாம். தேகத்தில் இது உண்டாகிற பாகத்தில் அரித்துக்கொண்டே வந்து வர வரப் பரவித் தேகமெல்லாம் ரணமாகிக் கடைசியில் உயிரே போய் விடுகிறது. இந்த நோய் மனிதர்களுக்கு வருவதை ஆராய்ந்திருக்கிறார்களே ஒழிய, மற்றப் பிராணிகளுக்கு வருகிறதா என்பதை இன்னும் ஆராய முடியவில்லை. இதை அடியோடு ஒழிக்கும்படியான மருந்தும் அதிகம் இல்லை.

தேகத்தின் எந்தப் பாகத்திலும் கான்ஸர் உண்டாகலாம். இது சில சமயம் நம் கண்ணுக்குப் படாமல் தேகத்துக்குள்ளே வரும்; சில சமயம் வெளியிலும் தோன்றும். உதடு, நாக்கு, குடல், பித்தப்பை முதலிய இடங்களில்தான் அநேகமாக உண்டாகும்.

'கான்ஸர்' ஏன் உண்டாகிறது? எப்படி? காரணங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நம் தேகத்தில் ஜீவ அணுக்கள் இருக்கின்றன. அவை நமக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு இருந்தால்தான் ஆரோக்கியம். சில சமயம் இந்த அணுக்கள் பெருகி மளமளவென்று விருத்தியடைந்து விடுகின்றன. இவை அதிகரித்தால் சும்மா இருப்பதில்லை; படை எடுப்பதுபோலக் கிளம்பிவிடும். தேகத்தில் ஒவ்வோர் இடமாகச் சென்று நுட்பமான உள் உறுப்புக்களையெல்லாம் முற்றுகை போடுகின்றன; அகப்பட்டதை எல்லாம் அரித்துத் தின்று விடுகின்றன. இந்த ஜீவ அணுக்கள் ஓரிடத்தில் இப்படிக் குவிந்து வளர வளரப் பக்கத்தில் உள்ள பகுதிகள் பலவீனமடைந்து விடுகின்றன. அங்கே உள்ள அணுக்களும் இவற்றுடன் சேர்ந்துகொண்டு வரிசையாக முண்டு முண்டாகக் கிளம்புகின்றன. நாளடைவில் தேகம் பலம் குன்ற, வியாதி பலத்துவிடும். அணு வளர்ச்சி அதிகமாகி வியாதி முற்றுகிற பாகத்தில் அரிப்பு உண்டாகிச் சருமம் மெலிந்து புண்ணாவதுடன், அங்கே ஓட்டை விழுந்து உள்ளே இருக்கும் முண்டின் முளை சர்மத்துக்கு வெளியே கிளம்பி உபத்திரவம் தரும்.

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம் : 14-11-'48), பெங்களூர்.

நாளுக்கு நாள் வளரும் இந்த மூண்டு கடைசியில் அழுகிப் போய் ஊன் நீர் வடியும். தேகத்தின் சகல அங்கங்களின் வேலையும் நின்று விடுவதால், ஆரோக்கியம் குலைந்து, பசி கெட்டு, தூக்கம் ஒழிந்து, ஜுரம் உண்டாகித் தேகம் துரும்பாக இளைத்துவிடும். கடைசியாக உயிருக்கே சேதம் நேர்கிறது.

பல காரணங்களால் கான்ஸர் உண்டாகலாம். உடம்பின் ஓர் உறுப்பு நாட்பட்ட வியாதியில் அடிபட்டுப் பலவீனமடைவதனாலும், உடம்பிலே காயம் பட்டபோது சரியான சிகிச்சை செய்யத் தவறுவதாலும் கான்ஸர் தோன்றலாம். இடுப்பில் துணியை இறுக்கிக் கட்டுவதால், அது உண்டாகலாம். புகையிலை போடுவதாலும் சுண்ணும்பை அதிகமாய் உபயோகிப்பதாலும் பல்லிலும் நாக்கிலும் கான்ஸர் கிளம்பலாம். ஆகாரக் கோளாறுகளால், பித்தப்பையிலும் குடலிலும் அது தோன்றலாம். இவையெல்லாம் போக வேறு விதமாகவும் கான்ஸர் உண்டாகலாம். ஆராய்ச்சியாளர்களுக்கே அவை நிச்சயமாய் விளங்கவில்லை.

பின்வரும் அடையாளங்களைக் கண்டால், ஒருவேளை கான்ஸராக இருக்குமோ என்று சந்தேகிக்க இடம் உண்டு:

(1) தேகத்தின் எந்தப் பாகத்திலாவது கட்டி, சிரங்கு அல்லது சாதாரண வீக்கம் இருந்து, அதற்கு வைத்தியம் செய்யும்பொழுது நாளுக்கு நாள் குணம் தெரியாமல் வளர்ந்து வருவது.

(2) முலைக் காம்பிலிருந்து அடிக்கடி ஊன் நீர் வடிவதுடன் அங்கத்திலே அவலட்சணக் குறிகளும் தோன்றுவது.

(3) எந்த விதமான காயமும் குணப்படாமல் படர்வது.

(4) மச்சமோ மருவோ இருந்தால் அது ஒரே மாதிரி இராமல் அடிக்கடி நிறம் மாறுவது அல்லது உரு மாறுவது.

(5) நீடித்த ஜலதோஷம்; நீடித்து நெஞ்சு கட்டிக்கொள்வது.

(6) கெட்டியான ஆகாரத்தை விழுங்கக் கஷ்டப்படுவது.

(7) உடல் இளைத்துக் கனம் குறைவது.

(8) எந்த அங்கத்தின் மூலமாவது அடிக்கடி ரத்தம் வெளி வருவது.

இந்த அடையாளங்கள் தோன்றினாலும், உடம்பிலே ஏதேனும் மூண்டு புறப்பட்டாலும், உடனே வைத்தியரிடம் காட்ட வேண்டும். அலட்சியமாய் இருக்கவே கூடாது; பயப்பட வேண்டியதும் இல்லை. கான்ஸர் எல்லாரையும் ஏமாற்றும் நோய். கான்ஸரா, வேறு வியாதியா என்ற சோதனையை முற்றும் வைத்தியருக்கே விட்டுவிட வேண்டும்.

இந்தக் கொடிய நோய்க்கு வைத்தியம் உண்டா? இது குணமாகுமா? "ஆரம்ப காலத்திலேயே தகுந்த வைத்தியம் செய்தால் கட்டாயம் குணமாகும். எந்த விதமான கான்ஸரையும் குணப்படுத்த முடியும். ஆனால் சரியான காலத்தில் மக்கள் எங்களிடம் வருவதில்லை. நோய் முற்றிக் கைவிட வேண்டிய சமயத்தில்தான் அவர்கள் எங்களை நாடுகிறார்கள். என்ன செய்வது?" என்கிறார்கள் வைத்திய நிபுணர்கள்.

'ரேடியம்' என்னும் அற்புத வஸ்துவை முனையில் கொண்ட ஊசிதான் கான்ஸருக்கு மருந்து.

இந்த ஊசியைக்கொண்டு தேகத்தில் உள்ள கான்ஸர் பூண்டைச் சுட்டெரிக்க முடியும். இப்போது 'எக்ஸ் ரே' படம் பிடித்துப் பார்த்து, ஆபரேஷன் மூலமும் குணமாக்குகிருர்கள்.

நம் நாட்டில் கான்ஸருக்கு வைத்தியம் செய்யும் இடங்கள் தனியாகப் பல இல்லை. 'டாடா ஞாபகார்த்த கான்ஸர் ஆராய்ச்சி ஆஸ்பத்திரி' என்று பெயர் பெற்ற வைத்தியசாலை ஒன்றுதான் இடம்; உலகத்திலேயே அது பிரசித்தம். அங்கே கான்ஸரைக் குணப்படுத்துவதோடு ஆராய்ச்சி செய்வதற்கும் வசதிகள் உண்டு. கான்ஸர் வைத்தியத்தில் மிகவும் அநுபவமும் திறமையும் வாய்ந்த டாக்டர் வீ. ஆர். காஞேல்கர் இதன் டைரெக்டராக இருக்கிருர்.

ரெயிலில் அனுப்பிய சாமான்

சென்ற டிசம்பரில் தனுஷ்கோடியிலிருந்து ராஜமகேந்திர புரத்துக்குப் புறப்பட்ட என் நண்பர் ஒருவர் தம் சாமான்களை ரெயில் லக்கேஜில் போட்டார். அவர் இங்கே வந்து சேர்ந்தார். ஆனல், அவருடைய சாமான்கள் வந்து சேரவில்லை. இரண்டு மாத காலம் ஓயாமல் விசாரித்தும் சாமான் போன இடமே தெரியவில்லை. பிறகு, திடீரென்று ஒரு நாள் ஒரு ரெஜிஸ்டர் தபால் வந்தது. அவருடைய சாமான் தனுஷ்கோடியில் பல நாள் கிடந்ததற்கு அபராதமாக டெமரேஜூம், அது இப்போது நாகபுரி போய்ச் சேர்ந்ததற்குரிய அதிகப்படிக் கட்டணமும் உடனே செலுத்தும்படி தாக்கீது இருந்தது அந்தத் தபாலில்.

சாமான் எப்படியாவது வந்து சேர்ந்தால் போதும் என்ற கவலையால், நண்பர் அந்தக் கட்டணங்களையும், ராஜமகேந்திரபுரத்துக்கு அது மீண்டும் வருவதற்குரிய கட்டணத்தையும் செலுத்தினர். தம்மீது குற்றமில்லாதிருந்தும் இத்தனை தண்டமும் செலுத்தினர். மனுப் போட்டால் 'ரீபண்ட்' கிடைக்கும் என்று சொன்னர்கள். அப்படியே மனுப் போட்டார். மாதம் பத்தாயிற்று. திரும்பத் திரும்ப எழுதினலும் பதிலே கிடையாது. சில சமயம் நண்பர் ரெஜிஸ்டர் தபால் எழுதுவார். அப்போது மட்டும் ஒரு பதில் வருகிறது; "விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது" என்ற பதில்!

—ராம்ப்ஸ், 'ஸ்வதந்த்ரா'.

நாயரும் காந்தியும்

1921 - ஆம் ஞூ டில்லியில் ஸர் சங்கரன் நாயர் தலைமையில் ஒற்றுமை மகாநாடு நடைபெற்றது.

காந்திஜி உள்ளே வந்தார். இது நாயருக்குப் பிடிக்கவில்லை.

"ஒன்று, நீங்கள் வெளியே போக வேண்டும்; அல்லது, நான் வெளியே போக வேண்டும்" என்ருர் நாயர்.

காந்திஜி தமது வழக்கமான புன்சிரிப்புடன், "நாம் இருவருமே போக வேண்டியதில்லை. ஏனென்ருல், நாம் இருவருமே இந்தியர்கள்" என்ருர்.

—நீல்கன் பெருமாள், 'ஸ்தந்த்ரா'.

காந்திக் கிழவி

கோபாலசந்திர ராய்

மகாத்மா காந்தியின் கட்டளையை அப்படியே பின்பற்றியவள் மாதங்கினி தேவி. மேதினீபுர் ஜில்லாவிலுள்ள ஆலிலான் கிராமத்தில் இந்தக் கிழவி வசித்து வந்தாள். சிறு வயதிலேயே இவள் விதவையாகி விட்டாள். 1930 - இல் இந்தியா முழுதும் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாயிற்று. அப்போது இவள் தன் ஊரில் காங்கிரஸ் தொண்டர்களுக்கு வேண்டிய உதவி செய்தாள். அதற்கு முன் வாதரோகம் இவளைப் பீடித்தது; அதனால் அபினிப் பழக்கம் ஏற்பட்டது. சத்தியாககிரகம் ஆரம்பமானவுடன் அந்தப் பழக்கத்தை அடியோடு விட்டு விட்டாள். தெய்வச்செயலாக வாதரோகமும் அதோடு நின்றுவிட்டது. மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தில் மாதங்கினி தேவி அக்கறை செலுத்தினாள். மதுவிலக்குப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டாள். 1932 - இல் சட்டமறுப்பு மறுபடியும் தொடஙகினபோது இவளும் கலந்து கொண்டாள். முதலில் போலீசார் 'தள்ளாத கிழவி' என்று இவளை விட்டுவிட்டார்கள். 1933 - இல் வங்காள கவர்னர் ஒருவர் தம்லுக்குக்கு விஜயம் செய்தார். அப்போது கிழவி அவருக்கு எதிரே கறுப்புக்கொடி காட்டிக்கொண்டு வந்தாள். இந்த முறை அவளைக் கைது செய்தாகள்; ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள். சிறையிலிருந்து திரும்பியதும் அவள் முன்னைவிட அதிகமாகக் காங்கிரஸ் அலுவல்களில் ஈடுபட்டாள். தனக்கு உடம்பு சரியாக இராவிட்டாலும் கிழவி மருந்து சாப்பிடமாட்டாள். மகாத்மாவின் பெயரைச் சொல்லி ஓர் உத்தரணி ஜலம் உட்கொள்வாள். உடம்பும் குணமாகும். அதனால் எல்லாரும் அவளைக் 'காந்திக் கிழவி' என்று அழைத்தார்கள். கிழவி மட்டும், "நான் ஜுரம் வந்து சாகமாட்டேன், பாருங்கள்; தேச சேவையில்தான் பிராணனை விடப் போகிறேன்" என்று அடிக்கடி சொல்வாள். அவள் வாக்குப் பலித்தவிட்டது.

★ ★ ★ ★ ★

நாம் பெற்ற சுதந்தரம் பிரிட்டிஷாரின் தானம் அல்ல. இதோ இந்த வீரக்கிழவியைப் போன்ற பலர் செய்த தியாகத்தின் பலனே அது.

★ ★ ★ ★ ★

1942 - இல் ஆகஸ்ட் இயக்கம் ஆரம்பமாயிற்று. வங்காளத்தில் மேதினீபுர் ஜில்லா முன்னணியில் நின்றத. தம்லுக் தாலுகாவில் போலீசாரின் அட்டூழியம் சொல்லி முடியாத. செப்டம்பர் 23 - இல் சுமார் 5000 தொண்டர்கள் ஐந்து பிரிவாகப் பிரிந்து, தம்லுக் கச்சேரியை நோக்கிச் சில பேரும்

மூலம் : பாரத வர்ஷ (வங்காளி : நவம்பர் '48), கல்கத்தா.

போலீஸ் தாணவுச்குச் சில பேரு மாகப் புறப்பட்டார்கள். அதில் ஒரு பிரம்மாண்டமான கூட்டத்துக்கு இந்த 73 வயதுக் கிழவி தலைமை வகித்தாள். ஹிந்துக்களும் முஸ்லிம் களும் வேற்றுமை இல்லாமல் அதில் கலந்து கொண்டார்கள். மாதங்கினி தேவி ஒரு கையில் சங்கும் மற்றென்றில் தேசியக் கொடியும் தாங்கி வந்தாள். வான புகுர் என்ற இடத்துக்கு அருகில் வந்ததும், போலீசார் கூட்டத்தைத் தடுத்து நிறுத்தினார்கள். அதற்குள் வெள்ளைக்கார ஸோல்ஜர்களும் இந்தியச் சிப்பாய்களும் தம்லுக் முழுதும் வந்து குவிந்துவிட்டார் கள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் தடியேந்திய சிப்பாய்களும், அவர் களுக்குப் பின்னால் துப்பாக்கியுடன் தயாராக மற்றும் பல சிப்பாய்களும் நின்றார்கள்.

கூட்டத்தைப் போலீசார் தடி கொண்டு கலைக்கப் பார்த்தார்கள். அப்படியும் அந்த அஹிம்சை வீரர் கள் முன்னேக்கிச் சென்றார்கள். அடி தாங்காமல் இரண்டொருபேர் ஓடப் பார்த்தார்கள். அப்போது, "நீங்கள் மேதினீபுரத்தில் பிறந்த வர்கள் இல்லையா? உங்களுக்கு வீர மில்லையா? ஏன் பயப்படுகிறீர்கள்? முன்னே போங்கள்" என்று மாதங்கினி தேவி உரத்துக் கூவி னள். மறுபடியும் அவர்கள் உற் சாகத்துடன் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

ஒரு கையிலிருந்த சங்கை முழங் கிக்கொண்டே கிழவி முன்னேறி னள். மற்றக் கையில் இருந்த தேசியக்கொடி கம்பீரமாகக் காற் றில் பறந்தது. ஜயகோஷத்துடன் கூட்டம் அவளைப் பின்பற்றியது. இனிமேல் தடியடியினால் பல னில்லை என்று போலீசாருக்குத் தெரிந்து விட்டது. பட்டாளம் அணிவகுத்து எதிரே வந்து நின் றது. அதன் தலைவன் மேஜர் அகில்சந்திர பட்டாசார்யா, "சுடுங் கள்" என்று உத்தரவிட்டான். அவனும் ஒரு வங்காளிதான். சிப் பாய்கள் சுட்டார்கள். முதல் குண்டு மாதங்கினி தேவியின் இடது கையில் வந்து தாக்கியது. அந்தக் காயத்திலிருந்து ரத்தம் பெருகி ஓடியது. அப்படியும் அவள் சும்மா இருந்தால்தானே? ஏதோ ஓர் அபூர்வ சக்தி அவளை முன் னுக்குச் செல்லத் தூண்டியது. மறு படியும் குண்டு வந்து வலது கையைத் தாக்கியது. ரத்தக் கறை பட்டுக் கொடிமரம் சிவந்ததே தவிரக் கிழவி தன் பிடியை விட வில்லை; இன்னும் நடந்துகொண்டே முன்னேறினள். அவள் யாரி டத்திலும் வெறுப்போ கோபமோ துளியும் காட்டவில்லை.

மறுபடியும் குண்டு மாரி. கிழவி யின் நெற்றியில் வந்து தாக்கியது ஒரு குண்டு. அவள் கீழே சாய்ந் தாள். ஆனல் கொடியைப் பிடித்த பிடி மட்டும் தளரவே யில்லை. இன் னும் மூவர்ணக் கொடி பறப்பதைப் பார்க்க ஒரு 'வீர'ச் சிப்பாய்க்குச் சகிக்கவில்லை. அவன் ஓடி வந்து அவள் கையை உதைத்துக் கொடி மரத்தைப் பிடுங்கித் தூர எறிந் தான்.

அந்த வீரக் கிழவியின் ரத்தம் மண்ணில் பட்டுச் சரித்திரப் பிர சித்தி பெற்ற தாமிரலிப்தி (தம்லுக்) புனிதம் அடைந்தது. அவள் செய்த தியாகம் வீண் போகவில்லை. அதற்குப் பிறகு அங் கிருந்த தேசபக்தர்கள் இரண்டு வருஷகாலம் சுதந்தர சர்க்கார் ஸ்தாபித்து அதை நடத்தியும் காட்டினார்கள்.

பரமஹம்ஸர்

வைராக்கிய லட்சணம்: மழையே பெய்யவில்லை; பூமி வறண்டு கிடந்தது. தூரத்திலுள்ள ஆற்று நீரைக் கொண்டுவருவதற்காக, ஒரு குடியானவன் தீவிரமாய்க் கால்வாய் வெட்டிக்கொண்டிருந்தான். உச்சி வேளை ஆகியும் அவன் வீட்டுக்கு வரவில்லை; அதனால் அவன் மனைவி அவனை அழைத்து வர மகளை வயலுக்கு அனுப்பினாள். அப்படியும் அவன் வரக் காணோம். தானே புறப்பட்டுப்போனாள்; "நேரமாகிறதே; குளித்துவிட்டுச் சாப்பிட வருகிறதுதானே? இதற்கா இவ்வளவு அவசரம்? நாளைக்குப் பார்த்துக் கொண்டால் போகிறது!" என்றாள். குடியானவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் மண்வெட்டியை ஓங்கி, "பேசாமல் போகிறாயா இல்லையா? நான் இதை முடிக்காமல் வருகிறதில்லை" என்று சீறினான். அவள் பயந்து ஓடிவிட்டாள். குடியானவன் அன்று பகல் முழுவதும் கால்வாய் வெட்டி அலுத்துப்போனான்; ஆனாலும் முயற்சியை விடவில்லை. கடைசியாக, பொழுது சாயும் வேளையில் கால்வாய் வெட்டி முடிந்தது. ஆற்றுநீர் சலசலவென்று வேகமாய்க் கால்வாய் வழியே வர ஆரம்பித்தது. அதைப் பார்த்ததும் அவன் சோர்வெல்லாம் பறந்துவிட்டது. உற்சாகத்துடன் வீட்டை நோக்கி ஓடினான்; மனைவி





வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

யைப் பார்த்து, "சீக்கிரம் எண்ணெயைக் கொண்டுவா; வெந்நீர் எடுத்து வை" என்று கூவினான். ஸ்நானம், ஆகாரம் எல்லாம் ஆனதும் அவன் குறட்டை விட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்கினான்.

நம்பிக்கையின் சக்தி: அயல் நாட்டு வியாபாரி ஒருவன் விபீஷண மகாராஜனிடம் வந்து, "அரசே, நான் வந்த கப்பல் புறப்பட்டுப் போய்விட்டது. எப்படி என் ஊர் போய்ச் சேர்வேன்?" என்று முறையிட்டுக்கொண்டான். விபீஷணன் அவனுக்கு ஆறுதல் சொல்லி, "இந்தா, இதை இடுப்பில் செருகிக் கொள். இது உன்னைக் காப்பாற்றும். நீ தாராளமாகக் கடலைத் தாண்டிச் செல்லலாம்; போய் வா" என்று ஒரு சிறிய துணி முடிச்சை வியாபாரியிடம் கொடுத்தான். வியாபாரியும் அதை நம்பிக்கையோடு வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டு கடலின் மேல் நடக்க ஆரம்பித்தான். பாதி தூரம் வந்ததும், 'இந்த முடிச்சில் என்ன இருக்கிறது, பார்ப்போம்!' என்று ஆவலுடன் அதைப் பிரித்தான். ஓர் ஓலை இருந்தது; அதில் ராமநாமம் எழுதியிருந்தது. "பூ! இதுதானா?" என்றான் வியாபாரி. சொல்லி முடித்தானோ இல்லையோ உடனே ஜலத்தில் மூழ்கிவிட்டான்.





பரமஹம்ஸர்

வைராக்கிய லட்சணம்: மழையே பெய்யவில்லை; பூமி வறண்டு கிடந்தது. தூரத்திலுள்ள ஆற்று நீரைக் கொண்டுவருவதற்காக, ஒரு குடியானவன் தீவிரமாய்க் கால்வாய் வெட்டிக்கொண்டிருந்தான். உச்சி வேளை ஆகியும் அவன் வீட்டுக்கு வரவில்லை; அதனால் அவன் மனைவி அவனை அழைத்து வர மகளை வயலுக்கு அனுப்பினாள். அப்படியும் அவன் வரக் காணோம். தானே புறப்பட்டுப்போனாள்; "நேரமாகிறதே; குளித்துவிட்டுச் சாப்பிட வருகிறதுதானே? இதற்கா இவ்வளவு அவசரம்? நாளைக்குப் பார்த்துக் கொண்டால் போகிறது!" என்றாள். குடியானவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் மண்வெட்டியை ஓங்கி, "பேசாமல் போகிறாயா இல்லையா? நான் இதை முடிக்காமல் வருகிறதில்லை" என்று சீறினான். அவள் பயந்து ஓடிவிட்டாள். குடியானவன் அன்று பகல் முழுவதும் கால்வாய் வெட்டி அலுத்துப்போனான்; ஆனாலும் முயற்சியை விடவில்லை. கடைசியாக, பொழுது சாயும் வேளையில் கால்வாய் வெட்டி முடிந்தது. ஆற்றுநீர் சலசலவென்று வேகமாய்க் கால்வாய் வழியே வர ஆரம்பித்தது. அதைப் பார்த்ததும் அவன் சோர்வெல்லாம் பறந்துவிட்டது. உற்சாகத்துடன் வீட்டை நோக்கி ஓடினான்; மனைவி





வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

யைப் பார்த்து, "சீக்கிரம் எண்ணெயைக் கொண்டுவா; வெந்நீர் எடுத்து வை" என்று கூவினான். ஸ்நானம், ஆகாரம் எல்லாம் ஆனதும் அவன் குறட்டை விட்டுக்கொண்டு நிம்மதியாகத் தூங்கினான்.

நம்பிக்கையின் சக்தி: அயல்நாட்டு வியாபாரி ஒருவன் விபீஷண மகாராஜனிடம் வந்து, "அரசே, நான் வந்த கப்பல் புறப்பட்டுப் போய்விட்டது. எப்படி என் ஊர் போய்ச் சேர்வேன்?" என்று முறையிட்டுக்கொண்டான். விபீஷணன் அவனுக்கு ஆறுதல் சொல்லி, "இந்தா, இதை இடுப்பில் செருகிக்கொள். இது உன்னைக் காப்பாற்றும். நீ தாராளமாகக் கடலைத் தாண்டிச் செல்லலாம்; போய் வா" என்று ஒரு சிறிய துணி முடிச்சை வியாபாரியிடம் கொடுத்தான். வியாபாரியும் அதை நம்பிக்கையோடு வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டு கடலின் மேல் நடக்க ஆரம்பித்தான். பாதி தூரம் வந்ததும், 'இந்த முடிச்சில் என்ன இருக்கிறது, பார்ப்போம்!' என்று ஆவலுடன் அதைப் பிரித்தான். ஓர் ஓலை இருந்தது; அதில் ராமநாமம் எழுதியிருந்தது. "பூ! இதுதானா?" என்றான் வியாபாரி. சொல்லி முடித்தானோ இல்லையோ உடனே ஜலத்தில் மூழ்கிவிட்டான்.



பதவிக் கலகம்

பட்டநாராயணன்

போர்முனையில் தோற்றவரும் சேனைக்குப் பகைவரால் மட்டும் அல்ல, உள்ளுக்குள்ளேயே பல சங்கடங்கள் விளையும் அவற்றுள் ஒன்று. வீரத் தலைவர்களுக்கிடையே நிகழும் பதவிக் கலகம். மகாபாரதத்தைத் தழுவிய 'வேணீ சம்ஹாரம்' என்ற சமஸ்கிருத நாடகத்தில் வரும் அத்தகைய ஒரு காட்சி இது.

[கையில் உருவிய கத்தியுடன் அசுவத்தாமன் மேடையில் தோன்றுகிறான்.]

அசுவத்தாமன்: பிரளய கால மேகங்கள் இடி முழக்கம் செய்வது போல் போர்க்களத்தில் ஏதோ சத்தம் கேட்கிறதே! இது என்ன? (யோசித்துப் பார்த்து) அர்ஜுனனோ, பீமனோ, சாத்தகியோ யௌவன மதம் கொண்டு வரம்பு மீறி என் தந்தைக்கு எதிராகப் போர் புரிந்திருக்க வேண்டும். அதனால் அவர் கோபமூண்டு சிஷ்யன் என்றுகூட நினையாமல் தம் திறமைக்கு ஏற்றவாறு சமர் நடத்துகிறார். அதனால்தான் இந்தக் கோலாகலத் தொனி கேட்கிறது. நானும் போர்க்களத்துக்குப் போகிறேன். (சிறிது தூரம் போகிறான்.) ஐயோ! இதென்ன, யுத்தத்திலிருந்து நம் போர்வீரர்கள் அனைவரும் ஓடிவருகிறார்களே! கர்ணன் முதலிய மகாரதர்களுங் கூடப் போரில் புறம் காட்டி வருகிறார்களே! என் தந்தையின் சைனியத்துக்குமா இந்தக் கதி?

[திரைக்குள்ளிருந்து சில குரல்கள்: "இன்னுமா உன் தந்தை இருக்கிறார்!"]

அசுவ: (கோபத்தோடு) அற்பர்களே, என்ன சொல்லுகிறீர்கள்! இவ்விதம் பிதற்றும் உங்கள் நாக்கு ஆயிரம் துண்டுகளாக ஏன் பிளக்கவில்லை?

[அடிபட்டுப் பதற்றமுற்ற சாரதி வருகிறான்.]

சாரதி: குமார, காப்பாற்றுங்கள்! (அசுவத்தாமனின் காலில் விழுகிறான்.)

அசுவ: சாரதி அசுவசேனனா? அசுவசேனா, மூவுலகையும் காக்கும் திறமை பெற்ற என் தந்தையின் சாரதியான நீ ஏன் என்னைச் சரண் புகவேண்டும்?

சாரதி: இன்னும் உங்கள் தகப்பனார் இருக்கிறாரா?

அசுவ: (திடுக்குற்று) என் தந்தையா இறந்துவிட்டார்?

சாரதி: ஆம்.

[அசுவத்தாமன் மூர்ச்சை அடைகிறான். சாரதி தேற்றுகிறான்.]

அசுவ: (நினைவடைந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அசுவசேனா, சொல்லு! சொல்லு! அத்தகைய புஜபலம் படைத்த என் தந்தை, பீமனிடம் அன்பு கொண்டவராதலால், கதை அடியைக் குரு தட்சிணையாக அவனிடமிருந்து பெற்றாரோ? தன்னிடம் கருணை நிறைந்த அவரை, அர்ஜுனன் முறை தவறி அடித்தானோ?

பகவான் கோவிந்தனே சக்கராயுதத்தால் அவரை அறுத்துத் தள்ளிவிட்டானே? இவர்களைத் தவிர மற்றவரால் அவருக்கு மரணம் நிகழ்ந்திருக்க முடியாது. இது நிச்சயம்.

சாரதி: கோபங் கொண்டு வில்லை ஏந்திப் பரமசிவனைப் போல் போர்க்களத்தில் நின்ற அவருக்கு இந்த மூவருந்தாம் எம்மாத்திரம்? அவர் மரணத்துக்குத் தாங்களே காரணம். தர்மபுத்திரர், 'இறந்தான் அசுவத்தாமா' என்று உரக்கச் சொல்லி, 'யானை' என்று மெதுவாகத் தமக்குள்ளேயே கூறிக் கொண்டு, போர்க்களத்தில் பறை சாற்றினர். தங்கள் தந்தை அதைக் கேட்டு அந்த அரசர் சொல்லை நம்பிவிட்டார்; புத்திர வாஞ்சையால் தம் ஆயுதங்களை எறிந்து கண்ணீர் உகுத்தார். அந்த நேரத்திலே......

அசுவ: ஹா அப்பா! (மூர்ச்சையடைந்து சிறிது நேரத்தில் மீண்டும் நினைவடைகிறான்.)

[கிருபர் வருகிறார்.]

கிருபர்: (வருத்தத்துடன் பெருமூச்சு விட்டு) தம்பிமார் புடைசூழ்ந்த துரியோதனன் இருந்தென்ன? பகையை வென்ற தருமன் இருந்தென்ன? ஆயிரக் கணக்கான மற்ற அரசரெல்லாம் இருந்தென்ன? வீணாக ஆயுதம் தாங்கும் நான் இருந்துதான் என்ன? அன்று பாஞ்சால மன்னன் மகளுடைய கூந்தலையும் இன்று துரோணருடைய தலைமயிரையும் பிடித்திழுத்தவர்களைப் படத்தில் எழுதிய பதுமைகளைப் போல் அனைவரும் பார்த்திருந்தோமே! பாபம், பாபம்! ஒரு தடவை தலைமயிரைப் பிடித்து இழுத்தவனை வீணே பார்த்துக்கொண்டிருந்தோம்; அதன் பயனாகத்தான் இன்று இந்தக் கொடிய போர் மூண்டது. இதோ இரண்டாவது முறை தலைமயிரைப் பிடித்திழுத்து விட்டானே! இதன் பயனாக வளக்கும் போரின் உக்கிரத்திலே, மனித குலமே அழிந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. (கவனித்துப் பார்த்து) இதோ குமாரன் அசுவத்தாமன் இருக்கிறான். அவன் அருகே செல்கிறேன்.

சாரதி: குமார, இதோ உன் அம்மான் கிருபர் வந்து நிற்கிறார், பார்.

அசுவ: மாமா, எந்தச் சேனாபதியுடன் போர்க்களம் சென்றீர்களோ, அந்த வீரர்களுக்கெல்லாம் வீரர் - தங்கள் சகோதரியின் பர்த்தா - எங்கே?

கிருபர்: மருமகனே, வருந்தாதே.

அசுவ: மாமா, நான் வருத்தத்தை விட்டுவிட்டேன். என் பிரிவுக்கு அஞ்சித்தானே என் தந்தை பரலோகம் சென்றார்? ஆகவே நானும் விரைந்து பரலோகம் சென்று அவருக்கு என் பிரிவு இல்லாமல் செய்துவிடுகிறேன்.

[திரைக்குள்: "அரசர்களே, அரசர்களே! துரோணரை அவமதித்து அவருக்குத் தீங்கு இழைத்த கொடியன் இதோ போகிறானே! ஏன் எல்லாரும் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?"]

அசுவ: என்ன? என் தந்தையை அவமதித்தானா? எவன்?

[மீண்டும் திரைக்குள்: "மூவுலகுக்கும் குருவான துரோணர், தம் மகன் மரணமடைந்ததாகக் கேட்டு வருத்தமுற்றுக் கண்ணீர் சொரிந்து ஆயுதத்தை எறிந்தார். அந்தக் கொடியன் திருஷ்டத்யும்னன், நாணல் போல் வெளுத்த அவர் தலையில் கைவைத்துவிட்டு இதோ,

தன் இருப்பிடம் செல்லுகிறான். அனைவரும் அவனை விடாமல் தொடருங்கள்.'']

அசுவ: (கோபத்துடன் கிருபரையும் சாரதியையும் பார்த்து) இப்படியா நடந்தது?

கிருபர்: ஆம், இப்படி நடந்ததாகத்தான் அனைவரும் கூறுகிறார்கள்.

சாரதி: ஆம், குமார! மகா வீரரான துரோணருக்கு இது வரையில் நேராத இத்தகைய அவமானந்தான் நேர்ந்தது.

அசுவ: ஐயோ, அப்பா! துர்ப்பாக்கியனான எனக்காக ஆயுதத்தைக் கைவிட்டு, அந்த அற்பன் செய்த அவமானத்துக்கா ஆளானீர்கள்? என்ன அநியாயம்! ஆமாம்; இதென்ன பெரிய காரியம்! போர்க்களத்தில் வருந்தி வெறுப்புற்று என் தந்தை தம் சரீரத்தை விட்டால், பிறகு அவர் தலையை நாயோ காகமோ துருபதன் மகனோ யார் வேண்டுமானாலும் தொடலாம். கணக்கற்ற அஸ்திரங்களைக் கையில் ஏந்தி இதோ செல்கிறேன். கர்வம் கொண்ட அந்தப் பகைவனின் தலையில் என் காலை-கையை அல்ல, காலைத்தான் - வைத்து அழுத்துகிறேன். அடே பாஞ்சால குலத்துக்கே பாதகம் சூழ்ந்த பதரே! என் தந்தை ஆயுதத்தை எடுக்கமாட்டார் என்பதைத் தீர்மானமாக அறிந்தபின்பு அவர் தலையில் நீ கை வைத்தாயே; அப்போது, பஞ்சைப் போன்ற பாண்டவ சேனைக்குப் புயல்போன்ற அசுவத்தாமன் இங்கே இருக்கிறானே என்று உன் நினைவுக்கு வரவில்லையா? இந்தப் பெரும் பாதகச் செயலை மனித உருவம் தரித்த மிருகமான எவன் செய்தானோ, எவன் அநுமதித்தானோ, எவன் பார்த்திருந்தானோ, அவர்கள் அனைவரையும், அந்தக் கிருஷ்ணனுடன் சேர்த்து வெட்டித் திக்குகளில் துண்டு துண்டாக இதோ நான் பலியிடுகிறேன்.

கிருபர்: தந்தைக்கேற்ற மகன் நீ. உன்னால் ஆகாத காரியமும் உண்டா?

அசுவ: பாண்டவர், மத்ஸ்யன், சோமகன் முதலிய அரசர்களே! தன் தந்தையின் தலையை ஒருவன் தொட்டபோது பரசுராமன் செய்த செயல் உங்கள் காதில் எட்டவில்லையா? கோபங் கொண்ட அசுவத்தாமன், பகைவர்களின் ரத்தத்தை வற்றச் செய்யும் அந்தக் காரியத்தைச் செய்ய மாட்டான் என்று நினைத்தீர்கள்? சாரதி, போ சீக்கிரம். போர்க் கருவிகள் நிறைந்த என் தேரை விரைவாக ஓட்டி வா.

சாரதி: அப்படியே. (போகிறான்.)

கிருபர்: இந்த அவமானம் நம் எல்லாருக்கும் பொதுவானதே. உன்னைத் தவிர யார்தாம் இதற்குத் தக்க பதில் செய்ய முடியும்? ஆனால்......

அசுவ: ஆனால் என்ன?

கிருபர்: உன்னைச் சேனாபதியாக்கிப் போருக்கு அனுப்ப விரும்புகிறேன்.

அசுவ: மாமா, அந்தப் பதவி என்ன அவ்வளவு பெரிசா? அதற்குப் பிறர் தயவை அல்லவா நாட வேண்டும்?

கிருபர்: அப்படிச் சொல்லாதே. உன்னைப் போன்ற வீரன் சேனாபதியாக இருந்தால், பீஷ்மரும் துரோணரும் இல்லாத காரணத்தால் கௌரவசேனை கஷ்டப்பட நேராது. தவிர, நீ சரியான முன் தீட்டுடன் போர்க்களத்தில் நின்றால் மூவுலகும் உனக்கு நிகராகாது. அரசன் துரியோதனனும் இதை உணர்ந்து

சேனபதி பதவியை உனக்குக் கொடுக்கக் காத்திருப்பான் என்றே நான் நினைக்கிறேன்.

அசுவ: அப்படியானல் தாமதியாமல் சென்று நானே சேனபதி பதவியை ஏற்பதாகக் கூறி, அவரைச் சந்தோஷப்படுத்துகிறேன். பகைவரைப் பதைக்கச் செய்ய என் மனம் துடிக்கிறது. போவோம், வாருங்கள்.

[போகிறார்கள்.]

[கிருபரும் அசுவத்தாமனும் துரியோதனனிடம் செல்லும்போது, அவன் கர்ணனுடன் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறான்.]

துரி: குருபுத்திரரே, வாருங்கள். எனக்காகத் தந்தையைப் பறி கொடுத்தீர்கள். துக்கமுற்று வாடும் தங்கள் அங்கத்தால் என்னை அணைத்துக் கொள்ளுங்கள். (அசுவத்தாமனை அருகில் அழைத்துத் தன்னுடன் உட்காரத்திக் கட்டிக் கொள்கிறான்.) அவர் பிரிவு நம் இருவருக்கும் ஒரே விதந்தான். இருவருக்கும் அவரே குரு. இந்தத் துக்கத்தில் நமக்குள் வேற்றுமை இல்லை.

அசுவ: உண்மைதான். ஆயினும் நான் உயிருடன் இருக்கும்போது என் தந்தையின் தலையைத் துருபதன் மகன் தொட்டுவிட்டானே! பிள்ளை படைத்தவர்களுக்கு இனிமேல் பிள்ளையினிடம் நம்பிக்கை எப்படி வரும்?

கர்ணன்: இதற்கு யார் என்ன செய்வது? அஸ்திரத்தை உதறி எறிந்து அவர் அந்த நிலையைத் தாமாகவே வரவழைத்துக் கொண்டார்.

கிருபர்: அரசே, துரோணசாரியாரின் மகனுகிய அசுவத்தாமன் பெரிய பாரத்தை அல்லவா ஏற்கத் தீர்மானித்து விட்டான்? நாம் மட்டும் அவனுக்குப் பக்கபலமாக இருந்தால் அவன் மூன்று லோகத்தையும் ஜயித்துவிடுவான், சந்தேகமில்லை. இந்த யுதிஷ்டிரனின் பலம் எம்மாத்திரம்? அசுவத்தாமனை உடனே சேனபதிப் பட்டத்தில் அபிஷேகம் செய்யுங்கள்.

துரி: பேஷ்! மிகவும் பொருத்தமாகச் சொன்னீர்கள். ஆனலும் இந்தப் பட்டத்தைக் கர்ணனுக்குக் கொடுப்பதாக முன்னமே வாக்களித்துவிட்டேனே!

கிரு: அரசே, அசுவத்தாமன் எல்லையற்ற வருத்தக் கடலில் முழுகிக் கிடக்கிறான். கர்ணனுக்காக இவனைக் கைவிடுவது சரியல்ல. இவனும் அந்தப் பகைவர்களைத் தானே கொல்லப்போகிறான்?

அசு: அரசே, இன்னும் என்ன யோசனை? தாங்கள் இன்றுமுதல் கவலையற்றுத் தூங்கலாம். இன்றே கேசவனும் பாண்டவரும் ஒழிந்தார்கள்; போர் இன்றே முடிந்துவிடும்; பகைவர் அனைவரும் இன்றே மடிந்துவிடுவார்கள். என்னைச் சேனபதியாக்குவதில் இன்னும் யோசனை வேண்டாம்.

கர்ண: அடேயப்பா! சொல்வது எளிது; செய்வதுதான் கஷ்டம். தவிர, இதைச் செய்ய நீதானே? வேறு யாரும் இல்லையோ?

அசுவ: கர்ணு, நான் பிறரை அவமதித்துப் பேசவில்லை. நம் சைன்யத்தில் பலர் இந்தக் காரியத்தைச் செய்வார்கள் என்றாலும் வருத்தத்தால் இப்படிக் கூறிவிட்டேன்.

கர்ணன்: முட்டாள், வருத்தமானல் அழுதுகொண்டிரு; இப்படிப் பிதற்றுவது சரியல்ல.

அசுவ: மாமா, தேரோட்டியின் மகனன இந்தக் கர்ணனின் கர்வத்தை முதலில் அடக்கிவிடுகி

றேன். அப்புறந்தான் மறு காரியம். (தடித்து எழுந்திருக்கிறான்.)

கிரு: மகனே, பதறாதே! (கையமர்த்துகிறார்.)

அசுவ: உங்களுக்காகப் பொறுத்துக் கொள்கிறேன். ஆனால், பகைவரின் பாணத்துக்கு இந்தப் பாவி இரையாகும் வரையில் நான் ஆயுதம் எடுக்கப்போவதில்லை. (ஆயுதத்தை எறிகிறான்.)

கர்ணன்: ஆயுதத்தைக் கைவிடுவது தங்களுக்கு வம்ச பரம்பரையாக வந்த குணம்.

திரைக்குள்ளிருந்து பீமனின் குரல்: எந்த மனிதப் பதர் பாஞ்சாலன் மகளைத் தலைமயிரையும் துணியையும் பற்றி அரசசபையில் இழுத்தானோ, எவன் மார்பு உதிரத்தைக் குடிக்க நான் பிரதிக்ஞை செய்தேனோ, அந்தப் பேடி துச்சாசனன் இதோ என் கைப்பிடியில் சிக்குண்டிருக்கிறான். கௌரவர்களே, உங்களால் முடிந்தால் அவனைக் காப்பாற்றுங்கள். (எல்லாரும் கேட்கிறார்கள்.)

அசுவ: (பரிகாசமாக) கர்ணா, சேனாபதியே! இதோ உன் வீரத்தைச் சோதிக்கும் காலம் வந்துவிட்டது. துச்சாசனனைப் பீமனிடமிருந்து மீட்டுக் காப்பாற்று. (கர்ணனும் துரியோதனனும் "பயப்படவேண்டாம்" என்று கூறிக்கொண்டே நடக்கிறார்கள்.)

அசுவ: என் பிரதிக்ஞை பொய்யானாலும் ஆகட்டும். ஆயுதம் தாங்கிப் போர்க்களம் சென்று துச்சாசனனைக் காப்பாற்றுகிறேன். (ஆயுதத்தை எடுக்கப்போகிறான்.)

அசரீரி: மகாத்மாவே, பாரத்வாஜனின் மகனே! நீயே பிரதிக்ஞை செய்துவிட்டு அதைக் கைவிடலாமா? இது சரியல்ல.

கிரு: மகனே, அசரீரி வாக்கு உன்னைத் தடுக்கிறது.

அசுவ: அசரீரி வாக்கு என்னைத் தடுக்கிறதா? என்ன துர்ப்பாக்கியம்! எப்போதும் தேவர்கள் பாண்டவர் பக்கமே இருக்கிறார்கள். இதற்கு என்ன செய்வது? மாமா, தாங்களாவது சென்று துச்சாசனனைக் காக்கத் துரியோதனனுக்கு உதவி புரியுங்களேன்.

[இருவரும் போகிறார்கள்.]

எண்கள் பொய்க்குமா?

எண்களைக் கொண்டு ஜோஸ்யம் சொல்லுகிறார்களே; அது உண்மையோ பொய்யோ, நாம் அறியோம். ஆனால், இந்தத் துணுக்கு ரஸமாயிருப்பதால், இங்கே தருகிறோம்.

	சர்ச்சில்	ஹிட்லர்	ரூஸ்வெல்ட்	முஸலீனி	ஸ்டாலின்	டோஜோ
ஜனன வருஷம்	1874	1889	1882	1883	1879	1884
வயது	70	55	62	61	65	60
பதவி ஏற்ற வருஷம்	1940	1933	1933	1922	1924	1941
பதவி வகித்த வருஷங்கள்	4	11	11	22	20	3
	3888	3888	3888	3888	3888	3888

யுத்தம் முடிந்தது 1944-இல்; அதை இரண்டால் பெருக்கினால் வரும் விடை 3888.

1944-இல் பாதி 972. அதாவது 9-7-2 அல்லது செப்டம்பர் 7-ஆம் உ மணி 2.

—'இல்லினாய்ஸர்'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச்சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: ஜனங்கள் ஏன் ஆகாயக் கோட்டை கட்டுகிறார்கள்?

பதில்: பூமியில் கட்டத்தான் சாமான்கள் கிடைப்பதில்லையே!

* * *

கே: வயசைக் கடிகாரத்தால் அளகக முடியுமா?

ப: காலம் என்பது மனிதஜாதியின் முடிவற்ற எணி; ஒருவன் அதில் எங்கே நின்றுவிட்டாலும் அவனுக்குச் சாவுதான்.

* * *

கே: இந்தியன் காணும் கனவுக்கும் அமெரிக்கன் காணும் கனவுக்கும் வித்தியாசம் என்ன?

ப: அமெரிக்கன் வானளாவும் மாளிகை கட்டும் கனவில் ஈடுபட்டிருக்கிறான்; இந்தியனோ இமாலயத்து உச்சியில் தவயபுரியும் கனவைக் காண்கிறான்.

* * *

கே: பெண்கள் என்ஜினீர்களாக முடியுமா?

ப: பெண்தான் முதல் வீட்டை அமைத்தாள்; அதிலிருந்து உலகம் வளர்ந்தது. இன்னும் அவள்தான் சிறந்த சிற்பியாக இருக்கிறாள்.

கே: இந்தியாவிலுள்ள ராஜாக்களுக்கும் ராஜகுமாரர்களுக்கும் நீங்கள் என்ன புத்திமதி கூறுவீர்கள்?

ப: இன்று அவர்களுக்குப் புத்திமதி தேவையில்லை; உத்தியோகந்தான் தேவை.

* * *

கே: அழகு எப்போது சலிப்பைத் தருகிறது?

ப: உலகத்திலுள்ள பிற பொருள்களைப் போலவே அழகும் மேலும் மேலும் சுந்தரமாகவும் பூர்ணமாகவும் வளரவேண்டும். வளர்ச்சி தடைப்படும்போது அது தெவிட்டுகிறது.

* * *

கே: சரித்திரம் என்பது என்ன?

ப: மனிதஜாதியின் குற்றங்கள் நிறைந்த நெடுங்கதை; இடையிடையே கருணைச் செயல்கள் தட்டுப்படும்.

* * *

கே: யுத்தம் எதனால் விளைகிறது?

ப: பொறாமையென்னும் தப்பாக்கியும் அதிகாரமென்னும் குண்டும் சேர்ந்தால் யுத்தம் உண்டாகிறது.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: டிசம்பர்'48), பம்பாய்.

கே: சமீபத்தில் ராஜாஜி தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்தாரே! அதன் முக்கிய நோக்கம் என்ன?

ப: வளர்கிற எந்த மரமும் மேக மண்டலத்தில் கொழுந்தோடினாலும் முளைத்த இடத்துக்கு நிழல் தரும்.

*　　*　　*

கே: நாணம் எப்பொழுது அவசியம்?

ப: பேச இயலாதபோது.

*　　*　　*

கே: முதியவன் முகத்திலுள்ள சுருக்கங்கள் எதைக் காட்டுகின்றன?

ப: இளமை முழுதும் உழுது போராட்டமும் அநுபவமுமாகிய விதைகளை விதைத்த காலச் சுவடுகள் அவை.

*　　*　　*

கே: பணத்தைக் கண்டுபிடித்தவன் யார்?

ப: துன்பத்தை யார் கண்டுபிடித்தானே அதே மனிதன் தான்.

*　　*　　*

கே: கதர்க்குல்லாய்த் தலைவர்கள் எப்போது பார்த்தாலும் பிரசங்கம் பண்ணிக்கொண்டே இருக்கிறார்கள்; ஆனால் பாகிஸ்தான் தலைவர்களோ மௌனமாக இருக்கிறார்கள். இது ஏன்?

ப: மனச்சாட்சி அழுத்தும் போது மௌனமாக இருப்பது இயல்பு.

*　　*　　*

கே: மொட்டுக்கும் மலருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: மொட்டு வாக்குக் கொடுக்கிறது; மலர் அதை நிறைவேற்றுகிறது.

கே: குருடனுக்கு அழகு என்றால் எப்படி இருக்கும்?

ப: முடிவில்லாத கனவாக இருக்கும்.

*　　*　　*

கே: அயல் நாட்டாருக்கு இந்தியர் எதைக் கற்றுக்கொடுக்கலாம்?

ப: குறைந்த உணவும் உடையும் கொண்டு வாழும் கலையைச் சொல்லிக்கொடுக்கலாம்.

*　　*　　*

கே: காலத்தை ஓடாமல் நிறுத்த வழி என்ன?

ப: அதனுடன் கூட ஓடுங்கள்.

*　　*　　*

கே: மரணம் என்பது என்ன?

ப: புதிய ஆரம்பத்துக்குரிய ஒரு சந்தர்ப்பம்.

*　　*　　*

கே: ஆடவன் ஒரு நிமிஷத்தில் சொல்லக் கூடியதைச் சொல்லப் பெண்ணுக்குப் பத்து நிமிஷம் பிடிக்கிறதே! ஏன்?

ப: முன் ஒன்பது நிமிஷங்களிலும் ஆடவன் செவிடாக இருக்கிறான். அதனால் பெண்கள் பத்தாவது நிமிஷம் வரையில் அதையே திருப்பத் திருப்பச் சொல்ல வேண்டியிருக்கிறது.

*　　*　　*

கே: உங்களுக்கு அதிகமாகப் பிடித்த பாஷை எது?

ப: இங்கிலீஷ்! தேவைக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற வார்த்தைகள் அதில் இருக்கின்றன.

குழந்தைகள் குறும்பு

நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்காரருக்குச் சீனு, ரமணி என்று இரண்டு பிள்ளைகள். சீனு மூத்தவன்; ரமணி இளையவன்.

ஒரு நாள் சீனு தன் அம்மாவைப் பார்த்து, "அம்மா, பால் நாறவில்லை; காபி, சாதம் ஒன்றுமே நாறவில்லை. இந்த விளக்கெண்ணெய் மாத்திரம் நாறுகிறதே! ஏன் அம்மா?" என்று கேட்டான்.

அதற்கு ரமணி, "வாய் கிட்ட இருக்கோல்லியோடா மூக்கு; அதனாலேதான் நாறுகிறது" என்று சட்டென்று பதில் சொன்னான்.

—வி. கல்யாணி, 28 பக்தபுரி
அக்ரஹாரம், கும்பகோணம்.

* * *

விடியற்காலை நான்கு மணிக்கே எல்லாரும் எழுந்து வால் நட்சத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். என் நான்கு வயதுக் குழந்தை பத்மாவும் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து அவள், "அது என்ன?" என்று வால் நட்சத்திரத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள்.

"வால் நட்சத்திரம்" என்றேன்.

"அப்படீன்னா என்னப்பா?" என்றாள்.

"வால் இருப்பதால் வால் நட்சத்திரம்னு பெயர்" என்று கூறி, அவளை அனுப்பி வைத்தேன்.

பொழுது விடிந்தது. பேப்பர் போடுகிற பையன் அன்றைப் பேப்பரைப் போட்டுவிட்டுச் சென்றான். அதை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். குழந்தை பத்மா அங்கே வந்தாள். பத்திரிகையில் ஒரு சினிமா விளம்பரத்தில் இருந்த நடிகையின் படத்தைச் சுட்டிக் காட்டி, "இது யார், அப்பா?" என்றாள்.

"பிரபல சினிமா நட்சத்திரம்" என்று கூறிவிட்டு, பேப்பரை மீண்

டும் வாசிக்க ஆரம்பித்தேன். உடனே பத்மா, "ஏன் அப்பா! இந்த நட்சத்திரத்துக்கு வால் இருக்குமா?" என்று கேட்டாள்!

—இ. எஸ். வாசன்,
28டி, கீழ ரத வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

என் சின்ன மகள் தன் மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டே படுக்கப் போனாள். நான் இதைக் கண்டு வியப்புற்று, "தூங்கப் போகிற வள் ஏன் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறாய்!" என்று கேட்டேன்.



"நேத்து ராத்திரி கனவிலே புத்தப் புதிசா ஒரு பொம்மை பார்த்தேன். ஆனால் அது பளிச்சென்று தெரியல்லே. அதை இன்னி ராத்திரி கனவிலே நன்றாகப் பார்க்கப் போறேன்!" என்றாள் சிறுமி.

—'பேஜெண்ட்'

* * *

ஏழு வயதுச் சிறுவன் ஜோஸப் தன் வலது கையைத் தூக்கினான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டாள் வாத்தியார் அம்மா.

"டீச்சர், ஒருவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதாகவும், அவளுக்கு வீடு, படகு, கார் எல்லாம் வாங்கித் தருவதாகவும் வாக்குக் கொடுக்கிறான். பின்னால் அவன் இப்படிச் செய்யத் தவறினால், அவள் வழக்குத் தொடர முடியுமா?" என்று கேட்டான் சிறுவன்.

வாத்தியார் அம்மா, "முடியாது. நம் நாட்டில் அந்தச் சட்டத்தை இப்போது ஒழித்து விட்டார்கள்" என்றாள்.

பக்கத்தில் இருந்த எட்டு வயது ஹெர்பர்ட், "பார்த்தையா, தம்பி! நான்தான் அப்போதே 'கவலைப் படாதேடா' என்று உன்னிடம் சொன்னேனே?" என்றான்.

—'டெய்லி மிரர்.'

* * *

இந்த வருஷம் முதல் முதல் பள்ளிக்கூடம் சேரப்போகிற ஐந்து வயதுச் சிறுவனை நான் பரீட்சித்தேன்.

"உனக்கு எண்களை எண்ணத் தெரியுமா?" என்று விசாரித்தேன்.

"தெரியுமே" என்றான் சிறுவன்.

"அப்படியானால், எங்கே, ஒன்றுக்குப் பிறகு எந்த எண் வருகிறது? சொல், பார்க்கலாம்" என்று கேட்டேன்.

"எல்லாம் வருகிறது" என்றான் சிறுவன்.

கன கச்சிதமான பதில்!

—'காரொனெட்'

ஜாலம் செய்யும் எதிரொலி

கல்யாணசுந்தரி

'எதிரொலியாள்' என்ற ஓர் அபூர்வக் கதை, கிரேக்க புராணத்தில் உண்டு. ஸ்ரீ வ. வே. சு. ஐயர் தமிழ்ப் படுத்திய அதைப் பலர் படித்திருக்கலாம். எதிரொலி உண்மையிலே இயற்கையின் விந்தைகளுள் ஒன்றுதான். அது எத்தனை ஜாலங்களைப் புரிகிறது!

கம்பீரமும் அழகும் நிறைந்த எதையும் தெய்வம் என்று மதித்து, ஆதி மனிதர்கள் பூஜித்து வந்தார்கள். அதுபோலவே அவர்களுக்குப் புரியாமலோ பயங்கரமாகவோ இருந்த எதையும் பிசாசு என்றும் பூதம் என்றும் எண்ணிப் பயந்தார்கள். இந்தப் பயபக்தியால் அறிவு மழுங்கி விட்டது.

சுழல் காற்றிலும் எதிரொலியிலும் பேய் பிசாசுகள் இருப்பதாக, நம்மவர் பலர் இன்றும் நம்புகிறார்கள். ஊருக்கு வெளியில் இருக்கும் சத்திரங்களிலோ, பாழடைந்த தொழிற்சாலைக் கட்டிடங்களிலோ எதிரொலியைக் கேட்டால், குரலைத் தாழ்த்தி ரகசியமாகப் பேசிக்கொண்டு அந்தக் கட்டிடத்தின் எல்லையைக்கூட மிதிக்காமல் பலர் விலகிப் போகிறார்கள். ஆனால் கலையறிவு விருத்தியடைய அடைய மனிதன் இயற்கையில் அழகையே அதிகமாகக் காணத் தொடங்குகிறான்.

எதிரொலி ஒரு தெய்வப் பெண் என்றும், அவள் தன் காதலனுக்காக அலைந்து திரிந்து தேய்ந்து மாய்ந்து போய்விட்டாள் என்றும், கடைசியில் அவளுடைய குரல் மட்டுமே மிகுந்ததென்றும் புராதன கிரேக்கக் கதை ஒன்று சொல்லுகிறது.

எதிரொலி உண்மையிலேயே மனிதனின் ஊகத்துக்கு எட்டாத தந்திரங்களைத்தான் செய்கிறது. பெரிய பெரிய முற்றங்களிலும் வயல் கரைகளிலும் நின்று 'ஓம்' என்று நாம் சொன்னால் எதிரொலியும் 'ஓம்' என்று கூவும். சில குகைகளில் நிதானமாகப் பேசினாலும் 'பம்' என்ற குரலில் எதிரொலி திரும்பப் பேசும். சில எதிரொலிகள் நாம் சொன்ன ஒரு வாக்கியத்தை இருபது தரம் திருப்பிச் சொல்லுகின்றன; சில, நாம பேசினால் தாம் பாடுகின்றன; சில, நாம் படித்த செய்யுளைத் திரும்ப ஒப்பிக்கின்றன. சில, நாம் எங்கேயோ ஒரு மூலையில் பேசிக்கொண்ட ரகசியத்தை அப்படியே வேறோர் இடத்தில் யாரிடமோ போய், பலத்த குரலில் சொல்லிவிடுகின்றன; சில எதிரொலிகள், பெண்கள் பேசினால் மரியாதையாகப் பதில் சொல்லிவிட்டு, ஆண்கள் பேசினால் சப்சிப் என்று மௌனம் சாதித்துவிடுகின்றன.

வெறும் கலையுணர்ச்சியுடன் அல்லாமல் ஸயின்ஸ் ரீதியாகப் பார்த்தால் எதிரொலியை நன்றாகப் புரிந்துகொண்டுவிடலாம். ஒலி, ஒளி,

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு: பிப்ரவரி, '48), சென்னை.

மின்சாரம் ஆகிய மூன்றையும் போல் எதிரொலியும் பிரயாணம் செய்கிறது. அவற்றைப் போல் இதுவும் சிறிய அலைவட்டங்களின் தொகுதியே. ஒலியின் அலைகள் ஓடி ஓடிக் கடைசியில் ஒரு மேகத்திலோ, மலையிலோ, காட்டிலோ போய் முட்டிக் கொள்கின்றன. அந்தப் பிரதேசங்கள் இந்த ஒலியின் அலைகளைத் திரும்பத் துரத்துகின்றன. திரும்பும் சப்தமே எதிரொலி.

சில வருஷங்களுக்கு முன்பு, ஒரு மலையின் சுரங்கத்தில் வெடிமருந்துப் பொருள் வெடித்துவிட்டதாம். அந்தச் சப்தம் இருபது மைல் தூரத்துக்கு அப்பால் போய்க் கேட்டதாம். நூறு மைல் தூரத்தில் உள்ள ஊரில் வயலை உழுதுகொண்டிருந்த விவசாயிகளுக்குக்கூடக் கேட்டதாம். ஆனால் முதல் இருபது மைல் தூரத்துக்குள் இருந்தவர்களுக்கு மட்டும் கேட்கவில்லையாம். அந்த இருபது மைல் தூரத்தை ஒலி எப்படித் தாண்டியது?

சுரங்கத்திலிருந்து கிளம்பிய சத்தம் ஒரு பக்கம் சாய்ந்து மேல்நோக்கிப் போய் ஐம்பது மைல் தூரத்தில் இருந்த ஒரு மேகத்தை முட்டியிருக்கிறது. மேகம் அந்த ஒலி அலைகளைப் பலமாகத் தாக்கி எதிர்த்துத் தள்ளியிருக்கிறது. இப்படித் திரும்பிய எதிரொலியே இருபது மைலுக்கு அப்பால் பூமிக்கு வந்து உழவர்களுக்குக் கேட்டது.

வளைவான பூதக்கண்ணாடிகள் நம் உருவத்தைப் பல மடங்கு பெரிதாக்கி நம்மைப் பூதமாகத் தோன்றச் செய்கின்றன. அதுபோலவே, சில குகைகளில் காகிதத்தைக் கசக்கினால்கூட, பீரங்கி வெடித்ததுபோல் சத்தம் பல மடங்கு பெருகிக் கேட்கும். குகையைச் சுற்றிப் பல வாயில்கள் இருப்பதால், எல்லா வாயில்களிலும் முழங்கும் ஒலி ஒரே சமயத்தில் எழுந்தே அவ்வளவு பெரிதாகக் கேட்கிறது.

சில சமயங்களில் ஒலி அலைகள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எகிறிக் குதித்துப் போகின்றன. ஒரு நதியின் மேல் 580 மைல் நீளத்தில் ஒரு பாலம் இருக்கிறது. பாலத்தின் ஒரே ஒரு பெரிய ஸ்தம்பத்தைச் சுத்தியால் தட்டினால், ஒவ்வொரு குறுக்குச் சட்டத்திலிருந்தும் 'டங் டங்' என்ற ஒலி எழுந்து வரிசையாக ஒலித்துக்கொண்டே போகிறது. மலைகள் சூழ்ந்த பிரதேசத்தில் ஒரு பேச்சுக்குப் பதிலாக எதிரொலி இருபது முறைகூட எழுகிறது. இவை எல்லாம் குதித்துப் போகும் வகையைச் சேர்ந்தவையே. அமெரிக்கக் கதாசிரியர் ஒருவர் ஓரிடத்தில் பேசியபோது, அந்த இடத்து எதிரொலி இருபது தடவை அவர் பேச்சை மூச்சு விடாமல் ஒப்பித்ததாம்.

ரோம் நகரில் ஒரு சமாதி இருக்கிறது. அதன் பக்கத்தில் நின்று நீங்கள் ஒரு பாட்டைப் பாடி முடித்தால், அது மரியாதையாகக் கடைசி வரையில் கேட்டுவிட்டு, பிறகு ஓர் எழுத்து விடாமல் உங்களிடம் திருப்பி ஒப்பிக்கும். இது மாதிரி மரியாதைகள் நடப்பதற்கு, ஒலி சென்று திரும்பும் பிரதேசம் அரைமைல் தூரத்தில் இருக்க வேண்டும். ஏனென்றால் ஒலி அலைகள் ஐந்து ஸெகண்டுகளுக்கு ஒரு மைல் வீதம் ஓடுகின்றன.

சில இடங்களில் பெண்கள் பேசினால் எதிரொலி எழுகிறது; ஆண்

பிள்ளைகள் என்ன கத்தினாலும் பதிலே கிடையாது. நீல நிற ரிப்பனைச் சிவப்புக் கண்ணாடி வழியாகப் பார்த்தால் நீலமாகத் தெரியாது. ஏனென்றால் நீல ஒளிக் கிரணங்களைச் சிவப்புக் கண்ணாடி உறிஞ்சி விடுகிறது; சிவப்புக் கிரணங்களுக்கு மட்டுமே வழி விடுகிறது. அது போல் சில இடங்கள் ஆண்களின் கட்டைக் குரலை உறிஞ்சிவிட்டுப் பெண்களின் கூரிய குரலை மட்டும் எதிரொலிக்கின்றன.

மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ஒரு மலையில் சீட்டி அடித்தால், கூடவே யாரோ பாடுவது போல் ஒரு குரல் கேட்கிறது. ஒரு காலத்தில் ஒரு பாடகன் அங்கே இறந்துவிட்டதாகவும் அவனுடைய ஆவியே நம்முடன் சேர்ந்து பாடுகிறது என்றும் அங்குள்ள ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை அது அல்ல. நாம் சீட்டி அடிக்கும் பொழுது ஒவ்வொரு ஸ்வரமும் உரத்த எதிரொலியாக அங்கே திரும்பி வருகிறது; அதனால் வேறொருவர் பாடுவதுபோல் நமக்குப் பிரமை ஏற்படுகிறது.

வேறு சில இடங்களில் ரணபேரிகை அடித்தால் இனிமையான கானம் காதில் விழும். வரிசையாக நிற்கும் மரங்கள், சில ஸ்வரங்களின் ஓசையை இழுத்துக் கொண்டு மீதியாக விட்ட வேறு ஸ்வரங்களே அப்படி இனிமையாகக் கேட்கின்றன. சில சமயங்களில் அப்படி விட்ட ஸ்வரங்கள் இனிமையற்று விகாரமாக மாறுவதும் உண்டு.

பூமியில் பரவும் எதிரொலிகள் வேடிக்கையாக இருப்பதோடு சரி; கடலில் பரவும் எதிரொலிகளோ மிக்க உபயோகமாகவும் இருக்கின்றன. கடலின் ஆழத்தை எதிரொலி மூலம் அளக்கிறார்கள். கப்பலில் உள்ளவர்கள் ஏதாவது ஓர் ஒலியைக் கிளப்புகிறார்கள். அந்த ஒலி சமுத்திரத்தின் நில மட்டம் வரையில் போய்விட்டு எதிரொலியாகத் திரும்பி வருகிறது. ஒலி எத்தனை நிமிஷத்தில் திரும்புகிறது என்பதைக் காட்டவும், ஒலியை அனுப்பவும் வேண்டிய கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். காற்றில் போவதைவிட ஐந்து மடங்கு அதிக வேகத்தில் சமுத்திரத்தில் எதிரொலி பிரயாணம் செய்கிறது. ஒலி கிளம்பிய நிமிஷத்தையும் எதிரொலி வந்த நிமிஷத்தையும் கணக்கிட்டுச் சமுத்திரத்தின் ஆழத்தை நிர்ணயிக்கிறார்கள்.

நிலத்தில் எழும் எதிரொலிகளுக்குள் மிகவும் வேடிக்கையானது, வளைந்த பிரதேசங்களில் எழும் எதிரொலியே. முன்காலத்தில் 'ஸிராக்யூஸ்' என்ற தீவின் அரசன், அரசியல் கைதிகளை ஒரு மண்டபத்தில் சிறை செய்து வைத்துவிட்டு, அதன் கோபுர உச்சியில் அமர்ந்து கொள்வான்; அவர்கள் பேசும் ரகசியம் அவனுக்குக் கேட்குமாம். இப்படி ரகசியத்தைக் கேட்டு ஒப்பிப்பதில் இந்த மண்டபம் உலகத்திலேயே சிறந்தது என்று சொல்லுகிறார்கள். இதன் கீழே மூச்சு விட்டால்கூட 120 அடி உயரம் உள்ள இதன் உச்சியில் அது தெளிவாகக் கேட்குமாம். லண்டனில் இருக்கும் 'ஸெண்ட் பால்' என்ற மாதாகோவில் கோபுரத்தில் 'கிசுகிசு' என்று பேசினாலும் இதேபோல் 120 அடிகளுக்கு அப்பால் கேட்கிறதாம்.

முப்பட்டைக் கண்ணாடியின் மேல் வெளிச்சம் விழுந்தால் சிதறிப் பல வர்ணஜாலங்கள் ஏற்படுவதுபோலவே மேடு, பள்ளம், மலை இவற்றில் ஒலி அலைகள் தாக்கும்போது, தனித் தனி ஸ்வரங்களாகச் சிதறித் திரும்புகின்றன. முன்னும் பின்னுமாகச் சிதறிவிடுவதால் இயற்கையாகத் தாக்கிய சப்தத்தைவிடச் சில இனிமையாக மாறுகின்றன; சில விகாரமாக மாறுகின்றன. இந்த வகையைச் சேர்ந்த எதிரொலியை நதிகளிடம் கேட்கலாம். நதிகளின் நீர்வீழ்ச்சியைப் பக்கத்தில் நின்று கவனித்தால், அழுவது போலக் கேட்கும்; தூரத்தில் இருந்து கவனித்தால், அழுகை மாறிக் கூச்சலிடுவது போல் கேட்கும்.

ஸுபீரியர் ஏரிகரையில் நின்றவர்களுக்கு யாரோ அசரீரி பாடுவது போல் ஒரு தேவகானம் காதில் விழும். வெகுநாள் வரையில் அது வெறும் பிரமை என்று பலர் நினைத்திருந்தார்கள். பரீக்ஷை செய்த பின் காரணம் தெரிந்தது. ஏரியின் அலைகள் கூழாங் கற்களின் மேல் மோதுகிறபோது எழுகிற ஒலியை, ஏரிக்குப் பின்னால் இருக்கும் காடுதான் இனிய கானமாக மாற்றித் திருப்பி அனுப்பிவிடுகிறது.

சர்ச்சில் கொடுத்த பதில்

லேடி நான்ஸி ஆஸ்டர் என்ற சீமாட்டி யாரிடமும் வெடுக்கு வெடுக்கென்று பேசுவாள். யுத்தகால பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலைப் பார்த்து, ஒரு முறை அவள், "வின்ஸ்டன், நீங்கள் என் கணவராக இருந்தால், உங்கள் காபியில் விஷத்தைப் போட்டுவிடுவேன்" என்றாள்.

"நீ என் மனைவியாயிருந்தால், அதை நான் வாய் பேசாமல் குடித்துவிடுவேன்" என்றார் சர்ச்சில்.

— பெர்னார்டைன் கில்டி.

பேசுவது எப்படி?

பிரசங்கம் செய்வதில் தமக்கு வெற்றி ஏற்பட்டதற்குக் காரணம், வின்ஸ்டன் சர்ச்சில் சொன்ன ஒரு புத்திமதியே என்று மாஜி இந்திய வைஸிராய் லார்டு ஹாலிபாக்ஸ் கூறுகிறார்.

அவருக்குச் சர்ச்சில் சொன்ன அந்தப் புத்திமதி இதுதான்: "பிரசங்கம் செய்வதுதானே? அது வெகு சுலபம். என் தகப்பனாரின் நண்பர் ஒருவர் ஒரு சமயம் எனக்கு அதைச் சொன்னார்: 'சொல்ல உங்களிடம் ஏதாவது விஷயம் இருந்தால், அதைச் சொல்லுங்கள். எப்போது உங்கள் வாக்கியம் இலக்கணமாய் முடிகிறதோ, அப்போது கம்மென்று உட்கார்ந்துவிடுங்கள்' என்றார்."

— 'யு பி.'

தேவநாகரியே அராபியின் மூலம்

எஸ். மஹதிஹஸன்

இந்தியாவும் மத்தியக் கிழக்கு முஸ்லிம் நாடுகளும் ஒன்றுக்கொன்று கலைச் செல்வங்களை வழங்கிப் புராதனமாகத் தொடர்பு கொண்டிருந்தன என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிருர்கள். அதற்குப் பல சான்றுகளும் கிடைக்கின்றன. இதோ ஒரு முஸ்லிம் நண்பர், அரபு நாட்டுக்கு இந்தியாவே எழுத்து உதவியிருக்கவேண்டும் என்பதை விளக்குகிருர்.

அராபி எழுத்தை வலமிருந்து இடமாக எழுதவேண்டும்; தேவநாகரியை இடமிருந்து வலமாக எழுதவேண்டும். ஆகவே இரண்டு பாஷைக்கும் ஒற்றுமையே இராது என்றுதான் தோன்றும். அராபி எழுத்து எப்படிப் படிப்படியாக உருவாயிற்று என்பதற்குத் தக்க சான்று இது வரை கிடைக்காதிருந்தது. இந்தியாவிலிருந்தே அராபி எழுத்து வந்தது என்பதை 'அல் - உர்வா' என்ற பம்பாய்ப் பத்திரிகை இப்போது விளக்கியிருக்கிறது. அதன் சாரம் இது:

முகம்மது நபி பிறப்பதற்குச் சுமார் நூறு வருஷத்துக்கு முன் யூதர்களைப் போலவே அராபியர்களும் ஹீப்ருவில்தான் எழுதி வந்தார்களாம். பிறகு இந்தியாவுடன் அவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அராபிய வியாபாரிகளின் கண்ணுக்கு இந்திய எண் புதுமையாகப் பட்டது. அதை உடனே தங்கள் பாஷையில் ஏற்றுக்கொண்டார்கள். இப்போது 'அராபி எண்' என்று மேனுட்டார் சொல்லும் எண் நம் நாட்டிலிருந்து போனதுதான். தங்கள் வழக்கத்துக்கு மாருக எண்ணை மட்டும் அராபியர் இடமிருந்து வலமாக எழுதுகிருர்கள். இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்? இந்த எண்ணுக்கு 'ஹிந்திஸா' (இந்தியப் பத்து) என்று பெயர் வைத்தார்கள். இந்தப் பத்து எண் முறையின் உதவியால் எவ்வளவு பெரிய தொகையையும் குறிப்பிடலாம்; ஆனல் ஹீப்ருவில் எழுத்தையே எண்ணுக்குப் பதில் உபயோகித்து வந்ததால், இப்படிச் செய்வது சாத்தியமில்லை; மிகவும் சிக்கலாகவும் இருந்தது. தனியாக எழுத்தும் அராபியர்களுக்கு வேண்டியிருந்தது; தேவநாகரி எழுத்தையும் எடுத்துக்கொண்டார்கள்.

இந்தியாவில் பனையோலையிலோ செப்புத் தகட்டிலோதான் எழுதுவது வழக்கம். அராபியர்களுக்கு இரண்டும் கிடைப்பது அரிது; அதனல் எலும்புத் துண்டுகளில் எழுதி வந்தார்கள். எலும்புத் துண்டை இடமிருந்து வலமாகத் திருப்புவதுதான் சுலபம். அப்படி அதன்மேல் எழுதும்போது வலமிருந்து இடமாகத்தான் எழுத வரும். ஹீப்ரு, சீனம் முதலிய பாஷைகளையும் இப்படியே

காப்பிரைட்: போரம் (ஆங்கிலம்: 21-11-48) பம்பாய்.



எழுதி வந்தார்கள். எலும்புத் துண்டு என்றாலும் சிக்கனமாகத் தானே உபயோகிக்க வேண்டும்; ஆகவே, சுருக்கெழுத்துப்போல் தேவநாகரியை மாற்றியமைத்துக் கொண்டார்கள். தேவநாகரியிலும் கூட்டு எழுத்தை இப்படித்தான் சுருக்கி எழுதுவது வழக்கம். தேவநாகரியிலிருந்து முக்கியமான சில எழுத்து வடிவங்களை எடுத்து அவற்றை அராபியர் பயன்படுத்திக் கொண்டார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், தேவநாகரியின் எழுத்து உருவங்கள் கண்ணாடியில் தெரிவதுபோல் நேர் எதிராக அராபியில் மாறி இருப்பதுதான். இதனுடன் உள்ள படத்தைப் பார்த்தால் தேவநாகரி எழுத்து உருவங்கள் அராபியில் மாறிய விதம் தெரியும்.

சுதந்தர ராஜ்யத்தின் முக்கிய அங்கம் சேனை. அதன் அதிபதி அந்நியராக இருக்கலாமோ?



முதல் இந்திய சேனாதிபதி

குடகு ராஜ்யம் நமக்குப் பல விதத்திலே தெரிந்தது. குடகு ஆரஞ்சு குடகிலிருந்துதான் முதலில் வந்திருக்க வேண்டும். குடகிலே மழை பெய்தால்தான் தமிழ் நாட்டுக் காவிரியிலே வெள்ளம் வரும். ஆடி மாதம் வந்தால், குடகு ராஜ்யத்தில் மர்க்காராவில் எவ்வளவு மழை பெய்தது என்று தஞ்சாவூர் விவசாயிகள் முன்பெல்லாம் பத்திரிகைகளைப் பார்ப்பதுண்டு.

இப்போது குடகு ராஜ்யத்துக்கு மற்றொரு பெருமை ஏற்பட்டிருக்கிறது. இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு அரசாங்க பதவிகளை இந்தியர்களே நிர்வகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்று பாரத நாட்டின் சேனைகளுக்கெல்லாம் சேனாபதியாக ஸர் ராய் புச்சர் என்பவர் இருககிறார். வரும் ஜனவரி மாதம் 15 - ஆம் தேதி அவர் விலகுகிறார். சேனாதிபதிப் பதவியை வகிக்கும் பேறு ஜெனரல் கரியப்பாவுக்குக் கிடைத்திருக்கிறது. முதல் இந்திய சேனாதிபதியாக விளங்கும பெருமை குடகு ராஜ்யத்தில் பிறந்த இந்த வீரருக்குக் கிடைக்கிறது. குடகுராஜ்யத்துக்கும் அது பெருமைதானே?

ஆதாரம் :

(1) 'சங்கர்ஸ் வீக்லி' (12-12-'48), புது டில்லி.

(2) 'ப்ரீ இந்தியா' (12-12-'48), சென்னை.

(3) 'மார்ச்' (8-12-'48), பம்பாய்.

குடகு ராஜ்யத்தின் தலைநகராகிய மர்க்காராவில் வீரக் குடிமக்களின் குடும்பத்தில் 1900 - ஆம் வருஷம் பிறந்தவர் கரியப்பா. இவருடைய தந்தையாராகிய மாதப்பா இன்னும் சௌக்கியமாக இருக்கிறார். அவர் நூறு ரூபாய் சம்பளத்தில் ரெவினியூ இலாகாவில் இருந்தவர்.

கரியப்பா மெர்க்காராவில் ஹைஸ்கூலில் படித்தார். நல்ல புத்திசாலி. கிரிக்கெட்டு முதலிய விளையாட்டுகளில் இவருக்கு அதிக உற்சாகம். சீட்டாட்டத்தில் அபார மோகம். தம் தோழர்களோடு பள்ளிக்கூடத்திலேயே சீட்டாடுவாராம். இவரிடத்தில் மிகவும் பிரியமாக இருந்த வெள்ளைக்கார ஹெட்மாஸ்டருக்கு, இந்த ஒரு விஷயம் மாத்திரம் பிடிக்கவில்லை. இவருடைய சீட்டாட்ட மோகத்தைப்

பற்றிக் கேள்வியுற்ற இவர் தகப்பனர் அடிக்கடி இவரைக் கண்டிப்பாராம். சில சமயங்களில் பிரம்பாலேகூட அடித்ததுண்டு.

ஹைஸ்கூல் படிப்பு முடிந்தது. 1947-ஆம் வருஷம் மேற்படிப்புக்கு கரியப்பா சென்னைக்கு வந்து பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தார். விக்டோரியா ஹாஸ்டலில் சேர்ந்திருந்தார். அந்தக் காலத்தில் வார்டனுக்குத் தெரியாமல் சுவர் ஏறிக் குதித்துச் சினிமாப் பார்க்கப் போய்விடுவாராம்.

அப்போது ஐரோப்பிய மகா யுத்தம் நடந்துகொண்டிருந்தது. யுத்தத்துக்குத் தேகக்கட்டு வாய்ந்த மாணக்கர்களைக்கூடத் தேர்ந்தெடுத்தார்கள். 1918-ஆம் வருஷம் கரியப்பாவை இரண்டாவது லெப்டினெண்டாகத் தேர்ந்தெடுத்துச் சைனியத்தில் சேர்த்தார்கள். அது முதல் கரியப்பா இந்தியாவின் ராணுவத்தைச் சேர்ந்தவராகி விட்டார்.

இவர் முதலில் ஏழாவது ராஜ புத்திரப்படையில் இருந்தார். 1921, 22-ஆம் வருஷங்களில் வாஸிரிஸ்தான் போரில் பணியாற்றினர். இவருடைய தீரவீரத்தைத் தலைவர்கள் தங்கள் கடிதங்களில் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். க்வெட்டாவில் ஏற்படுத்திய ராணுவக் கல்லூரிக்கு இவரை அனுப்பினர்கள். அங்கே முதல்வராகத் தேர்ச்சி பெற்றார்.

1933-ஆம் வருஷம் கேம்பர்லியிலுள்ள ராணுவக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். அங்கும் இவருக்கு நல்ல பெயர் கிடைத்தது. இவர் பதவியும் உயர்ந்தது. இந்தியர்களுக்கு அதுவரையில் கிடைக்காத டெபுடி அஸிஸ்டெண்ட் அட்ஜூடண்ட் ஜெனரல் பதவியை இவருக்கு வழங்கினர்கள்.

இரண்டாவது உலகப் போர் தொடங்கியது. மீண்டும் டெல்லியில் ராஜபுத்திரப் படையில் கரியப்பா இருந்தார். ஆனல் இப்போது அந்தப் படையின் தலைவருக்கு அடுத்த பதவியை இவர் வகித்தார். 1943-இல் ஒரு படைப் பிரிவுக்குத் தலைவராகவே நியமித்தார்கள். இந்தியருக்கு அதுவரையில் அந்தப்பதவி கிடைத்ததேயில்லை.

அரக்கான் காடுகளில் படைத் தலைமை பூண்டு இவர் போரை நடத்தினர். 18 மாதங்கள் இந்தப் போரில் வீரதீரத்தோடு போர் புரிந்தார். 1944-இல் ஜப்பானியர்கள் இந்தியாவின்மேல் படையெடுக்கத் திட்டம் போட்டார்கள். பிப்ரவரி மாதம் இந்தியப் படைக்கும் ஜப்பானியப் படைக்கும் பர்மாவில் டோங் பஜாரில் பெரிய போர் நடந்தது. ஜப்பானியரின் ஜபம் சாயவில்லை. அந்தப் போரில் கரியப்பாவின் மதிப்பு மிகமிக உயர்ந்து விட்டது.

ரங்கூனை இந்தியப் படை அடைந்தது. அதன்பின் கரியப்பா டில்லிக்கு வந்து ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் வேலைபார்த்தார். பிரிகேடியர் பதவியைப் பெற்றார். இந்தப் பதவிகூட முதல் முறையாக இந்தியருக்குக் கிடைத்தது இப்போதுதான்.

அப்பால் இந்தியாமுழுவதும் பிரயாணம் செய்து ராணுவ அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்தார். அரசாங்கத்தார் இவரை அமெரிக்காவுக்கு அனுப்பி ராணுவக் கலை நுட்பங்களை அறிந்து வரச் செய்தார்கள்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின், இவரை வட மேற்கு எல்லைப் புறத்துக்கு அனுப்பினார்கள். இப் போது மேற்கு அரங்கிலுள்ள படை களின் தளகர்த்தராகக் கரியப்பா இருக்கிறார்.

இளமையிலிருந்தே தேகப்பயிற் சியிலும் பந்தயத்திலும் ஊக்க முள்ள இவர் படை வீரரானது முதல் மேலும் மேலும் உயர்வை அடைந்து வந்திருக்கிறார். இப் போது ராணுவத்தின் தனித் தலை மையையும் பெறப் போகிறார்.

கரியமேனி, ஆறடி உயரம், வழுக்கைத் தலை, வேடிக்கையாகப் பேசும் சுபாவம், குதிரையேற்றத் தில் திறமை, தைரியம் இவை கரியப்பாவின் இயல்புகள். மிகவும் நன்றாக இங்கிலீஷ் பேசுவார். ஹிந்துஸ்தானியும் பேசுவார்.

அஞ்சா நெஞ்சமும் உறுதியும் வாய்ந்தவர். ராணுவ மரியாதை நன்கு தெரிந்தவர். ஒரு சமயம், டில்லியில் ராணுவத்தலைமைக் காரி யாலயத்தில் இவர் பிரிகேடியராக இருந்தபோது, வெள்ளைக்காரக் கர்னல் ஒருவன் இவருக்குச் 'சல் யூட்' அடிக்கவில்லை. ராணுவ மரி யாதைக்குக் குறைவு அது. உடனே இவர் அவனைக் கூப்பிட்டுத் தாழ் வாரத்தில் கீழும் மேலும் போகச் சொன்னார். வேர்த்து விறுவிறுத்துப் போகும் வரையில் அப்படி நடக்கச் செய்தார். பிறகு சோடாவைக் கொடுத்துக் குடிக்கச் செய்து, "இனிமேல் இப்படி யெல்லாம் செய்யாதே, தம்பி; ராணுவ மரியா தைகளை நன்றாகத் தெரிந்து கொள்" என்று அறிவுறுத்தினாராம்.

தம்முடைய ஊரில் இவர் ஒரு புதிய பங்களா வாங்கினார். 1942-ஆம் வருஷம், அதை இவர் பார்க் கப் போனார். சுவரிலே ஐந்தடி உயரத்தில் எலக்ட்ரிக் ஸ்விச்சுகளைப் பொருத்தி யிருந்தார்கள். அவற் றைப் பார்த்த கரியப்பா, உடனே இஞ்சினீயரைக் கூப்பிட்டனுப் பினார். அவரிடம், "இந்த ஸ்விச்சு களைத் தரையிலே சுவரோரமாக வைக்க வேண்டும்" என்றார்.

இஞ்சினீயர் யோசனை பண்ணி னார். அது புதிய வழக்கமல்லவா? சுவரிலே இருப்பதுதான் நல்ல தென்று என்ன என்னவோ கார ணங்களை எடுத்துச் சொன்னாராம்.

கரியப்பா தம் கைகள் இரண் டையும் ஜேபிக்குள் வைத்துக் கொண்டார். "இங்கே பாரும், டிரெஸர் பைக்குள் கையை விட் டுக் கொண்டபடியே விளக்குப் போடவேணுமானால் அஞ்சடி உயரம் காலைத் தூக்கவேணுமே! அது முடி கிற காரியமா?" என்று கேட்டார். இஞ்சினீயர் மறு வார்த்தை பேசா மல் எல்லா ஸ்விச்சுகளையும் கீழே பதித்துவிட்டார்.

கரியப்பாவுக்குக் கல்யாணம் ஆகி யிருக்கிறது. நாற்பதாவது வயசில் கல்யாணம் பண்ணிக்கொண்டார். ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். ஆனால் குடும்ப வாழ்க்கை சுகப்படவில்லை. ஐந்து வருஷ காலந்தான் இவர் மனைவி யோடு வாழ்ந்தார். பிறகு பிரிவு நேர்ந்துவிட்டது.

இவருக்கு ராணுவ வாழ்க்கையே சுபாவமாகப் போய்விட்டது. தகப்பனாரைப் பார்ப்பதற்குக்கூட இவருக்கு இந்த இரண்டு வருஷங் களாக நேரமில்லை.

கார்ட்டூன் கதம்பம்



பத்திரிகை அபிமானிகள்
—'இந்தியா'

—'சங்கார்ஸ் வீக்லி'


பெட்டிப் பாம்பு
அமெரிக்க மாமா
ஜனாதிபதி தேர்தல்
—பம்பாய் கிராணிக்கிள்


காங்கிரஸ் தலைமை
தொழிலாளர் சங்கம்
ஸோஷலிஸ்ட் தலைமை
—'மார்ச்

நமக்கேன் வம்பு மேடையிலே ஏறாதே, தம்பி.
—'ரிபப்ளிக்'

இதுதான் பிழை

1. பதட்டம் என்பது பதற்றம் என்று இருகக வேண்டும். பதறுதல் என்ற அர்த்தத்தில் வரும் அந்தச் சொல் பதறு என்பதிலிருந்து பிறந்தது.

2. பெரிய தலைவர்களாக இருந்த பலர் காங்கிரஸுக்குத் தலைமை வகிக்காமல் இருந்திருக்கிறார்கள். திலகர் காங்கிரஸ் மகாசபையில் நாயகராகத் தலைமை வகிக்கவில்லை.

3. 'தொண்டர் கூட்டம்...பெருகினார்கள்' என்று வருவது தவறு. தொண்டர் பெருகினார்கள் என்று இருக்கலாம்; அல்லது தொண்டர் கூட்டம் பெருகியது என்று இருக்கலாம்.

4. "விடங்கொண்ட மீனைப் போலும் வெந்தழல் மெழுகு போலும், படங்கொண்ட பாந்தள் வாயில் பற்றிய தேரை போலும், திடங் கொண்ட ராம பாணம் செருக்களத் துற்றபோது, கடன் கொண்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற பாட்டில் வருகிறது இந்த அடி. இது கம்பன் வாக்கு அன்று; வேறு யாரோ பாடியது. இலங்கை வேந்தன் வருகிறதனால் இது ராமாயணத்தைச் சேர்ந்ததென்றும், தமிழில் ராமாயணம் பாடினவர் கம்பர் ஆதலால் இது அவர் வாக்கென்றும் எண்ணிப் பலபேர் பல சமயங்களில் இந்தப் பாட்டைக் கம்பருக்கு உரிமையாக்கி விடுகிறார்கள்.

5. வறுமை என்ற பொருளில் வரும் ஏழ்மை என்ற சொல்லின் உருவம் தவறு. ஏழையின் தன்மை ஏழைமை; ஏழ்மை அன்று.

6. கஷ்டங்களால் போராட்டம் பரவலாயிற்று என்பது இவ்வாக்கியத்தின் பொருள். போராட்டம் பரவுவதற்குக் காரணம், கஷ்டங்கள். கஷ்டங்களின் காரணம் போராட்டம் அன்று! போராட்டத்தின் காரணம் கஷ்டங்கள். கஷ்டங்களின் காரணமாக என்றால் கஷ்டங்களுக்குக் காரணமென்றுதான் அர்த்தமாகும். கஷ்டங்கள் காரணமாகப் போராட்டம் பரவலாயிற்று என்று எழுதவேண்டும் தான் சரி.

7. காந்தியடிகள் சத்தியாக்கிரகப் போரை முதல் முதலாக இந்திய நாட்டில் தொடங்கவில்லை; தென் னாப்பிரிக்காவிலேயே சத்தியாக்கிரகப் போரை ஆரம்பித்து நடத்தி வெற்றி கண்டார். அந்த அநுபவத்தை வைத்துக்கொண்டுதான் தம் தாய் நாட்டிலும் அஹிம்சைப் போரை ஆரம்பித்தார்.

8. பொருப்பை என்பது தவறு; பொறுப்பை என்று இருக்க வேண்டும். அந்தச் சொல் பொறு என்பதிலிருந்து வந்தது. தாங்க வேண்டிய பாரம், பொறுக்க வேண்டிய கடமை என்று அர்த்தம் செய்யும்படி அமைந்தது.

9. ஒவ்வொருவனும் என்பது ஒவ்வொருத்தியும் என்று இருப்பது தான் சரி. அவன் - அவள், மகன் - மகள் என்று வருவது போல ஒருவன் - ஒருவள் என்று வருமென்ற தப்பபிப்பிராயத்தின் மேல் எழுந்த பிரயோகம் இது.

10. பழங்காலத்தில் ஐம்பத்தாறு தேசங்களென்றுதான் சொல்லி வந்தார்கள்; ஐம்பத்தெட்டு அல்ல.

11. மாக்ஷிமை என்ற சொல் தவறு. மாட்சிமை என்று இருக்க வேண்டும். மாண் என்ற மூலத்திலிருந்து மாட்சி பிறந்து, அதிலிருந்து மாட்சிமை உண்டாயிற்று.

12. சுவற்றின் மேல் என்பது பிழை. சுவரின்மேல் என்று இருக்க வேண்டும். சுவர் என்பதுதான் மூல வார்த்தை; சுவறு அன்று.

குதிரைப் பந்தயம்



ஜான் ஹாப்ஸ்

அதிசீக்கிரத்திலே பணக்காரனுக ஆசை பிறந்துவிட்டால், பிறன் பணமாவது, தன் பணமாவது? எல்லாம் பணயமாகி விடுகிறது! இவன் அதிருஷ்டக்காரனு? அல்லது……

இன்னும் ஒரே ஒரு ஸ்டேஷன் இருக்கிறது. அப்புறம் 'மகா லட்சுமி' வந்துவிடும். ஆமாம், இவன் ரேஸுக்குப் போகலாமா? 'எல்லாம் நன்மைக்கே' என்று எங்கேயோ இவன் படித்திருக்கிறுன். இவனுக்கு இதுவரைக்கும் ஜாக்கிகளேயும் தெரியாது; ரேஸையும் தெரியாது. ஆனுல் இன்று காலையில் சர்ச்கேட் ஸ்டேஷனிலிருந்து வந்த வண்டியில் ஒரு ஜாக்கியை அகஸ்மாத்தாக இவன் சந்தித்தான். அவனுடன் சம்பாஷித்தபோது, இவனுக்கு என்னவோ உடம்பெல்லாம் புல்லரித்தது. ஜாக்கி ஒரு வாலிபன்; வாலிபன் என்ன, சின்னஞ் சிறு பயல்; தத்துக்கிளி மாதிரி குஷியாக இருந்தான் - பல வர்ணத் தத்துக்கிளி மாதிரி. பாஸ் என்று அவனுக்குப் பெயராம். பாஸாவது பண்ணுங்கட்டியாவது! இந்த ஜாக்கிகளே ஓர் அலாதி வர்க்கம். இவர்களுக்கெல்லாம் என்னவோ ஒரு வீண் பெருமை வந்து விடுகிறது. அந்தச் சிறு பயல் பல ரேஸ்களில் ஜயித்தவன் அல்ல; அவனைப் பார்த்தாலே தெரியவில்லையா?

என்ருலும், இவன் வந்த வண்டியிலேயே அவன் ஏன் வரவேண்டும்? வந்தது தான் வந்தான்; இவனேடு எதற்காகச் சம்பாஷிக்க வேண்டும்? எத்தனேயோ நாள் இருக்க ரேஸ் நாளான இன்று காலையில் ஏன் அந்தச் சம்பாஷணை நடந்தது? இது கடைசி மீட்டிங் நாள். கடைசி நாளில் என்ன வேண்டுமானுலும் நடக்கும் என்று யாரோ சொன்னதை இவன் கேள்விப்பட்டிருக்கிருன்.

அந்தப் பயல் பாஸைப் பார்த்தால் அவ்வளவு அயோக்கியனுகத் தோன்றவில்லை. என்ருலும், அவன் கொடுத்த 'டிப்'பை நம்பலாமா? பாஸை இவன் சந்திக்கச் செய்தது விதி. அது பாக்கியத்தைக் கொடுக்கும் விதியாக இருக்குமா? இவன் அதைச் சோதித்துப் பார்க்கலாமா? இவன் ஜயிப்பானே? அல்லது தோற்றுத்தான் போய் விடுவானே? ஜயித்தால், கொழுத்த ஜயமாக இருக்கும். ஏனென்ருல்

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம்: நவம்பர் '48), பம்பாய்.

பாஸ் மட்டமான ஜாக்கி. தோற்றுப் போய்விட்டாலோ? இவன் கையில் இருக்கும் நானூறு ரூபாயும் கடைப் பணம்; திங்கட்கிழமை காலையில் தம்பிடி விடாமல் முதலாளியிடம் கொண்டுபோய் ஒப்பிக்க வேண்டும். முதலாளியை நினைக்கும்போதே இவன் உடம்பு நடுங்குகிறது.

"முதல் ரேஸிலும் கடைசி ரேஸிலும் நானே 'வின்' அடிக்கப் போகிறேன்" என்று பாஸ் இவனிடம் சொன்னான்.

வண்டி நின்றது. அதுதான் மகாலட்சுமி ஸ்டேஷன். யந்திரம் போல இவன் வண்டியை விட்டு இறங்கினான். தனது சர்ச்கேட் - பாந்த்ரா ஸீஸன் டிக்கட்டை, 'கேட்' அதிகாரியிடம் காட்டிவிட்டு வெளியேறினான். புழுதி கிளம்பிய ரஸ்தாவில் சிந்தித்தவண்ணம் நடந்தான். கூச்சலிடும் பிச்சைக்காரர்களும் மலிவான பென்ஸில்களை விற்கும் சிறுவர்களும் கும்பலாகக் கூடிய டன்னலில் நுழைந்து மீண்டும் திறந்த வெளியை அடைந்தான். மகாலட்சுமியின் முதல் 'என்குளோஷர்' வாயிற்படியருகே போய்ச் சேர்ந்தான்.

"இப்படியே திரும்பிவிடு, தம்பி" என்றது அந்தர்யாமியின் குரல்.

"என்னது! திரும்புவதா? பழையபடி மாசம் அறுபது ரூபாய்க்குத் தாளம் போடும் வாழ்க்கையா?" என்று கேலி செய்தது மறு குரல்.

"ஜெயிலைவிட அறுபது ரூபாய்ச் சம்பளம் எவ்வளவோ மேல்" என்றது முதல் குரல்.

"முட்டாள் கழுதையாகாதே!" என்று திட்டியது மறு குரல்.

'டிக்கட்' எடுத்து, சழலும் 'கேட்' காவலனிடம் நீட்டிவிட்டு, இவன் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தான். இப்போதுதான் ஆறாவது ரேஸ் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் மூன்றே மூன்றுதான் மிச்சம்.

போர்டைப் பார்த்தான். ஏழாவது ரேஸில் ஒரு குதிரைமீது பாஸ் சவாரி செய்யப் போகிறான். ஏழாவது ரேஸில் ஏழாம் நம்பர் குதிரை! அதில் இவன் நூறு ரூபாய் கட்டினான்; பணம் போச்சு!

எட்டாவது ரேஸில் பாஸ் மறுபடியும் ஒரு 'மவுண்ட்' செய்தான். குதிரை நம்பர் மூன்று. திகிலோடு அதில் மற்றொரு நூறு ரூபாயை இவன் கட்டினான். கடைசிக் குதிரையின் வாலைப் பிடித்துக் கொண்டு வந்தது இவன் குதிரை.

இருநூறு ரூபாய்தான் மிச்சம். 'கட்டியது கட்டியாயிற்று; இதையும் தொலைத்துவிடுவது' என்று தீர்மானித்தான். போன இருநூறையுமே திங்கட்கிழமை காலையில் ஈடு செய்ய இவனால் முடியாது; இருநூறு அணாக்கூட இவனுக்கு அகப்படாது. மைதானத்தில் கூடிய அநுதாபமற்ற அந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தைக் கண்டு இவனுக்கு மகா வெறுப்பாக இருந்தது. அவர்களே இவனைப் பெரிய திருடன் என்று பழிப்பார்கள்!

ஒன்பதாவது ரேஸ் - கடைசி ரேஸ் - வந்து விட்டது! இவனுக்கு உடம்பெல்லாம் வேர்த்து வழிந்தது. டிக்கெட் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். வாங்கிப் பயன் உண்டா? இவன் உத்தியோகம் போவது மாத்திரம் அல்ல; இவன்மீது மோசடி வழக்கும் தொடர்வார்கள். இதுதானே இவனுடைய முதல் குற்றம்; அதை அவர்கள் நினைப்பார்களோ? அடேயப்பா! என்ன உஷ்ணமாயிருக்

கிறது! மூச்சு முட்டிப்போகும் போல் இருக்கிறதே!

பாஸ் என்ன சொன்னுன்? முதல் ரேஸிலும் கடைசி ரேஸிலும் அல்லவா 'வின்' அடிக்கப் போவதாகச் சொன்னுன்? அது இவனுக்கு ஞாபகம் வந்தது. அதை ஏன் இவன் முன்பே ஞாபகப் படுத்திக் கொள்ளவில்லை? போன இருநூறையாவது இழக்காமல் இருந்திருக்கலாமே. அதிருக்கட்டும்; முதல் ரேஸில் பாஸ் உண்மையிலே 'வின்' அடித்தானு? பக்கத்திலிருந்த ஒருவனை இவன் விசாரித்தான். 'ஷார்ட்டு ஹெட்'டில் பாஸ் தோற்றதாக அந்த மனிதன் சொன்னுன்.

"நாசமாய்ப் போச்சு!" என்று இவன் மனச் சோர்வுடன் சொல்லிக்கொண்டே, 'வின்' டிக்கட் விற்கும் ஜன்னல் அண்டையில் சென்றுன். மீதி இருநூறு ரூபாயையும் வீசினுன்.

'கமான் அலங்கோலம்!',
'கமான் கள்ள நோட்!',
'கமான் ராட்சசன்!'.

"என்ன நம்பர்?" என்று கேட்டார் ஜன்னல் ஆசாமி.

"பாஸ்" என்று அழுத்தந் திருத்தமாக இவன் கத்தினுன்.

"அப்படி ஒரு குதிரை கிடையாது. நம்பரைச் சொல்லுங்கள்" என்றுர் ஜன்னல் ஆசாமி.

குதிரையின் பெயரைத் தனக்குத் தெரியாது என்று அப்போதுதான் இவனுக்கு ஞாபகம் வந்தது. இவனை ஒரு முட்டாள் என்றல்லவா ஜன்னல் ஆசாமி நினைத்திருப்பார்! பாஸ்! பாஸ்! பாஸ்! இதென்ன சனியன் பிடித்த பெயர்? இவன் ஏன் இதிலெல்லாம் இப்படி வந்து மாட்டிக்கொண்டான்? அந்தப் பீடை பிடித்த வாலிப ஜாக்கியை இவன் ஏன் சந்தித்தான்?

வெகு அலட்சியமாய்ப் பேசும் அந்த ஜன்னல் ஆசாமியை விட்டுத் திரும்பி, பாஸ் சவாரி செய்யப் போகும் குதிரையின் பெயரையும் நம்பரையும் கவனித்தான். அதன் பெயர் ராட்சசன்; நம்பர் ஒன்பது. ஒன்பதாவது ரேஸில் ஒன்பதாவது குதிரை! இதைக் கண்டவுடனே இவன் மனம் குன்றியது. பெயர் தான் எவ்வளவு லட்சணமாயிருக்கிறது!

"வெகு அழகு!" என்றது அந்தர்யாமியின் குரல்.

"கோழை! கோழை! பிதற்றுதே!" என்றது மறு குரல்.

இனி என்ன பிரயோஜனம்? முழுவதும் பார்த்துவிட வேண்டியதுதான். இருநூறு போனுல் என்ன, நானூறு போனுல் என்ன? இரண்டும் ஒன்றே.....மோசடி!

மறுபடியும் இவன் அதே ஜன்னல் அண்டையில் சென்றுன். பணத்தை நீட்டினுன். வெகு அழுத்தமான குரலில், "நம்பர் ஒன்பதில் இருநூறு ரூபாய்" என்று உறுமினுன்.

"நம்பர் ஒன்பதா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஜன்னல் ஆசாமி.

"ஆ - மா - ம்" என்றுன் இவன்.

"அடிக்கட்டும், ஐயா, அதிருஷ்டம்" என்று சொல்லிக்கொண்டே

பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு டிக்கட்டைக் கொடுத்தான் ஜன்னல் ஆசாமி.

"ஏன்?" என்று இவன் ஜன்னலைப் பார்த்துக் கேட்டான்.

"குதிரையும் மட்டம்; ஜாக்கியும் மட்டம்" என்றது ஜன்னலின் குரல்.

"மட்டமான குதிரையா?"

"ஆமாம்; அது மூன்று கால் குதிரை, தம்பி."

"மூன்று கால் குதிரையா?"

"ஆமாம், தம்பி. உனக்கு ஒன்றும் புரியாது; போ!" என்று உறுமியது ஜன்னலின் குரல்.

டிக்கட்டை வாங்கி ஜேபியிலே போட்டுக்கொண்டு, கொட்டகை நிழலிலே இவன் வந்து நின்றான். இண்டிகேட்டரைப் பார்த்தபோது, ராட்சசன்மீது பணம் கட்டியவர் நூற்றுக்கு ஐந்து பேர்தாம் என்று அது காட்டியது. ஜன்னலில் கிளம்பிய குரலே அகிலலோகத்தின் குரலும் என்பதைத்தான் இண்டிகேட்டர் மெய்ப்பித்தது. இவ்வளவு பணத்தை - என், தன் வருங்காலத்தையே - அந்தக் குதிரைமீது இவன் பணயம் வைத்துவிட்டானே!

குதிரைகள் வெளியே வந்து காட்சியளித்தன. இவன் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இதோ ராட்சசன் நடக்கிறது. ஆஹா! அதன் அலங்கார வர்ணங்கள் எவ்வளவு ஜோராயிருக்கின்றன! சிவப்பிலே வெளுப்புக் கோடுகள். அதன் மேலே குல்லாய் தரித்து அமர்ந்திருப்பவனின் வெள்ளை வெளேர் என்ற அந்தத் தர்க்குறித்தனமான முகம் பாவியின் முகந்தான். என்ன விபரீதம்!

"அவை புறப்பட்டுவிட்டன!" என்று யாரோ கத்தினார்கள். இவன் இருதயம் மேலும் துடிப்புடன் படபடத்தது. கழுத்தைக் கொக்குப் போல் முன்னே நீட்டிக்கொண்டு பார்த்தான். இவனுக்கு முன்னால் நிற்கும் யாரோ 'பைனகுலர்' கண்ணாடி வைத்துக்கொண்டு பார்ப்பதைக் கண்டான். அவன் முதுகை மெல்லத் தட்டி, "சிவப்பிலே வெளுப்புக் கோடுகள் போட்ட குதிரை எப்படி வருகிறது?" என்று இவன் கேட்டான்.

"கடைசியில் இரண்டாவதாக வருகிறது. அலங்கோலம் முதலில் வருகிறது. கள்ள நோட் அதை முந்தப் பார்க்கிறது" என்றான் கண்ணாடிக்காரன்.

"தயவு செய்து மறுபடியும் பாருங்கள். ராட்சசன் இன்னும் கடைசியில் இரண்டாவதாகத்தான் வருகிறதா?" என்று இவன் கெஞ்சினான்.

"என்ன வர்ணங்கள்?" என்று கண்ணாடிக்காரன் கேட்டான்.

"சிவப்பிலே வெளுப்புக் கோடுகள்."

"சிறிது முந்தியிருக்கிறது. என்றாலும், கள்ள நோட்டை அது மிஞ்ச முடியாது."

"கமான் கள்ள நோட்", "கமான் அலங்கோலம்" என்று மற்றவர்கள் ஓலமிட்டார்கள். இவனும் விடவில்லை; "கமான் ராட்சசன்!" என்று புலம்பினான்.

இவன் குரலிலே தொனித்த ஏக்கத்தைக் கண்டு, எல்லாரும் இவனையே பார்த்தார்கள்.

"அடே ஸாரின்! நீகூட ரேஸுக்கு வருகிறாய் என்று எனக்குத் தெரியாதே! அந்த நாணயம் உன் வசம் இருக்கிறதா?" என்று பின்புறமிருந்து எழுந்தது ஒரு குரல்.

அந்தப் பீடை பிடித்த குரலை

எங்கே கேட்டாலும், இவன் அடையாளம் கண்டுகொள்ள முடியும். அது இவனைப் பார்த்துச் சீறும்; கீச்சிடும். ஏனென்றால், இவனுக்கு மாதம் அறுபது ரூபாய் கொடுக்கும் குரல் அல்லவா?

இவன் தலை சில்லென்று குளிர்ந்து கனக்கிறது. என்னவோ மகா களைப்பாயிருக்கிறது. இவன் எங்கே இருக்கிறான்? ஒரு நிமிஷத்துக்கு முன்னே எல்லாம் மிகவும் பிரகாசமாயிருந்ததே; இப்போது ஏன் இருள் சூழ்ந்துவிட்டது? இவன் முகத்திலே தண்ணீரை அடித்து, சட்டையை முழுக்க நனைத்துவிட்டார்களே; ஏன்? இவர்களெல்லாம் யார்? "சோறு கண்டிராதவன் போல் தோன்றுகிறது; உஷ்ணம் தாங்கவில்லை" என்று யாரோ சொன்னது இவன் காதில் விழுந்தது.

"பிரக்ஞை வந்துவிட்டது" என்று இவன் அருகிலே முதலாளியின் குரல் கீச்சிட்டது.

"எது ஜயித்தது?" என்று இவன் வாய் முனகியது.

"இரண்டு குதிரைகள் சேர்ந்தாற்போல் வந்தன" என்று யாரோ பதில் சொன்னார்கள்.

"அல்ல. ராட்சசன்தான் ஜயித்தது. ஆனால் அது மற்றக் குதிரைகளை மோதித் தள்ளிவிட்டு முந்தியதாக ஆட்சேபம் எழுப்பியிருக்கிறார்கள்" என்று மற்றொருவர் சொன்னார்.

இவன் தலை கிறுகிறுத்தது. இந்த வேதனையை ஏன் நீடித்துக் கொண்டிருக்கிறார்கள்? மற்றவரெல்லாம் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஓட்டாஞ் சல்லிபோல் வீசுகிறார்கள். இவனோ இந்த அற்ப நானூறு ரூபாய் போனதற்கு இந்தப் பாடு படுகிறான்!

"ஆட்சேபத்தை ஏற்றுக்கொள்வார்கள். கள்ள நோட்டே ஜயித்ததாக முடிவு செய்வார்கள்" என்று அந்தச் சீறும் குரல் கீச்சிட்டது.

ஒரு நொடியில் அறைக்குள் எவனோ கதறிக்கொண்டே ஓடி வந்து, "என் ட்ரெயினர் அநாவசியமான ஆட்சேபம் கிளப்பவே மாட்டான்" என்றான்.

"ஆட்சேபத்தைத் தள்ளிவிட்டார்கள். ராட்சசனே ஜயித்தது! இன்று யாரும் எதிர்பாராத 'ப்ளூக்'. ஒவ்வொரு பத்து ரூபாய் டிக்கெட்டுக்கும் இருநூற்றுப் பதினேழு ரூபாய் பணம் கிடைக்கும்!"

"ஆஹா! நீ மகராஜனாய் வாழணும், பாஸ்! இருபது மடங்கு இருநூறு! என் ரத்தத்தை உறிஞ்சும் அந்தக் கிழத்திடம் அதன் நானூறையும் வீசி எறிந்து, அதற்குச் சலாம் போட்டுவிட்டுக் கிளம்புகிறேன்" என்று இவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

சட்டென்று எழுந்து, "சனவான்களே, என்னைப் பாதுகாத்ததற்கு வந்தனம். ஆனால், இப்போது ஒரு குதிரையின் பலம் எனக்கு வந்துவிட்டது. போய் வருகிறேன்" என்று சொல்லி, குடுகுடு என்று அறைக்கு வெளியே ஓடிவிட்டான்.

* *

திங்கட் கிழமைப் பத்திரிகைகளில் வெளிவந்தது இந்தச் செய்தி: "சென்ற சனிக்கிழமை ரேஸில் ஜயித்த ராட்சசனின் வேர்வையையும் எச்சிலையும் ஸ்டேவர்டுகள் சோதித்துப் பார்த்தார்கள். குதிரைக்குச் சாராயம் கொடுத்திருந்ததாக அதில் தெரியவந்தது. ட்ரெயினர் பேஜெட், ஜாக்கி பாஸ் ஆகிய இருவரையும் மறு விசாரணை நடக்கும் வரையில் சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள்."

வேதத்தில் நெசவு

என். வி. புணதாம்பேகர்
என். எஸ். வரதாசாரி

'கைராட்டை - அதன் சரித்திரமும் புத்துயிரும்' என்ற நூலில் இந்த ஆசிரியர்கள் எழுதியுள்ள ஒரு பகுதி இது; 'அகில பாரத சர்க்கா சங்க'த்தின் பிரசுரம். மகாத்மா காந்தி தலைமையில் அமைந்த கமிட்டியிடம் 20 ஆண்டுகளுக்கு முன் 1000 ரூபாய் பரிசு பெற்ற நூல்.

நெசவுத்தொழில் நூற்றல் தொழிலுக்கும் முற்பட்டதாக இருந்திருத்தல் கூடும். முதல் முதலில் பருத்தித் துணிதான் நெய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் சொல்வதற்கில்லை. மனிதன் நாகரிகம் அடையத் தொடங்கிய காலத்திலேயே நெசவுத் தொழிலையும் கண்டுபிடித்துவிட்டான். ஆனால் அப்போதே அதை அபிவிருத்திக்கு இடமின்றிப் பரிபூரண நிலையில் அமைத்துவிட்டான். மனிதன் நெசவு செய்ய ஆரம்பித்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன; ஆயினும் நூலைப் பாவு போடுதல், பின்னர் ஊடை எறிதல், பாவில் ஒன்று விட்டு ஓர் இழையை மேலும் கீழும் இழுத்தல் ஆகிய தொழில் முறைகளில் இன்றுவரையில் புதியது எதுவும் செய்யப்படவில்லை. ரிக்வேதத்தில் 'பாவு அமைத்து ஊடை எறிந்து நெசவு செய்த' பெரியோர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரிய கலை, முனிவர்களின் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்ததால், சிருஷ்டி ரகசியத்தை விளக்க நெசவுத் தொழிலையே அவர்கள் உவமையாகக் கொண்டார்கள்.

ரிக்வேதத்தில் நெசவுத் தொழிலைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக இருக்கின்றன. 'நெசவு செய்யும் இரண்டு மாதரைப்போல், இரவும் பகலும் சேர்ந்து யக்ஞமென்னும் ஆடையை நெய்து வருகின்றன' என்று ஓரிடத்தில் காணப்படுகிறது. ஜகத் சிருஷ்டிக்காகப் பிரஜாபதி செய்த யகஞும் நூற்றல், நெசவு உவமைகளைக்கொண்டே வர்ணிக்கப்படுகிறது. நெசவுத் தொழிலைக் குடும்பக் கடமைகளில் ஒன்றாக வேதம் சொல்லுகிறது. இரவு நேரத்தில் நூல் இழைகளை எலிகள் துண்டித்து விடுதல் அந்தக் காலத்தில் மிகவும் சாதாரண அநுபவமாக இருந்திருக்க வேண்டும். 'நெசவுக்காரனின் நூல் இழைகளை எலிகள் தின்பதுபோல் என்னைக் கவலைகள் தின்றுகொண்டிருக்கின்றன' என்று ரிக்வேதத்தில் ஒரு வாக்கியத்தைக் காண்கிறோம். இப்படி நெசவு சர்வ சாதாரணமான வீட்டுத் தொழிலாயிருந்தாலும் அதற்குக் கைத்திறமை பெரிதும் வேண்டும் என்பதை அந்தக் காலத்தவர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். 'கைத்திறமையுள்ளவர் ஆடைகளை நெய்வதுபோல் நீங்கள் கவிதை புனைகிறீர்கள்' என்றும், 'ஒளி பொருந்திய முனிவர்கள் ஆகாயவெளியிலும் ஆழ்கடலின் அடியிலுங்கூட, என்றும் புத்தப் புதிதான வஸ்திரத்தை நெய்கிறார்கள்' என்றும் கூறும் வாக்கியங்களில் மேற் சொன்ன உண்மை வெளியாகிறது.

தாய்மையும் குழந்தை வளர்ப்பும்

****

"ஸ்ரீமதி பார்வதி அம்மாள் அவர்கள் அருமையான ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள்" என்று நம் உணவு மந்திரி டாக்டர் ராஜன் இந்தப் புத்தகத்தைப் பாராட்டுகிறார். பிரசவம், குழந்தை வளர்ப்பு முதலியவைபற்றிய வைத்திய சாஸ்திரச் செய்திகளை மட்டும் அல்லாமல், அநுபவத்தால் அறிந்த செய்திகளையும் திரட்டி, கோவையாக, ஒவ்வொரு தாய்க்கும் உபயோகமுள்ள முறையில், சுலபமான தமிழில் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார் ஆசிரியை.

****



பார்வதி ஸ்ரீநிவாசன்

காப்பிரைட் : ஆசிரியை, கோகுலம், சென்னை - 4 (விலை ரூ. 3—0—0)

தாய்மையும் குழந்தை வளர்ப்பும்

ஒரு பெண்ணின் வாழ்க்கையில், அவள் தாயாகப் போகும் பருவந்தான் மிகவும் உத்தமமான பருவம். அப்போது அவள் உடல் வளத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தால், குழந்தை பலமும் குணமும் உள்ளதாகப் பிறக்கும். தவிர, தாய்க்கு எவ்வித மனப்பான்மை இந்தக் காலத்தில் அமைந்திருக்கிறதோ, அதற்கு இசையச் சிசுவும் அமைந்திருக்கும். அவள் அடையும் மன வளர்ச்சியோ, கிளர்ச்சியோ கருவிலுள்ள சிசுவைப் பாதிக்கும். சுபத்திரையின் வயிற்றிலிருந்துகொண்டே அபிமன்யு சக்கரவ்யூகத்தில் புகுந்து சண்டை போடக் கற்றுக்கொண்டான் என்ற கதையின் புதைபொருள் இதுதான்.

கர்ப்பவதி

கர்ப்பவதி மகிழ்ச்சியாய்க் காலங் கழித்து மனசுக்கு உகந்த சூழலில் இருக்க வேண்டும். இதை ஒட்டித்தான், மசக்கை பிறந்ததும் கர்ப்பவதிகளைப் பெற்றோர்கள் கூட்டிச் செல்வது சம்பிரதாயம் போலும்.

மசக்கையில் அதிக வாந்தியும் வயிற்றுப் புரட்டலும் ஏற்பட்டால் 'ஸெரி ஆக்ஸாலிஸ்' (Cerii Oxalis) என்ற சூர்ணத்தை ஒரு டிராம் அல்லது 60 கிரெயின் வாங்கி, 10 கிரெயின் கொண்ட 6 பொட்டலங்களாகச் செய்துவைத்துக்கொண்டு, அதில் ஒரு பொட்டலம் காலையில் ஒரு வாய்த் தண்ணீருடன் விழுங்கச் சொல்லிப் பிறகு ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். சாயங்காலமும் ஒரு பொட்டலம் கொடுக்கவேண்டும். இது வயிற்றுச் சங்கடத்தைக் குறைத்து ஆகாரத்தில் ருசியை உண்டாக்கும். சிலருக்குப் புரட்டலுடன் வயிற்று உப்புசமும் இருப்பதுண்டு. ஒரு 'டீஸ்பூன்' சோடா பைகார்ப் (Soda B carb) என்னும் உப்பை நீரில் கரைத்துக் குடித்தால், உடனே ஏப்பம் வந்து நெஞ்செறலும் குறையும். சுக்குப்போட்ட வெந்நீர் கொஞ்சம் குடிக்கலாம். சிலர் இஞ்சியைத் துண்டாக நறுக்கி உப்பில் ஊற வைத்து உலர்த்தி அதை வாயில் அடக்கிக்கொள்வதுண்டு.

இந்தச் சமயத்தில் கர்ப்பிணிகள் அருந்தும் ஆகாரத்தில் வெண்ணெய், நெய், மிக்க வாசனையுள்ள பதார்த்தங்கள், மாமிசம் இவைகளைச் சேர்க்காமல் இருப்பது நலம். தண்ணீர் அதிகம் பருகவேண்டும். வெறும் தண்ணீர் பிடிக்காவிட்டால் எலுமிச்சம் பழச்சாறு, அல்லது ஆரஞ்சுப் பழச்சாற்றுடன் சேர்த்து அதிகமாகத் தண்ணீரை உட்கொள்வது மிகவும் அவசியம். பச்சைக் கறிகாய்கள், வெள்ளரி, காரட், கீரை வகைகள், பழங்கள், கரகரப்பான ரொட்டி முதலிய கெட்டி ஆகாரங்கள் மிக்க ஆரோக்கியம் அளிக்கும். மெதுவாக மென்று ருசி பார்த்துச் சாப்பிட்டால் புரட்டலும் குறையும்; தேகத்துக்கும் நல்லது.

கர்ப்பவதிகள் ஓரளவு தேகாப்பியாசம் செய்யவேண்டியது அவசியம். உடம்பிலிருக்கும் அசுத்தங்களெல்லாம் கழிவுப் பொருள்களாக மாறிச் சிறுநீரில் இறங்குவதற்கு இது மிகவும் அவசியம். அதற்காக மிதமிஞ்சி ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. நிதானமான ஒரே

மாதிரி வேலைகளும் அப்பியாசமும் செய்யவேண்டும். கனமுள்ள சாமான்களை எந்தச் சமயத்திலும் கர்ப்பிணிகள் தூக்கவே கூடாது. அது கருச் சிதைவதற்குக் காரண மாகும்.

மூன்றும் மாதம் முதல் ஆறும் மாதம் வரையில் கர்ப்பிணிகளுககுக் 'கால்ஷியம்' (Calcium) மிகவும் தேவை. கருச் சிதைவுகளுக்கு, கால்ஷியக்குறைவும் காரணமாகும். சிசுவின் எலும்பு வளர்ச்சிககும் இதை இந்தக் காலங்களில் உபயோகிப்பது அவசியம். 'கால்ஷியம் லாக்டேட்' (Calcium Lactate) என்ற சூர்ணத்தையோ, 'கால்ஷியம் சளூகோனேட்' (Calcium Gluconate) என்ற மாத்திரைகளையோ வாங்கித தண்ணீரில் கரைத்துத் தினம் இருமுறை சாப்பிடுவது நலம். ஆனல், ஆறு மாதமான பிறகு இதைச் சாப்பிடக்கூடாது. மூன்று மாதஙகளுக்குப் பிறகு, மாதம் ஒரு முறை டாக்டரிடம் காண்பித்துக் கொள்ள வேண்டும். ஆறு மாதம் ஆகிவிட்டால் கர்ப்பச் சிதைவு அபூர்வம். பிறகு நன்ருக நடப்பதும் குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதும் நன்மையே.

ஆறு மாதங்கள் ஆன பிறகு கர்ப்பத்தில் சிசு விரைவில் வளர்வதால், தாய் தனக்கு வேண்டிய ஆகாரத்தோடு குழந்தைக்கும் சேர்த்து ரத்தம் தரவேண்டியிருக்கிறது; ஆகவே, அதற்குத் தேவையான ரத்த புஷ்டி தரும் ஆகாரங்களையும் நல்ல சத்துள்ள உணவுகளையும் உட்கொள்வது அவசியம். இரும்புச் சத்துச் சேர்ந்த டானிககுகளைச் சாப்பிடவேண்டும். ரத்தக் குறைவு ஏற்பட்டால் கவனித்துககொள்வது முககியம். மாதம் ஆக ஆகத் தூக்கம் குறைந்து போய் இரவில் கஷ்டப்படுவது இயல்பு. இது ரத்தக் குறைவாலும், வயிற்று உப்புசததாலும் அதிகரிககும். இரவில் லகுவாக ஜீரணம ஆகககூடிய புஷ்டியான ஆகாரம், சாயங்கால வேளைகளில் நடப்பது, ரத்த புஷ்டி டானிககு சாப்பிடுவது இவை தூக்கமில்லாத சிரமத்தைக் குறைககும.

7 அல்லது 8 மாதங்கள் ஆன பிறகு உடம்பு சற்றுப் பருத்து நீர் கோததிருப்பதால், உடம்புக்குச் சற்றும் கஷ்டம் அளிக்காத ஆடைகளைத்தான் அணியவேண்டும். எந்த உறுப்பையும் அழுத்தவோ, இறுக்கவோ செய்யும் உடைகளை உடுத்தககூடாது. 'பெட்டிகோட்டு' என்னும் பாவாடையைக்கூட உபயோகிக்காமலிருப்பது நலம். ரவிக்கை,'பாடிஸ்' முதலியவற்றைச் சற்றுப் பெரியவையாக இறுக்கமில்லாதபடி அணிந்தால் சுகமாக இருக்கும்.

வருமுன் காப்பு

தற்காலத்தில் விஞ்ஞான சாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும் மருத்துவ சாஸ்திரமும் எவ்வளவோ அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. ஆஸ்பத்திரியில் பிரசவத்தின்போது முன் ஜாக்கிரதையாக இருந்து நோவு ஆரம்பமாகும் முன்பே கர்ப்பிணிகளை எச்சரிக்கை செய்வார்கள். நேர்மைக்கு மாருன பிரசவங்களில் 'வயிற்றைப் பிடித்துவிடுவது' (Massage) என்ற சிகிச்சை மூலமாகவே சிசுவின் அமைப்பைத் திருப்பி நேர்ப் பிரசவமாக்கிவிடுவார்கள்.

கர்ப்பிணிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கவேண்டும. ஆகாரம் அதிகமாகவும் கொடுக்கக்கூடாது; குறைவாகவும் கொடுக்ககூடாது.

நல்ல சத்துள்ள ஆகாரம் மிகவும் அவசியம். பழ வகைகள், பால், தயிர், வெண்ணெய் முதலியன நல்லவை. பருப்பு முதலிய 'புரோடீன்' பொருள்களைக் குறைவாகவே உட்கொள்வது நலம். தண்ணீர் அதிகமாக உட்கொள்ள வேண்டும். வாரம் ஒரு முறை பார்லித் தண்ணீர் குடிப்பது உசிதம்.

நீர் இறங்குவது குறைந்துவிட்டால், உடனே டாக்டரிடம் காட்டுவது அவசியம். கவனிக்காமல் இருந்துவிட்டால், கால்களில் நீர் சுரந்துகொண்டு வீங்கிவிடும். நீர் கோத்த சரீரம் உள்ளவர்களுக்குச் சுலபமாக நீரில் 'ஆல்புமின்' (Albumin) சத்துத் தோன்ற இடம் இருக்கிறபடியால், அவர்களை வாரம் ஒரு முறையாவது டாக்டரிடம் காட்டி நீரைப் பரீட்சை செய்யவேண்டும்.

கர்ப்பிணி சாதாரணமாக இருக்கும் நிறையைவிட 20 ராத்தலுக்குமேல் அவளுடைய நிறை அதிகரிக்கவே கூடாது. இதற்கு மேற்கொண்டு உடம்பு கனத்தால், ரத்தத்திலோ நீரிலோ ஏதோ கெடுதல் இருக்கிறதென்று ஊகிக்கலாம். மாதம் ஒரு முறை அவளை நிறுத்துப் பார்த்து மாதத்துக்கு 5 ராத்தலுக்குமேல் அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

சில கர்ப்பங்களில் கருவுக்கு உருவமும் உயிரும் வராமலே ஒரு பிண்டமாக இருப்பதுண்டு. இதைத்தான் 'மும்மாங்காய்' என்றும், 'மோல்' (Mole) என்றும் சொல்வது. இத்தகைய கர்ப்பம் தரிக்கிறவர்களுக்குக் கரு 2,3 மாதம் ஆகியிருந்தாலும், தோற்றத்திலே, வயிறு 5 அல்லது 6 மாதம் ஆனது போல் இருக்கும். தவிர ரத்தப் போக்கும் அடிக்கடி ஏற்படும்; போக்கில் திராட்சை போன்ற கட்டிகள் இருக்கும். அளவு மீறிய பெரிய வயிறும், அகாலப் போக்கும் இதற்கு அறிகுறிகள்.

சாதாரணக் கருவாக இருந்தால், 5 அல்லது 6-ஆம் மாதம் முதல் வயிற்றில் அசைவுகள் தெரியும். 'குழந்தை வளைய வருகிறதா?' என்று பெரியோர்கள் கேட்பது வழக்கம். சிசுவின் இதயத் துடிப்பைச் சாதாரணமாய் ஏழாவது மாதம் முதல் டாக்டர்களால் அறிய முடியும். வயிற்றின் நடுவில் தொப்புளுக்குக் கீழே காதை வைத்துப் பார்த்தால் இது கேட்கும். இந்த மாதிரியாக வளைய வருவதோ இதயத்துடிப்போ தெரியாவிட்டால், இது மேற்கூறிய 'மோல்' ஆக இருக்கும். இப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டால் உடனே தாமதியாமல் டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

ரத்தப்போக்கு, விடாத் தலைவலி, கண் மங்கலாகத் தெரிவது, காலின் ஆடுச் சதையில் இழுப்பு (Cramps), அகாலத்தில் அடிவயிற்றிலும் இடுப்பிலும் வலி ஏற்படுவது, பனிக்குடம் உடைவது ஆகிய இந்தக் குறிகளையும் தாமதமின்றிக் கவனிக்கவேண்டும்.

கனமுள்ள பொருள்களைத் தூக்குவது, இடுப்புச்குச் சிரமம் கொடுப்பது, அதிர்ச்சிகள் போன்றவை கர்ப்பச்சிதைவை உண்டாக்கும். சிலருக்கு மூன்ருவது அல்லது நாலாவது மாதத்தில் கர்ப்பச் சிதைவு ஏற்படுகிறது. ஒரு தடவை அப்படி நேர்ந்தால், பின் கர்ப்பங்களில் அந்த மாதத்தில் அவர்களைப் படுக்கையிலேயே வைத்து ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். அப்படியும் சிதைந்து போனுல், கர்ப்பப்

பையில் ஏதாவது கோளாறு இருக்கும். தாமதமின்றி டாக்டரிடம் சென்று சிகிச்சை பெறுவதால், மேலும் மேலும் குறைப் பிரசவம் நேராமல் தடுக்கலாம்.

சிலருக்கு ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் கர்ப்பச் சிதைவு ஏற்படுகிறது; சிசு வயிற்றிலேயே சேதமாகிவிடுவதும் உண்டு. இப்படி அடிக்கடி நேர்ந்தால், தாயின் ரத்தத்தில் கெடுதல் இருக்கலாம். டாக்டரிடம் காண்பித்து ரத்தத்தைப் பரிசோதித்து வைத்தியம் செய்துகொள்ளாவிட்டால், இது நிற்கவே நிற்காது. வயிற்றிலே கருவுக்குச் சேதம் ஏற்பட்டால், திடீரென்று வயிறு சுருங்க ஆரம்பித்தல், வாயில் துர்நாற்றம், அடிவயிற்றிலும் இடுப்பிலும் வலிகள், வாந்தி ஆகிய அறிகுறிகள் தோன்றும்.

டாக்டர்கள் கர்ப்பிணியைப் பரீட்சித்து, 'இது சுலபமான பிரசவமாக இருக்கும். வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம்' என்று சொன்னாலொழிய, வீட்டில் வைத்துக்கொள்வது உசிதமில்லை. வீட்டில் வைத்துக் கொள்ளச் சில அடிப்படையான வசதிகள் தேவை. ஒரு சுத்தமான அறையை அதற்கென்றே ஒழித்து வைக்க வேண்டும்.

இந்த அறையைப் பிரசவத்துக்கு 15 அல்லது 20 நாளுக்கு முன்பாகவே சுத்தம் செய்து 'பினைலா'ல் (phenyle) மெழுகிப் பூட்டி வைக்க வேண்டும். இந்த அறைக்குள் ஜலதோஷம், ஜுரம் முதலிய வியாதி உடையவர்கள் வரக்கூடாது. மிகக் குட்டையாக இல்லாத பெஞ்சியும், அதன்மேல் கெட்டியான நார் மெத்தையும், ஒரு பெரிய ரப்பர்த் துணியும் இருக்கவேண்டும். எல்லாவற்றையும் 'பினைல்' அல்லது 'லைஸால்' (Lysol) உபயோகித்துச் சுத்தம் செய்யவேண்டும். 'அணுக்கிருமிகளை அண்டவிடாத' (Aseptic) நிலையில் அதிசுத்தமாக வைப்பதற்கு, அணுக்கிருமி நாசினியான 'பினைல்' 'லைஸால்' போன்றவைகளால்தான் சாத்தியமாகும்.

பெட் பான் (Bed-Pan), எனிமாப் பீங்கான் (Enema Can), ரப்பர்த் துணி, வைத்தியப் பஞ்சு (Sterile Absorbent Cotton), வேக வைத்துச் சுத்தம் செய்து பிரத்தியேகமாக விற்கும் துணி (Surgically Sterilised Pads), வயிற்றைக் கட்டும் துணி (Abdominal Bandage), ஸோப், லோஷன் மருந்து (Antiseptic), குழந்தையின் கண்ணுக்கு வைக்கப் பஞ்சால் செய்த சிறு பட்டை (Cotton Wool Pledgets), குழந்தைக்கு வயிற்றில் சுற்றக் கம்பளி (Binder), போரிக் பவுடர், பேஸின்கள், பெரிய, சிறிய ஸேப்டி பின்கள், நன்றாகக் கொதிக்க வைத்து ஆறின தண்ணீர், கொதிக்கும் தண்ணீர் - இவற்றையெல்லாம் சுத்தமாக வைக்க வேண்டும்.

அபாயமான கர்ப்பம்

சிநேகிதி கமலாவின் வீட்டில் அவள் தங்கைக்கு வளைகாப்பு என்று அழைப்பு வந்தது. அம்மாவும் நானும் போயிருந்தோம். சோபாவைச் சுற்றிலும் பூவினால் வெகு அழகாய்ச் சிங்காரித்திருந்தார்கள். அதில் அவளை உட்கார வைத்துப் பாடினார்கள். அவளால் வெகு நேரம் உட்கார முடியவில்லை என்று சீக்கிரமாகவே ஆரத்தி சுற்றி எழுப்பிவிட்டார்கள்.

இந்த விஷயங்களில் அம்மாவுக்கு அநுபவம் அதிகம். அவள் சில இரட்டைப் பிரசவங்களில் உதவி

செய்தும் இருக்கிருள். சாதாரணமாக இரட்டைக்கு வயிற்றின் அளவும் மூச்சு வாங்கலும் கொஞ்சம் அதிகமாகவேதான் இருக்கும். முதலில் மசக்கையும் வாந்தியும் அதிகமாயிருக்கலாமே தவிர, இந்த மாதிரித் திணறலுக்கும், வயிறு இவ்வளவு பெரியதாக இருப்பதற்கும் காரணம் இருக்கவேண்டுமல்லவா? மூன்று மாசம் பூர்ணமான பிறகு தான், கர்ப்பம் மேல்வயிற்றுக்கு வருகிறது. ஆகையால், நாலாவது மாசத்திலேயே வயிறு இவ்வளவு பெரியதாக இருப்பது தவறு என்று தோன்றியது அம்மாவுக்கு.

அம்மாவின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டபின், கவலையுடன் கமலாவின் தாய் அவளை மறுநாளே டாக்டரிடம் அழைத்துச் சென்ருள். பரீட்சை செய்து விட்டு அவர், "இது வெறும் இரட்டையல்ல; சிக்கல்களும் (Complications) உண்டு. 'எக்ஸ்ரே' படம் பிடித்துப் பார்த்த பிறகே சிகிச்சை செய்யவேண்டும்" என்ருர்.

படம் பிடித்துப் பார்த்தபின், "கர்ப்பம் இரட்டை மட்டுமல்ல, கர்ப்பப் பையில் நீரும் நிரம்பியிருக்கிறது. இந்த அதிக நீர் கருவை வளரவிடாமல் தடுக்கும். தாய்க்கும் மிகவும் சிரமம் கொடுக்கும். நாள் ஆக ஆகக் கஷ்டம் அதிகரிக்குமே தவிர, கரு வளரவே முடியாது. இந்தக் கர்ப்பம் கெடுதல். இதை உடனேயே எடுத்துவிட வேண்டும்; அதாவது 'அபார்ட்' (Abort) செய்ய வேண்டும்" என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

'அபார்ட்' (Abort) செய்வது என்ருல், கர்ப்பத்தை வளரவிடாமல் எடுத்துவிடுவதுதான். இந்த வார்த்தைக்கே ஒரு தவருன அர்த்தம் வந்துவிட்டது.

எனக்குத் தெரிந்த எத்தனையோ பேர் தாங்கள் ஏழை என்ற காரணத்தாலோ, அல்லது 'குழந்தை வேண்டாம்' என்ற எண்ணத்தாலோ சிதைவை உண்டாக்குகிருர்கள். இந்த நோக்குடன் கருஞ்சீரகம் முதலிய நாட்டு மருந்துகளைத் துளியும் யோசனையில்லாமல் சாப்பிடுகிருர்கள். இதனுல் அசாத்திய ரத்தப் போக்கு (Haemorrhage) ஏற்பட்டு, கரு உள்ளேயே தங்கி, ஜன்னி கண்டு உயிருக்கே ஆபத்து வந்துவிடுகிறது. இந்த நிலையில் பிழைப்பது புனர்ஜன்மந் தான்!

எப்பொழுதுமே இரட்டை யென்று சந்தேகம் உண்டானுல், உடனே டாக்டரிடம் காட்டித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இரட்டைகளில், கஷ்டமும் எக்கச்சக்கமான சிரோதயமும் கோளாறுகளும் விரைவில் ஏற்படக் கூடும். நல்ல டாக்டரின் உதவியும், மருத்துவச்சியின் உதவியும், சுத்தமான வீடும் உள்ளவர்களே பிரசவத்தை வீட்டில் வைத்துக்கொள்ளலாம். சௌகரியக் குறைவு உள்ளவர்கள், 'நர்ஸிங் ஹோமி'லோ ஆஸ்பத்திரியிலோ வைத்துக் கொள்வதுதான் நலம்.

நிஜ நோவும் பொய் நோவும்

பிரசவத்துக்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பே, வயிறு தழைந்து இறங்கியிருக்கும். உடம்பு லேசாகவும் சௌகரியமாகவும் இருக்கும். மூச்சுவிட முடியாமல் திணறுவது, உட்கார முடியாமல் சிரமப்படுவது முதலான குறிகள் குறைந்திருக்கும். ஆனுல் நடக்கும்பொழுதும், குனிந்து நிமிரும்பொழுதும் கஷ்டம் அதிகரிக்

கும். கடைசி வாரத்தில் உடல் இளைப்பதும், கண் குழிவிழுவதும் முன்னெச்சரிக்கைகள்.

உரிய காலம் வந்ததும் பிரசவ நோவு உண்டாகும். இது காலத்துக்கு முன்பு உண்டானால் 'பொய் நோவு' (False pains) எனப்படும்.

பொய்நோவு பிரசவத்துக்கு உரிய நாள் ஆவதற்கு முன்பே வரும்; இந்த வலி அதிகமாக இடுப்பில் தோன்றாமல், வயிற்றிலேயேதான் இருக்கும்; மணிப் பிரகாரம் விட்டு விட்டு வராமல், நச்சு நச்சென்று தொடர்ந்திருக்கும்; வலி வரும் பொழுது வயிறு இறுகிக் கல்லுப் போல் ஆகாது.

பொய்நோவு மலச்சிக்கலினால் ஏற்படலாம். அப்பொழுது ஒரு சூடான 'எனிமா' எடுத்துக் கொள்வதால், நோவு நின்றுவிடும்.

ஆனால், நிறை மாதத்தில் பேதிக்கு மருந்து சாப்பிட்டு மலச்சிக்கலைத் தவிர்க்க முடியாது. மாதம் ஆன பிறகு பேதி மருந்து சாப்பிடுவதால், கர்ப்பப்பை தளர்ந்து நோவு உண்டாகி, அகாலப் பிரசவம் ஏற்படக் கூடும். ஆகையால் நிறை கர்ப்பிணி மலச்சிக்கலைப் போக்க இரவில் ஒரு டீஸ்பூன் விளக்கெண்ணெயோ, லிக்விட் பாரபின் (Liquid Paraffin) என்னும் எண்ணெயோ பாலில் கலந்து உட்கொள்வது நலம்.

ஏற்கனவே கர்ப்பச் சிதைவு ஏற்பட்டிருக்கிறவர்கள் கருத் தரித்திருக்கிற காலத்தில் பேதிக்காக ஒரு மருந்தும் சாப்பிடவே கூடாது.

பிரசவம்

சாதாரணமாக நாம் மாதக் கணக்குப் பார்ப்பது தவறிப் போகிறது. டாக்டர்கள் நாட்களைத்தான் கணக்கிடுகிறார்கள். அது பெரும்பாலும் சரியாக இருக்கிறது.

ஸ்நானம் செய்த தேதி மாதக் கடைசியாக இருந்தாலும் நம்மவர்கள், ஒரு மாதம் என்று கணக்கு வைத்துக்கொள்வார்கள். அதுதான் தவறு.

கடைசி மாதவிடாயில் ஸ்நானம் செய்த தேதிக்கு மூன்று மாதங்கள் பின்சென்று ஆறு நாட்களைக் கூட்டினால், சரியான கணக்கு வரும். அதாவது, ஆகஸ்ட் 15-ஆம் தேதி ஸ்நானம் செய்திருந்தால் மூன்று மாதம் பின்செல்ல மே 15-ஆம் தேதி ஆகிறது. அத்துடன் ஆறு நாட்களைக் கூட்டினால், மே 21-ஆம் தேதி. சரியான நாள் இதற்கு ஒரு வாரம் முன்னே பின்னே இருக்கலாம்.

சாதாரண உடல்வளமுள்ளவர்களுக்கு இப்படிக் கணக்குப் பார்க்கும் நாளன்று சரியாகக் குழந்தை பிறக்கும். பலவீனமாய் இருந்தாலும், ஏதாவது அதிர்ச்சி ஏற்பட்டாலும், ஒரு மாதத்திலோ, இருபது நாளுக்கு முன்போ குழந்தை பிறப்பதும் உண்டு. ஆகவே, நாம் ஜாக்கிரதையாய் எப்போதும் முன் கூட்டியே தயாராக இருப்பது நலம்.

நோவு எடுத்தவுடன் சில முக்கியமான விஷயங்களைக் கவனிக்க வேண்டும்:

(1) 'ஒட்டடை'யடித்துச் சுண்ணாம்பு பூசி ஒரு மாதத்துக்கு முன்பே பிரசவ அறையைத் தயார் செய்ய வேண்டும். (2) நன்றாகத் தேய்த்துக் கழுவின பாத்திரத்திலோ, 'பேஸினி'லோ, தண்ணீரைத் தளதளவென்று கொதிக்கவிட்டு மூடி வைக்க வேண்டும். வண்ணானிடம் வெளுத்த

சவுக்காங்கள், படுக்கை விரிப்புகள், குழந்தையை எடுக்கத் துணிகள் இவற்றைத் தயாராக மேசை டிராயரில் வைக்கவேண்டும். (3) ஒரு பேஸின் தண்ணீரில் ஒரு கத்தரிக்கோல், கொடியைக் கட்டுவதற்குப் பட்டு நூல், பஞ்சில் பிய்த்த சில துண்டுகள் இவற்றைப் போட்டு மூடிக் கொதிக்க வைத்திருக்க வேண்டும். (4) பெஞ்சின்மேல் கெட்டியான படுக்கை போடலாம். மேலால் தடவிய ரப்பர்த் துணியும், அதற்குமேல் வெளுத்த விரிப்பும் ஏற்றவை. பெஞ்சை அறையின் மத்தியில் போட்டு, டாக்டரும் உதவி புரிகிறவர்களும் போக இரு பக்கங்களிலும் இடம் விடவேண்டும்.

நோவு ஆரம்பமானதும் கர்ப்பிணியை நன்றாக ஸ்நானம் செய்வித்துத் தலைவாரிவிடுவது நலம். காலை வேளையாக இருந்தால் ஓர் அவுன்ஸ் அல்லது 2 டேபிள் ஸ்பூன் விளக்கெண்ணெய் கொடுக்கலாம். ஒத்துக் கொள்ளாதவர்களும் பலவீனர்களும் விளக்கெண்ணெய் குடிக்கக் கூடாது. நோவு மத்தியானத்திக்கு மேல் ஆரம்பித்தாலும் எண்ணெய் கொடுக்க வேண்டாம். ஒரு சூடான 'எனிமா' கொடுத்தால் போதும்.

வயிற்றில் மலம் நிறைந்திருந்தால் குழந்தை வெளியில் வரும் பொழுது, இந்த மலம் குழந்தை மேல் படுவதன்றி, தாய்க்கும் ஆபத்தை விளைவிக்கும். நோவு அதிகரிப்பதற்கு முன்பாகவே இரண்டு தடவை நன்றாக வெளிக்குப் போக வேண்டியது அவசியம். வெளிக்குப் போன பிறகு கொஞ்சம் ஆகாரம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், பலமான நோவைத் தாங்கச் சக்தியில்லாமல், நாக்கு உலர்ந்து கஷ்டப்படுவார்கள். அதிகமான ஆகாரமும் கொடுக்கக் கூடாது. தலை திரும்பிப் பிரசவம் ஆகும் போது பலர் வாந்தி எடுப்பது வழக்கம். கரைத்த ரஸமும் சாதமுமோ சூடான காபியோ கொடுப்பது அவசியம். ஒரே அடியாகப் பட்டினி போட்டாலும் களைப்பினால் மயக்கம் வந்து, பிரசவத்துக்கு இடையூறாக முடியும். ஒரு நோவு வந்து நின்று மறுபடியும் இன்னொரு நோவு தொடங்குவதற்கு முன், கர்ப்பவதியை மெதுவாக அறையிலேயே நடக்க வைப்பது நலம்.

குழந்தையின் தலை வெளியில் வந்ததும், அதை இடது கையால் தாங்கிக்கொண்டு வலது கையால் கழுத்தைச் சுற்றித் தடவிப் பார்ப்பது அவசியம். சில சமயங்களில் 'தொப்புள் கொடி' குழந்தையின் கழுத்தைச் சுற்றியிருக்கும்; அதைக் கவனிக்காவிட்டால் அது கழுத்தை இறுக்கும்; அதனால் குழந்தை இறந்துவிடும். அப்படிக் கழுத்தைச் சுற்றியிருக்கும் கொடியை எடுத்துத் தலைவழியாய் மெதுவாக மிக ஜாக்கிரதையுடன் கழற்றி விடவேண்டும்.

பிறகு குழந்தையின் கண்களைத் துடைக்க வேண்டும். 'பேஸின்' தண்ணீரில் கொதிக்கவிட்டு மூடி வைத்திருக்கும் ஒரு பஞ்சுத் துண்டை எடுத்துப் பிழிந்துவிட்டு, அதைத் தயாராக இருக்கும் 'போரிக் லோஷ'னில் நனைத்துக் குழந்தையின் கண்களை மெதுவாய் நன்றாகத் துடைக்க வேண்டும். ஒவ்வொரு கண்ணுக்கும் வெவ்வேறு பஞ்சை உபயோகிக்க வேண்டும். (ஓர் அவுன்ஸ் காய்ச்சி ஆறின ஜலத்தை நன்றாக வடிகட்டி அதில் இரண்டு 'சிமிட்டா' 'போரிக் பவுடரை'ப் போட்டு மறுபடி கொதிக்க வைக்க

வேண்டும். ஆறிய பிறகு ஒரு சுத்தமான புட்டியில் விடவேண்டும். இதுதான் 'போரிக் லோஷன்'.)

தலை வெளியே வந்த பிறகு, ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் நோவு இல்லாமல் இருக்கும். பிறகு நோவு மறுபடி வந்து, குழந்தை முழுவதும் வெளிவரும். அவ்விதமின்றி, நோவு நின்று, குழந்தையின் உடல் வராமல் தடைப்பட்டால், தலையையோ கழுத்தையோ பிடித்து இழுக்கவே கூடாது. நம் பலத்தை உபயோகித்து எதுவும் செய்யக்கூடாது. எல்லாம் இயற்கையின் நியதிப்படி தான் நடக்கவேண்டும். இரண்டு விரல்களை உள்ளே விட்டு, தோளைப் பற்றிக்கொண்டு மெதுவாக உதவுவதுதான் வழி. விரலை விடுவது, குழந்தையின் கழுத்து அழுந்திப் போய் மூச்சு நின்றுவிடாமல் தடுக்கவே.

ஜனன சிகிச்சை

பிறந்தவுடன் குழந்தை அழ வேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால், குழந்தையின் வாயில் கோழை சேர்ந்துகொண்டு அழ முடியாமல் கஷ்டப்படுகிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும். சுத்தமான துணியை விரலில் சுற்றிக்கொண்டு வாயைத் துடைத்து விட்டால், குழந்தை உடனே அழ ஆரம்பிக்கும். இவ்விதம் செய்த பிறகும் அழாவிட்டால் 'தொப்புள் கொடி'யைக் கத்தரித்துவிட்டு உடனே குழந்தையைக் கவனிக்க வேண்டும். குழந்தையின் கால்களைப் பிடித்துக்கொண்டு மெதுவாகத் தூக்கி முதுகில் தட்டவேண்டும். அவசியம் ஏற்பட்டால் குளிர்ந்த நீர்த் துளிகளை முகத்தில் தெளிக்கலாம். இவ்விதம் செய்ததும் குழந்தை அழ ஆரம்பிக்கும். குழந்தை நன்றாய் அழுதுகொண்டும், மூச்சு விட்டுக்கொண்டும் இருந்தால், 'தொப்புள் கொடி'யைக் கத்தரித்துவிட வேண்டும். பிறகு குழந்தையை ஒரு கம்பளியால் சுற்றிவிட்டுத் தாயைக் கவனிக்கவேண்டும்.

முன் காலத்தில் நம்மவர்கள் 'நஞ்சு' விழுகிறவரையில் குழந்தையைக் கவனிக்கவே மாட்டார்கள். 'தொப்புள் கொடி' என்பது தாய்க்கும் குழந்தைக்கும் தொடர்பாக இருக்கிறது. குழந்தை வயிற்றிலிருக்கும்போது, கொடியின் வழியாகத் தான் ரத்தமும் ஆகாரமும் செல்கின்றன. வெளியே வந்த பிறகும் தாயின் ரத்தம் குழந்தைக்கு வருகிறது. 'தொப்புள் கொடி'யைப் பிடித்துப் பார்த்தால் நாடி அடிப்பது புலப்படும். குழந்தை பிறந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் இந்த நாடி நின்றுவிடும். நாடி நின்ற பிறகுதான் கொடியைக் கத்தரிக்க வேண்டும். இல்லாவிட்டால், நஞ்சின் விஷம் குழந்தையின் ரத்தத்தில் பரவி, 'செவ்வாப்பு' என்னும் வியாதியை உண்டுபண்ணுகிறது. நாடி நின்றதும், குழந்தையின் தொப்புளிலிருந்து இரண்டு அங்குலம் விட்டு, நம் விரல்களால் அந்த இடத்தை நசுக்கித் தட்டையாகச் செய்யவேண்டும். பிறகு அங்கே ஒரு கட்டுப் போடவேண்டும். முன் சொன்னபடி 'ஸ்டெரிலைஸ்' செய்த கெட்டியான பட்டு நூலால்தான் கட்டவேண்டும். நன்றாக இறுகக் சட்டிக் கெட்டி முடிச்சைப் (Reef Knot) போடவேண்டும். பிறகு தாயின் பக்கமாகவுள்ள கொடியை மூன்று அங்குலம் விட்டு அங்கும் இதேபோல் ஒரு முடிச்சைப் போட வேண்டும். பின்பு குழந்தையின் தொப்புளுக்கு அருகில் போட்

டிருக்கும் கட்டுக்கு அரை அங்குலம் விட்டுக் கத்தரிக்க வேண்டும். முன்பே 'ஸ்டெரிலைஸ்' செய்த கத்தரிகை 'லோஷனி'ல் அலம்பி உபயோகிக்கவேண்டும். நன்றாகக் கட்டியிருந்தால், குழந்தையின் கொடிப் பக்கத்திலிருந்து ரத்தம் கசியாது. கசிந்தால், அதன் பக்கத்தில் இன்னொரு முடி போடவேண்டும்.

குழந்தை பிறந்த அரைமணி நேரத்துக்கெல்லாம் 'நஞ்சு' விழ வேண்டும். பிரசவமானவுடன் நோவு நின்று 'நஞ்சு' விழாமலேயே தங்கினால் அபாயம்.

முதல் பிரசவ சமயத்தில், 'சிறு கிழிசல்' (Tear) ஏற்படுவதுண்டு. ஆகையால் இதைக் கவனித்து, டாக்டரை வரவழைத்துத் தையல் போடவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் ஜன்னி வரக்கூடும்.

பிறகு தாயாரைச் சுத்தம் செய்யவேண்டும். 'பேஸினி'ல் ஆவியில் வேகவைத்த பஞ்சுத் துண்டுகளை எடுத்து 'லோஷனி'ல் நனைத்துச் சுத்தமாகத் துடைக்க வேண்டும். துடைக்கும்பொழுது வயிற்றுப் பக்கத்திலிருந்து கீழுக்கு வரவேண்டும்; மேல் நோக்கித் துடைக்கக் கூடாது. ஆவியில் வைத்து 'ஸ்டெரிலைஸ்' செய்த துணிகளையோ, அவ்விதம் செய்து விற்கும் துணிப்பட்டைகளையோதான் (Sanitary Towels) உபயோகிக்க வேண்டும். அசுத்தமான துணிகளைத் தாயாருக்கு அருகில் கொண்டு போகவே கூடாது. அடியிலிருக்கும் துணியையும் ரப்பர்த் துணியையும் எடுத்துவிடவேண்டும். பிறகு ரப்பர்த் துணியைமட்டும் 'லோஷனு'ல் சுத்தம் செய்து போட்டு அதன் மேல் வேறு வெளுத்த துணியைப் போடவேண்டும்.

'ஸ்டெரிலைஸ்' செய்ய நேரம் போதாவிட்டாலோ, வசதி இல்லாவிட்டாலோ, சுத்தமான வெள்ளைத் துணியை மடித்துத் தீயில் காட்டி ஜாக்கிரதையாய்க் காய்ச்சி உபயோகிக்கலாம்.

பிறகு 9 அல்லது 10 அங்குல அகலமும், நாலு கஜ நீளமும் உள்ள கெட்டியான துணியினால் தாயாரின் அடிவயிற்றைச் சுற்றி இறுகக் கட்டவேண்டும். இடுப்பு எலும்புக்கு இரண்டு அங்குலம் கீழ்வரை இறக்கியும், மேற்பக்கம் கொஞ்சம் தாராளமாகவும் கட்டவேண்டும். கட்டின் முடிவை 'ஸேப்டி பின்'களால் சேர்த்து வைக்கவேண்டும். பிறகு தாயாருக்குக் கொஞ்சம் சூடான நீர்-ஆகாரம் கொடுத்து, அவள் மல்லாந்து படுத்து இளைப்பாறச் செய்யவேண்டும். 24 மணி நேரம் அவள் திரும்பவே கூடாது.

பிறந்த குழந்தை

பிறந்த குழந்தையின் கண்ணை முதலில் கவனிக்க வேண்டியது அவசியம். 'போரிக் லோஷனி'ல் (Boric Lotion) நனைத்த சுத்தமான பஞ்சினால் கண்களை நன்றாகத் துடைத்து, பிறகு ஒரு சொட்டு 'ஆர்ஜிரல்' (Argyrol 5% Solution) கண்ணில் விடவேண்டும். தாயாருக்குப் புண் (Vaginitis) இருந்தால், அந்தக் குழந்தையின் கண்ணை வெகு ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். டாக்டரிடம் காட்டி உடனே சிகிச்சை செய்ய வேண்டும்.

குழந்தையின் கண்ணைச் சுத்தம் செய்தபின் அதன் தொப்புள் கொடியைக் கவனிக்க வேண்டும். முன்பே கட்டியிருப்பது சரியாக இருக்கிறதா, ரத்தம் கசிகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

கசிந்தால் மறுபடி ஒரு கட்டுப் போட்டுப் பின்பு குழந்தையைக் குளிப்பாட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

குழந்தையின் உடல்மீது ஒரு விதப் 'பிசின்' மாதிரி வெள்ளை மாவு ஒட்டிக்கொண்டிருக்கும். இது தண்ணீரால் கழுவுவதாலோ, ஸோப் தேய்த்து அலம்புவதாலோ போகாது. உடல் முழுதும் நல்லெண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெயை (Olive Oil) நன்ருய்ப் பூசிவிட்டுக் குழந்தையை மிகவும் ஜாக்கிரதையாகக் குளிப்பாட்ட வேண்டும். தொப்புளில் தண்ணீர் விழாமல் இருப்பது நலம். குளிப்பாட்டிய பிறகு தொப்புள் பக்கத்தில் ஈரமில்லாதபடி சுத்தமான துணியினுல் ஒற்றிவிட்டு, 'போரிக் பவுடரை'த் (Boric Powder) தூவவேண்டும்; நல்ல சுத்தமான பஞ்சை மேலே வைத்து ஒரு துணியால் வயிற்றைச் சுற்றிக் கட்டவேண்டும்.

குழந்தை பிறந்த சில மணி நேரத்துக்கெல்லாம் தாராளமாக நீர் இறங்க வேண்டியது மிக அவசியம்; பிறகு வெளிக்குப் போகும். நம்மவர்கள் குழந்தை பிறந்ததும் தேனும் விளக்கெண்ணெயும் கலந்து 'செவ்வெண்ணெய்' புகட்டுவார்கள். இவ்விதம் குழந்தை பிறந்த முதல் நாளில் மூன்று நான்கு தடவை புகட்டுவது நல்லது. இதனுல் குழந்தை மூன்று அல்லது நான்கு தடவை வெளிக்குப் போகும். தாயின் வயிற்றிலிருக்கும்போது அது விழுங்கின ரத்தமும் இதர அசுத்தங்களும் வெளியில் வந்த பிறகுதான், ஆகாரம் உள்ளே செல்லும். அதுவரை 'ஓக்காளமு'ம் வாந்தியும் உண்டாவது சகஜம். பிறந்தவுடன் குழந்தைகளுக்கு இந்தச் 'செவ்வெண்ணெயை'த் தவிர வேறு ஆகாரமே தேவையில்லை. குழந்தையின் சாயான் எதையும் கொதிக்க வைக்காமல் உபயோகிக்கவே கூடாது.

குழந்தை பிறந்த 8 அல்லது 10 மணி நேரத்துக்கெல்லாம் குழந்தையைத் தாயிடம் பால் குடிக்க விடுவது நல்லது. இப்போது தாயிடம் பால் சுரக்காது. ஆனுல் ஒரு வித ஜலம் சுரக்கும்; விளக்கெண்ணெய் மாதிரி கொழகொழப்பாயிருக்கும். இது பிறந்த குழந்தைக்கு மிகவும் நல்லது. ½ ஸ்பூன் இருந்தாலும் குழந்தைக்கு அதிக நலனைத் தரும். பிறந்த பத்து நாளுக்குள்ளாகவே குழந்தைக்கு எவ்வளவோ வியாதிகள் ஏற்படுகின்றன. பல, நம் அஜாக்கிரதையினுல்தான் உண்டாகின்றன.

குழந்தைக்கு 'நாக்குப் புண்' என்பது வெள்ளையாய வெந்து போன மாதிரி இருக்கும். இதற்குத் 'த்ரஷ்' (Thrush) என்று பெயர். 'மெல் போரேஸிஸ்' (Mel Borascis) என்னும் மருந்தைத் தடவினுல் இரண்டே நாளில் குணமாகிவிடும். இது 'பூஞ்சக்காளம்' போன்ற படை. கீழே சொல்லியிருக்கும் விதிகளை அநுசரித்துச் சுத்தமாக இருந்தால், புண் வரவே வராது.

பிரசவித்த தாய்

கர்ப்பிணியைப் பாதுகாப்பதிலும் பிரசவத்தை நடத்துவதிலும் எவ்வளவு சிரத்தையுடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்கிருேமோ, அதைவிடச் சிறிதும் குறையாத வகையில் தாயையும் பாதுகாக்க வேண்டும். எந்த விதத்தில் தாய்க்குத் தேக அசௌகரியம் ஏற்பட்டாலும் அது

குழந்தையையும் பாதிக்கும் என்பதை மறக்கக்கூடாது.

நோவினுல் ஏற்பட்ட சிரமங்களாலும் பிரசவ சமயத்தில் பட்ட சிரமத்தினுலும் பலவீனம் அடைந்து அலுத்திருக்கும் தாயை வியாதிக் கிருமிகள் அண்டுவது வெகு சுலபம். கிருமிகளை அண்டவிடாமல் தடுப்பது மிகவும் அவசியம். இதற்கு, பிரசவ அறையை மிகச் சுத்தமாகவும் 'அஸெப்டிக்' ஆகவும் வைத்துக் கொள்ள வேண்டும். சிகிச்சை செய்பவர்களும் சுத்தமாக இருப்பது அவசியம். ஏதாவது ஒரு 'லோஷன்' - முக்கியமாக 'டெட்டால்' (Dettol) - கொண்டு கையை நன்ருகக் கழுவிய பிறகே தாயை அணுகவேண்டும். உதவி செய்பவர்களுக்கு ஒருவித நோயும் இருக்கக்கூடாது. முக்கியமாக ஜல தோஷம், ஜுரம், இருமல், கை கால் அடிபட்டுச் சீ வைத்தல் முதலிய உபாதை உள்ளவர்கள் பிரசவ அறையருகில் செல்வதுகூட அபாயம்.

பிரசவமானதும் மூன்று நாள் வரைக்கும் திரவ ஆகாரம் கொடுப்பது வழக்கம். இதுதான் நல்லது. பிரசவித்தவுடனே நீர் இறங்குவது கஷ்டம். நீர் இறங்கினுல்தான் உடலில் உள்ள அசுத்தங்கள் கழிந்து ரத்தம் சுத்தப்படும். இதற்குத் தாராளமாகத் தண்ணீரையும் திரவ ஆகாரங்களையும் கொடுக்க வேண்டும். மூன்ரும் நாள் விளக்கெண்ணெய் கொடுப்பது நல்லது. இரண்டு மூன்று தடவை போகும்படி முக்கால் அல்லது 1 அவுன்ஸ் (6 அல்லது 8 டீஸ்பூன்) கொடுக்கவேண்டும். பேதி உப்பைக் (Mag. sulph.) கொடுக்கவே கூடாது.

குழந்தை பிறந்த பத்து நாள் வரை இரண்டு வேளையும் தாயின் தேகஸ்திதியை உஷ்ணமானி (Thermometer) கொண்டு பார்க்க வேண்டும்: அவள் அயர்ந்து தூங்குகிருளா என்று கவனிக்க வேண்டும். படுக்கையைச் சுத்தமாக அமைப்பது, நல்ல காற்ருேட்டத்தை உண்டு பண்ணுவது, தகுந்த ஆகாரங்களைக் கொடுப்பது, வயிற்றில் அஜீர்ணமும் உப்புசமும் இல்லாமல் பாதுகாப்பது இவை தூக்கத்துக்கு உதவியாயிருக்கும். அப்படியும் தூங்காமலிருந்தால் உடனே டாக்டரிடம் காண்பிக்க வேண்டும். தூக்கம் குறைந்தால், பிரசவப் பைத்தியம் (Peurperal insanity) என்ற வியாதியாகிவிடும்.

மார்பையும் காம்பையும் கவனிக்க வேண்டியது முக்கியம். 6 அல்லது 7 மாத கர்ப்பத்திலிருந்தே கவனிக்கவேண்டும். காம்பைத் தினம் இரண்டு மூன்று முறை இழுத்துவிட்டால் குழந்தை பால்குடிக்கச் சுலபமாயிருக்கும். இவ்விதம் செய்வது முக்கியமாய் முதல் பிரசவத்தில் மிகவும் அநுகூலமாயிருக்கும். கடைசி மாதங்களில் காம்பிலிருந்து, ஒருவிதக் கொழ கொழப்பான நீர் வெளிப்படும்.

இந்த நீர் வந்தவுடன், நனைந்த பஞ்சினுல் நன்ருகத் துடைத்து எடுக்கவேண்டும். பொருக்குத் தட்டிவிட்டால் கொதித்து ஆறின ஆலிவ் எண்ணெயை (Olive Oil) பஞ்சில் நனைத்து மார்பின்மேல் வைத்துக் கட்டவேண்டும். 24 மணி நேரம் கழித்து, இதை எடுத்துவிட்டு மார்பைச் சுத்த ஜலத்தாலும் சோப்பாலும் கழுவவேண்டும்.

பிரசவித்த பிறகு, முதல் இரண்டு நாளில் பால் சுரக்காது. அதற்குப்

பதில் ஒருவித நீர் வரும். இதுவே குழந்தைக்கு முதல் இரண்டு நாளில் ஆகாரம். ஆகையால் அதைக் குழந்தை சப்பவிடுவது நல்லது. மூன்று நிமிஷத்துக்கு மேல் விட்டால் வறட்டுச் சதையைச் சப்பி வெடிப்பு உண்டாக்கிவிடும். இந்த வெடிப்பால் உண்டாகும் வலி அதிகமாகிவிடும். அதனால் பலர் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல் பாலை அப்படியே வற்ற வைத்துக் குழந்தையைத் தவிக்க விடுகிறார்கள். இது நம் அஜாக்கிரதையால் ஏற்படும் துன்பம். வெடிப்புக் கொஞ்சம் உண்டான துமே மார்பை 'ஸ்பிரிட்' (Spirit) டால் துடைத்து, 'ஸிங்க் ஆக்ஸைட்' (Zinc oxide) என்னும் பவுடர் போன்ற மாவைத் தடவ வேண்டும். இதனால் அந்த வெடிப்பு இரண்டே நாளில் ஆறிவிடும்.

சாதாரணமாய்க் குழந்தை பிறந்த 24 மணி நேரத்துக்கெல்லாம் தாயின் மார்பில் ஒருவிதமான கனமும் வலியும் ஏற்படும். இது பால் சுரப்பதற்காகத்தான் என்பது எல்லாரும் உணர்ந்த விஷயம். சிலருக்குப் பால் ஜுரம் வரவே வராது. பலருக்கு 102 அல்லது 103 டிகிரி வரை ஜுரம் வரும். இந்த ஜுரம் இரண்டொரு நாள்தான் இருக்கும். பால் சுரந்து குழந்தை குடிக்க ஆரம்பித்ததும் மார்பில் கனம் குறைந்துவிடும்.

பால் அதிகமாயிருந்து, குழந்தை குடித்த பிறகும் உபத்திரவப் படுத்தினால் குழந்தை குடித்தவுடனேயே அந்த அதிகப் பாலை எடுத்துவிட வேண்டும். எடுக்காவிட்டால் மேலும் பால் சுரந்து, வலி அதிகமாகும். இதைத் தவிர, பால் புளித்துப்போய்க் குழந்தைக்கும் வயிறு கெட்டுவிடும். எந்த எந்த இடங்களில் பால் அதிகமாகக் கட்டிக்கொண்டு கல்லுப்போல் இருக்கிறதோ, அங்கெல்லாம் மெதுவாகப் பிடித்துத் தேய்த்துவிடுவது (Massage) நலம். பிறகு ஒரு சுத்தமான துணியை எடுத்துக் கனமாக மடித்துக் காம்பைச் சுற்றி வைத்துக்கொண்டு மார்பை நசுக்கிய வண்ணம் படுத்திருந்தால் அதிகப் பால் வெளியே வந்துவிடும்; மார்பும் மெதுவாகும்.

மேற்கூறிய சுகாதார விதிகளை அநுசரிக்காவிட்டால், வெடிப்பு மூலமாகப் புளித்த பால் ரத்தத்தில் பரவிச் சீழ் வைத்து ஜுரம் வரும். இவ்விதம் சீழ் வைத்தால், ஒரு டம்ளர் ஜலத்தில் ஒரு டீஸ்பூன் போரிக் பவுடரைப் போட்டுக் கொதிக்க வைத்து, அதில் ஒரு சுத்தமான வெள்ளைத் துணியைப் பிழிந்து கை படாமல் பொறுக்கும் சூட்டில் 'ஒத்தடம்' கொடுக்க வேண்டும்.

பிரசவித்த 24-மணி நேரம் கழித்து, தாயின் தலையையும் முதுகையும் தூக்கி மெதுவாகக் கொஞ்சம் சாய்த்து உட்கார வைப்பது நல்லது. இவ்விதம் செய்வதால் கழிவுப் பொருள்களை வெளிப்படுத்த வசதியாயிருக்கும். இரண்டாம் நாளிலிருந்து படுக்கையிலேயே உட்காரவோ சாயவோ அநுமதிக்கலாம்.

நீர் தாராளமாக இறங்கவேண்டும். பிரசவமான பிறகு 12 மணி நேரம் நீர் இறங்காவிட்டால் பாதகமில்லை. பிறகு தாராளமாகப் போக வேண்டியது மிகவும் அவசியம். பிரசவமான எட்டு மணி நேரத்துக்கெல்லாம் 'பெட்பானை' (Bed-pan) வைத்துப் பிரயத்தனம் செய்ய வேண்டும். அப்படியும் நீர் இறங்காவிட்டால், அடிவயிற்றில் தொப்பு

ளுக்குக் கீழ் வெந்நீர்ப்பையை வைக்கலாம்; அல்லது பொறுக்கும் சூட்டில் வெந்நீரை நீர் இறங்கும் இடத்தில் பிழியலாம். இவ்விதம் செய்தும் நீர் இறங்காவிட்டால், டாக்டருக்குத் தெரிவிப்பது அவசியம்.

பிரசவமான பெண்ணின் பாதுகாப்பு விஷயமாக நம்மவர் தொன்று தொட்டுக் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள். பச்சை உடம்பு, தீட்டு என்று சொல்லி, அவர்கள் ஒரு வேலையும் செய்யாமலும், உடலை அலட்டிக்கொள்ளாமலும் இருக்கும்படி வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தார்கள். வாடை படக்கூடாது, பச்சை ஜலத்தில் அளையகூடாது, தரையில் வெறும் காலை வைத்து நடமாடக் கூடாது, கண்டபடி வெளியே வாசலில் போகக் கூடாது என்று சுகாதாரத்துக்கு அநுகூலமான பல கட்டுப்பாடுகள் இருந்து வந்தன. பிரசவித்த பெண்ணுக்குப் பத்தியம் போடுவது, அவளை நீராட்டுவது, காற்று மழை அடித்தால் சணப்புப் போடுவது எல்லாம் பாட்டியின் வழக்கம்.

தாய் உணவை அதிகமாகச் சாப்பிட்டால் ஜீர்ணம் செய்வதற்குச் சக்தி இல்லை. தாய்க்கு வயிறு கெட்டுவிட்டால் அது குழந்தையையும் பாதிக்கும். அதனால் பத்தியமாக எளிதில் ஜீர்ணமாகக்கூடிய ஆகாரம் சாப்பிட வேண்டும். ஆனால் அது புஷ்டியுள்ளதாக இருப்பது அவசியம்.

தாய்ப் பால்

சாதாரணமாகக் குழந்தை பிறந்த 24 மணி நேரத்துக்கெல்லாம் தாயிடம் பால் ஊறும். சிலருக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பிறகே பால் வரும். பால் எப்பொழுது வந்தாலும் சரி, பிறந்த 12 மணி நேரத்துக்கெல்லாம் குழந்தையைத் தாயிடம் குடிக்க விடவேண்டும். பிறகு 4 மணி நேரத்துக்கு ஒரு தடவை இரண்டு நிமிஷம் வரை குழந்தையை உண்ண விடவேண்டும். பால் வரவில்லை என்று குழந்தையைத் தாயிடம் விடாமலேயே இருந்துவிட்டால், பால் சுரப்பதே கஷ்டமாகிவிடும்.

சில சமயங்களில் தாய்க்கு ஏதாவது அம்மை போன்ற தொத்து வியாதி ஏற்பட்டால், அப்போது குழந்தையைத் தாயிடம் விட முடியாது. அந்தச் சமயத்தில் பாலும் குறைந்து வற்றிவிடும். ஒரு வாரம் அல்லது 10 நாள் வரை நிறுத்த நேர்ந்துவிட்டாலும், கீழ்க்கண்ட சிகிச்சைகளைச் செய்தால் மறுபடி முன்போல் பால் ஊறும்: (1) தவறாமல் 4 மணிக்கு ஒரு தடவை குழந்தையைத் தாயிடம் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் குடிக்கவிட வேண்டும். (2) தினம் இரண்டு வேளை (மேலிருந்து கீழ் நோக்கி) பாலையெல்லாம் பீச்சி எடுத்து விட வேண்டும். (3) காலையிலும் மாலையிலும், ஐந்து அல்லது பத்து நிமிஷம் மார்பைச் சுற்றிலும் தேய்த்துக் கொள்ளவேண்டும் (Round-Massage). (4) இவ்விதம் தேய்த்துக்கொண்ட பின், இரண்டு சுத்தமான பேஸின்களில் ஒன்றில் குளிர்ந்த தண்ணீரும் மற்றொன்றில் பொறுக்கும் சூட்டில் வெந்நீரும் வைத்துக்கொண்டு, இந்த இரண்டு நீரிலும் மார்பை மாறி மாறி அமிழ்த்த வேண்டும். இவ்விதம் பத்து நிமிஷம் செய்து கடை

சியில் குளிர்ந்த ஜலத்தில் அமிழ்த்தி விட்டு, உலர்ந்த சொரசொரப்பான துண்டால் நன்றாய்த் தேய்த்துத் துடைத்துக் கொள்ள வேண்டும். (5) தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் முன்பு ஒரு டம்ளர் தண்ணீரோ, பார்லித் தண்ணீரோ குடிக்க வேண்டும்.

பிறந்து ஒரு மாதம் வரை குழந்தைகளுக்கு வெகு ஜாக்கிரதையாகப் பால் கொடுக்க வேண்டும். பால் கொடுக்கும்போது, குழந்தையின் தலையை மட்டும் சிறிது தூக்கினாற்போல் பிடித்துக் கொண்டு, பாலைக் கொடுப்பது உசிதம். இதனால் குழந்தைக்குப் புரையேறாமல் இருக்கும். தாய் படுத்துக் குழந்தையைப் பக்கத்தில் விட்டுக்கொண்டு பால் கொடுக்கலாம். ஆனால் சில சமயங்களில் தாய் கண்ணயர்ந்துவிட்டால், புரையேறியோ அதிகம் குடித்து விட்டோ குழந்தை திணறும். இது குழந்தையின் பிராணனுக்கே அபாயம். குழந்தை பால் குடிக்கும் போது தாயின் கவனம் முழுவதும் அதனிடமே இருக்க வேண்டும். குழந்தை பெரிதாகும் வரை உட்கார்ந்துகொண்டே கொடுப்பது தான் நல்லது.

தாயிடம் பால் அதிகமாகச் சுரந்தால், குழந்தை குடிக்கும்போது அதன் வயிற்றைக் கவனிக்க வேண்டும். வயிறு நிறைந்துவிட்டது என்று தெரிந்தால் உடனே நிறுத்த வேண்டும். பால் நிறைய இருந்து குழந்தையும் நன்றாக உறிஞ்சிக் குடித்தால், மூன்று அல்லது நான்கு நிமிஷம் குடித்தவுடன் வயிறு நிறைந்துவிடும். மெதுவாய்க் குடிக்கும் குழந்தைக்கு ஆறு நிமிஷங்கள் வரை கொடுக்கலாம். குழந்தை அதிகமாகப் பாலைக் குடித்தால், உடனே எல்லாவற்றையும் வாந்தி எடுத்துவிடும். சில குழந்தைகள் அதிக வேகமாக உறிஞ்சி உறிஞ்சிக் குடிப்பதால், பாலுடன் காற்றும் வயிற்றுக்குள் சென்றுவிடும். இதனால், பால் கொஞ்சந்தான் குடித்திருந்த போதிலும் வயிறு நிறைந்தாற் போல் தோன்றும். குழந்தையும் திணறும். அரைமணிக்கெல்லாம், வயிறு வடிந்து குழந்தைக்குப் பசி வந்துவிடும். இதற்குக் குழந்தையை நம் தோள்மேல் போட்டுக் கொண்டு மெதுவாக அதன் முதுகில் தடவினால், அந்தக் காற்று ஏப்பமாக வந்துவிடும்; வயிறும் வடிந்துவிடும். பிறகு பாலைக் கொடுத்து வயிற்றை நிறைத்து விட்டால், குழந்தை அழாமல் விளையாடிக்கொண்டிருக்கும்.

சாதாரணமாக நிறைமாதக் குழந்தை (அதாவது பிறந்ததும் ஆறு ராத்தலுக்கு மேல் நிறையுள்ளது) வயிறு நிறையப் பால் குடித்தால், நான்கு மணி வரை பசி தாங்கும். இதற்கு நடுவில் அழவே அழாது. குழந்தை ஆரோக்கியமாயிருப்பதற்கு இது ஓர் அறிகுறி. பிறந்தது முதல் இரண்டு ஆகாரங்களுக்கு நடுவில் 3 மணி அவகாசம் இருக்க வேண்டியது அவசியம்.

குழந்தை மிகவும் பலவீனமாயிருந்தாலும், குறை மாதத்தில் பிறந்திருந்தாலும், ஆறு ராத்தலுக்குக் குறைவாயிருந்தாலும், 2 மணி நேரத்துக்கு ஒரு தடவை பால் கொடுக்கலாம். ஆகாரங்களுக்கு இடையில் ஒழுங்கான நேரம் இருந்தால்தான் குழந்தையின் வயிற்றுக்கு வேண்டிய ஓய்வு ஏற்பட்டு, ஜீர்ணத்துக்கு வேண்டிய நீர்களும் நன்றாய்ச் சுரக்கும்.

குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுப்பது தவறான வழக்கம். இரவில் பத்து அல்லது பதினொரு மணி முதல் காலை ஐந்து அல்லது ஆறு மணி வரை ஒன்றும் கொடுக்கக் கூடாது. இதன் இடையே குழந்தை அழுதால் காய்ச்சி ஆறிய இரண்டு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் ஒரு டீஸ்பூன் சர்க்கரை போட்டு அதைக் கொடுக்கலாம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதையும் நிறுத்திவிடுவது நல்லது. ஆரோக்கியமான குழந்தைக்குத் தினம் 6 தடவையும், பலவீனமான குழந்தைக்குத் தினம் 7 தடவையும் பால் கொடுத்து இரவில் ஒன்றும் கொடுக்காமலிருந்தால், வயிறு கெட்டுப் போகாது.

குழந்தை சில சமயங்களில் பால் குடிக்க மறுத்து அழுதால், அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். கீழ்க்கண்ட காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்: (1) தாயிடம் பால் இல்லாமலிருக்கலாம். அப்போது கையால் பீச்சிப் பார்க்கலாம். (2) குழந்தையின் வயிற்றில் காற்றுச் சேர்ந்து உப்புசத்தை உண்டாக்கலாம். வயிற்றை அமுக்கினாற் போல் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு முதுகைத் தடவினால், ஏப்பம் வந்து வயிறு வடியும். (3) குழந்தையின் இடுப்பில் கட்டியிருக்கும் துணி மூத்திரத்தில் நனைந்திருந்தால் அதற்கு வேதனை உண்டாகும். (4) குழந்தை பால் குடிக்கும் போது அதன் நாக்கு மேல்வாயில் ஒட்டிக்கொண் டிருக்கலாம். நம் விரலால் குழந்தையின் வாயைத் திறந்து நாக்கை மெதுவாகத் தள்ளிவிட்டால், பிறகு பால் குடிக்க ஆரம்பிக்கும். (6) குழந்தையின் மூக்கு, சளியினாலோ வாந்தி எடுத்ததாலோ அடைபட்டிருக்கலாம். கொஞ்சம் பஞ்சைக் குச்சியில் நன்றாய்ச் சுற்றிக்கொண்டு, நல்லெண்ணெயில் தோய்த்துக் குழந்தையின் மூக்கை மெதுவாகத் துடைக்கவும். துணித் திரியையும் எண்ணெயில் நனைத்து உபயோகிக்கலாம். அஜாக்கிரதையால் பஞ்சைக் குழந்தையின் மூக்கில் அடையும்படி விட்டுவிடாதீர்கள். (7) போட்டுப் பால் குடித்துப் பழகிய குழந்தை, தித்திப்புக் குறைவாயிருக்கும் தாய்ப்பாலை வெறுக்கலாம். (8) தாய்ப்பால் மட்டுமே சாப்பிடும் குழந்தைக்கு இந்தப் பாலே சத்துள்ளதாயிருந்து அஜீர்ணத்தை உண்டுபண்ணலாம்.

இவ்விதம் உண்டாகக்கூடிய சிறு தொந்தரவுகளைத் தாய் அவ்வப்போது கவனித்து நிதானத்துடனும் முன் யோசனையுடனும் திருத்தவேண்டும்.

எப்போது நிறுத்துவது?

'தாய்ப்பாலை நிறுத்துவது எப்போது? எப்படி?' என்பது ஒரு பெரும் பிரச்னை. சிலர், அடுத்த குழந்தை பிறக்கும் வரை கொடுப்பது வழக்கம் என்று, இரண்டு மூன்று வயதுவரையில் பால் கொடுக்கிறார்கள். சிலர் இரண்டு மாதத்திலேயே நிறுத்திவிடுகிறார்கள். இரண்டுமே தவறு. குழந்தையின் ஒன்பதாவது மாதத்திலிருந்து ஒரு வயதுக்குள் தாய்ப்பாலை நிறுத்துவதுதான் நல்லது.

9 மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைக்கு முதலில் ஒரு வேளை தாய்ப் பாலுக்குப் பதிலாகப் போட்டுப்பாலைக் கொடுக்க வேண்டும். 5 அல்லது 6 நாள் இவ்விதம் கொடுத்துவிட்டுப் பிறகு

இரண்டு வேளை தாய்ப் பாலை நிறுத்தவேண்டும். இப்படிப் படிப் படியாகத் தாய்ப்பாலைக் குறைத்துக்கொண்டே வந்து ஒரு மாத காலத்துக்குள் போட்டுப் பாலையே எல்லா வேளைக்கும் கொடுக்கலாம்.

குழந்தையின் ஆகாரம் தாய்ப் பாலிலிருந்து பசுவின் பாலுக்கு மாறும்போதும் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. 'பச்சைப் பேதி'யும், 'தயிர்க் கட்டிப் பேதி'யும் சாதாரணமாக வரும் வியாதிகள். இதற்காகப் பசுவின் பாலை விட்டுவிட்டு 'டின்' மாவுகளையும் 'டின்' பாலையும் 'டின்' மோரையும் நாடிச் செல்லுகிறோம். அவை மட்டும் குழந்தையின் உடலுக்கு ஒத்துக்கொள்ளுகின்றனவா?

குழந்தைக்குத் தகுந்ததும், தாய்ப்பாலுக்குச் சமமானதும், எளிதில் கிடைக்கக் கூடியதுமான ஆகாரம் பசுவின் பால்தான். இரண்டு பாலிலும் உள்ள பொருள்களின் சதவிகித விவரம்:

	புரோடீன்	சர்க்கரை	கொழுப்பு	தண்ணீர்
பசுவின் பாலில்	$3\frac{1}{2}$	5	$3\frac{1}{2}$	87
தாய்ப் பாலில்	$1\frac{1}{2}$	7	$3\frac{1}{2}$	87

இந்த அட்டவணையை நாம் கவனித்தால், பசுவின் பாலில் உள்ள புரோடீன் தாய்ப் பாலில் உள்ளதைவிட $2\frac{1}{2}$ பங்கு அதிகமாயிருக்கிறது. குழந்தை ஜீர்ணம் செய்ய முடியாத புரோடீனைப் பிரித்தெடுத்து விட்டால், அது தாய்ப்பாலுக்குச் சமமாகிவிடும். புரோடீன் பிரிந்த பாலுக்கு 'வே' (Whey) என்று பெயர்.

'வே' தயாரிக்கத் தேவையான பொருள்கள் இவை: (1) 'ஸிட்ரிக் ஆஸிட்' (Citric acid) என்னும் சூர்ணம் அல்லது எலுமிச்சம்பழம்; (2) பால்; (3) வெளுத்துக் கொதிக்க வைத்த 'மஸ்லின்' துணி $\frac{1}{2}$ கஜம்; (4) சர்க்கரை.

ஒரு டீஸ்பூன் 'ஸிட்ரிக் ஆஸிட்' சூர்ணத்தை எடுத்து ஓர் அவுன்ஸ் காய்ச்சி ஆறிய ஜலத்தில் கரைத்து ஒரு புட்டியில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த மருந்து எலுமிச்சம் பழச் சாற்றுக்குச் சமமானது. இதில் ஒரு டீஸ்பூன் மருந்துக்கு, கால்படி பாலை முறிக்கும் சக்தி உண்டு. சுத்தமாகத் தேய்த்து வெந்நீரில் அலம்பிய 'எவர் ஸில்வர்' பாத்திரத்திலோ, வெள்ளி அல்லது பீங்கான் கிண்ணத்திலோ ஒரு ஸ்பூன் மருந்தை விடுங்கள். பிறகு கால்படி பசுவின் பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்சுங்கள். பால் பொங்கி வரும்போது, சுத்தமான கிண்ணத்தில் பாலை ஸ்பூனால் கலக்கிக் கொண்டே விடுங்கள். பால் திரிந்து தயிர்க் கட்டியும் தண்ணீருமாகப் பிரியும். திரியாமல் வெண்ணிறமாக இருக்கும்போதே பாலை நிறுத்திவிடவேண்டும். சிறிது நேரம் மூடி வைக்கவேண்டும். பிறகு வெளுத்த மஸ்லின் துணியினாலோ, லேசான மல்துணியாலோ வடிகட்டுங்கள். குவியலாக ஒரு ஸ்பூன் சர்க்கரையை இந்த வடிகட்டின 'வே'யில் போட்டுக் கலக்கி மூடி வையுங்கள். குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய வேளைகளில் இந்த 'வே' யிலிருந்து வேண்டிய அளவு எடுத்துச் சுடவைத்துக் கொடுக்கவேண்டும். காலையில் தயாரித்த 'வே'யைச் சாயங்காலம் வரை

வைத்துக்கொள்வதனால் கெட்டுப் போகாது.

வடிகட்டும் துணியை உடனே ஸோப் போட்டுக் கசக்கிக் கொதிக்க வைத்துப் பிழிந்து உலர்த்தி மறு தடவைக்கு உபயோகப்படுத்தத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். துணியைச் சுத்தமாய்த் துவைக்காவிட்டால், அதில் தங்கும் 'வே' சக்கை புளித்துப் போய் மறுபடி தயார் செய்யும் 'வே' யைக் கெடுத்துவிடும்.

இப்படித் தாய்ப்பாலுடன் கூடக் கொடுக்கும் (Supplementary feed) 'வே'யை, தாய்ப்பால் முழுவதும் நிறுத்திய பிறகு குழந்தைக்கு முழு ஆகாரமாய்க் கொடுக்க வேண்டும்.

'பாலைக் குழந்தைக்கு எப்படிக் கொடுப்பது?' என்று கேட்டால், பட்டணங்களில் நாகரிக முறையில் வளர்ந்த குழந்தைகூட, 'புட்டியில் போட்டுத்தான்' என்று பதில் சொல்லும். தாயிடம் குழந்தை எப்படிப் பால் குடிக்கிறதோ, அதைப் போலவே 'போட்டுப்பாலை'யும் ஆவலுடனும் நிதானமாய்ச் சப்பியும் குடிக்க வேண்டும். இயற்கையை ஒட்டித்தான் செயற்கையும் இருக்க வேண்டும்.

குழந்தை வளர்ப்பு

குழந்தைகளுக்கு ஆகாரம் ஒத்துக்கொள்கிறதா, இல்லையா என்று பொதுவாக வரையறுத்துக் கூற முடியாது. ஆகார விஷயம் தனித்தனியே ஒவ்வொரு குழந்தையின் அமைப்பையும் பொறுத்தது. எந்த ஆகாரத்தையும் ஒரு நாள் கொடுத்ததுமே அதன் குணமும் தோஷமும் நமக்குப் புலப்பட்டு விடும். எந்த ஆகாரம் குழந்தைக்குத் தகுந்தது, எது சரியான அளவு என்பதெல்லாம் ஒவ்வொரு குழந்தையின் விஷயத்திலும் வேறுபடும். 'குழந்தைக்குத் தேவையான அளவுதான் கொடுக்கிறோமா? குறைவாய்க் கொடுக்கிறோமா? அதிகமாய்க் கொடுக்கிறோமா?' என்று தாய் புத்திசாலித்தனமாய் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். குழந்தை ஒரு கஷ்டமுமில்லாமல் ஆகாரம் உட்கொண்டும் நன்றாக வெளிக்குப் போய்க்கொண்டும் இருந்தால், அது ஆரோக்கியமாய் வளர்கிறது என்பதற்கு அடையாளம். தினம் மூன்று அல்லது நாலு தடவை மஞ்சளாயும், இளகிக் கொழகொழப்பாகவும் வெளிக்குப் போக வேண்டும். மலம் நுரைத்தோ, தண்ணீராகவோ, பச்சையாகவோ, கட்டியாகவோ இருக்கவே கூடாது. ஒவ்வொரு தாயும் இந்த விஷயங்களை உணரவேண்டியது அவசியம்.

ஆகாரத்தைப் போலவே குழந்தைக்கு நீராட்டுவதும் மிதமாக இருக்கவேண்டும்; அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக்கூடாது. நீராட்டுவது ஒரு வரம்புக்குள் இருக்க வேண்டும். அதிகமாய்க் குளிப்பாட்டுவதால் குழந்தைகளுக்கு ஜலதோஷம், மார்ச் சளி, ஜுரம் போன்ற வியாதிகள் வருகின்றன. குழந்தை ஆரோக்கியமாக இருந்தால்தான் குளிப்பாட்டலாம். பலவீனமாயிருந்தாலும், கொஞ்சம் ஜலதோஷம் பிடிக்க ஆரம்பித்தாலும், பேதியானாலும் குழந்தைக்குக் குளிப்பாட்டவே கூடாது. சூடான வெந்நீரில் கனமான துணியை நனைத்துப் பிழிந்து கைகால்களையும் இடுக்குகளையும் துடைத்தால் போதும். பலவீன நிலையிலிருக்கும் குழந்தையின் மார்

யைத் திறந்து வெளிக் காற்றுக்கு இலக்காக்கினல், 'நிமோனியா' என்ற கடும் ஜுரம் வரும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் மூன்று மாதம் நிறைந்ததும் அம்மை குத்தியாக வேண்டும். ஆனால் கீழ்க் கண்ட வியாதிகள் இருந்தால் அவை குணமானபின் அம்மை குத்த வேண்டும்: (1) சிரங்கு, (2) ஜுரம், (3) எலும்பு வளராமல் மிகவும் சிறியதாக இருக்கும் நிலை (Rickets), (4) குறை மாதத்தில் பிறந்து பலவீனமாயிருக்கும் நிலை.

ஒரே ஒரு கையில் இரண்டு அம்மை குத்தினால் போதும். குத்திய பால் உலரும் வரையில், குழந்தை கையை அசைக்காமலும் தேய்த்துக்கொள்ளாமலும் இருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். அதன் மேல் ஒருவித மருந்தையும் தடவக்கூடாது. கை வைக்காத சொக்காயைக் குழந்தைக்குப் போட வேண்டும்.

பிறகு நாலு நாள் வரை எப்போதும் போல் நீராட்டலாம். ஐந்தாம் நாளிலிருந்து குளிப்பாட்டக் கூடாது. கை கால் இடுக்குகளில் மட்டும் துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து துடைக்கலாம். ஐந்தாம் நாள் அம்மை குத்திய இடம் கொஞ்சம் கொப்புளிக்க ஆரம்பிக்கும். பிறகு ஆறு, ஏழாம் நாளில் முத்து முத்தாய்க் கொப்புளித்துப் பெரிதாக வீங்கிக் கொண்டும், சுற்றிலும் சிவந்தும் இருக்கும். ஜுரம அதிகமாக வரும். இந்தச் சமயத்தில் அடி படாமலும், கொப்புளத்தின் மேல் துணி கூடப் படாமலும் மிக ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். இந்தக் கொப்புளம் வெடித்து நீர் வேறு பக்கம் பரவினல் அங்கெல்லாம் புண்ணாகிவிடும். இந்த ஒரு வாரம் (5-ஆம் நாளிலிருந்து 10-ஆம் நாள் வரை) மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து வர வேண்டும். மருந்து, சூர்ணம் எதுவுமே அதன் மேல் தடவக் கூடாது. முகப் பவுடரையும் விபூதியையும் போடுவது சிலர் வழக்கம். இது மிகவும் தவறு. 9-ஆம் நாளுக்குப் பிறகு புண் உலர ஆரம்பிக்கும். பொருக்கு நன்றாய்த் தானாக உலரும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். பொருக்கு உதிர்ந்த பிறகு புண்மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெய் தடவலாம். பிறகு ஒரே நாளில் புண் நன்றாய் ஆறிவிடும். அம்மை குத்தியிருக்கும்போது உடம்பில் எங்காவது சிரங்கோ புண்ணோ வந்தால் உடனே டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

பல் முளைப்பதற்கு முன் குழந்தைக்குக் கெட்டியான ஆகாரம் கொடுக்கக் கூடாது. இரண்டு வயது நிறையும் வரை சாதம் கொடுக்கவே கூடாது.

குழந்தைக்கு எட்டு மாதம் நிறைந்ததும், ஒரு நாளைக்கு ஒரு வேளை தித்திப்பான தயிர் தோய்த்துக் கொடுக்கலாம். தயிர் புளிக்காமல் இருக்கவேண்டும். அதன் மேல் படியும் ஆடையை எடுத்துவிட வேண்டும்; தயிரோடு கொஞ்சம் சர்க்கரையைக் கலந்து ஸ்பூனல் எடுத்துக் கொடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாகச் சாப்பிடப் பழக்க வேண்டும்.

பழச்சாறு கொடுப்பது இப்போது எல்லாருக்குமே வழக்கமாகி விட்டது. ஆரஞ்சுப் பழமும் தக்காளியும் பிழிந்து வடிகட்டி அந்த ரசத்தில் இரண்டு அவுன்சுடன், ஜலம் இரண்டு அவுன்சு கலந்து, சர்க்கரை போட்டு, மொத்தம் அரைப் பங்கு

ஆகாரத்தின் அளவை, இடைவேளையில் கொடுக்க வேண்டும். பழரசத்தை ஜலம் விடாமலும் அதிகமாயும் கொடுத்தால் பேதியாகும்.

நன்றாய் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை திடீரென்று வீரிட்டுக் கதறினால், தாய்க்கு என்ன செய்வதென்று தெரிவதில்லை. இதற்குக் காரணம் கீழ்க்கண்டவைகளில் ஒன்றாயிருக்கலாம்: (1) குழந்தையின் படுக்கையிலும், சொக்காயிலும் எறும்போ, ஏதாவது பூச்சியோ ஊசாமுள்ளோ இருக்கலாம். (2) இடுப்பில் கட்டியிருக்கும் துணி (Napkin) ஓரமாகவோ இறுக்கமாகவோ இருக்கலாம். (3) குழந்தையின் விரல்களில் ரோமமோ மெல்லிய நூலோ சுற்றிக்கொண்டிருக்கலாம். (4) குழந்தை தன் தலைமயிரைத் தானே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு வலி தாங்காமல் கத்தவும் கூடும். (5) அதன் மூக்கில் சளியோ, வாந்தியின் துணுக்கோ அடைத்துக்கொண்டு மூச்சுவிட முடியாமல் போகலாம்.

கடைசியாகத் தாய்க்குச் சில சிறு குறிப்புகள்:

(1) குழந்தைக்கு எட்டு மாதம் வரையிலாவது உச்சியில் விளக்கெண்ணெயை அதிகாலையில் தடவ வேண்டும்.

(2) குழந்தையின் சின்னஞ்சிறு நகத்தை வாரம் ஒரு முறையாவது சிறு கத்தரிக்கோலால் கத்தரிக்க வேண்டும். இல்லாவிட்டால் நகத்தால் கீறிக்கொண்டு அழும்.

(3) குழந்தையின்
வாரம் ஒரு முறை
தண்ணீரில் கொதிக்க
முடிந்தால் வெள்ளாவி
லாம்.

(4) குழந்தையை
மெத்தென்ற படுக்கை
யணையிலும் படு
வேண்டாம். மேடு பள்
தரையில் பாய்
தலை கெட்டிப்படும்.

(5) குழந்தையை
தொட்டிலிலேயே
இடமில்லாமல் கட்
வேண்டாம். சுத்தமா
பாயின் மேல் படுக்க
குழந்தை பாயை வி
போனால் சோம்பல்
மறுபடியும் எடுத்துப்
விடுங்கள். குழந்தை த
வதால் மார்பு தேய்ந்
என்று தொட்டிலில் கட்
வது சரியன்று.
உதைத்துக் கொள்வ
வதும் தவழ்வதும் கு
உடலுக்கு உறுதியளிக்

(6) எதைக் கண்
பொறுக்கிப் போட்
வயதில், குழந்தை
இடத்தைச் சுத்தமா
கொள்ள வேண்டும்.

(7) குழந்தைக்கு
மருந்தோ கொட்
சாமானோ வை
மேஜைமீது போடு
குழந்தைக்கு எட்டும்
விடக்கூடாது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATN
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

வாசகர் அன்பு

ுன்ற இதழ் 'மஞ்சரி' யில் ஒரு வேடிக்கை நிகழ்ந்து
விட்டது. 'க்விஸ்' கேள்விகளில் 'பொது' என்ற
கீழ் உள்ள மூன்றாவது கேள்வி, "இந்தியக் கடற்
ீ மைக் கப்பல் எது? இதன் பழைய பெயர்
ந்து எந்த ஜெர்மன் கப்பலைக் கவிழ்த்தது?" என்
பதில் "எச். எம். ஐ. எஸ். டெல்லி; பழைய
லிஸ்; கிராப்ஸபி என்பதைக் கவிழ்த்தது" என்
கவேண்டும். இவற்றில் எப்படியோ ஒரு பிழை
டது. உடனே பல வாசகர்கள் கடிதம் எழுதி
். அத்தனையும் அன்பு நிறைந்த கடிதங்கள்.

ஆர்வத்தினால் மஞ்சரியில் சிறிது பிழை கண்டா
து கஷ்டப்படுகிறது" என்கிறார் எர்ணாகுளம் பி. வி.
கிருஷ்ணன். "தங்கள் - ஏன், நம் - மஞ்சரி" என்
சன்னை எல். ஆர். மதுசூதன். "அன்பன் என்ற
யில்" எழுதியதாகக் கூறுகிறார் மதுரை த. கணபதி.
பி. எஸ். சேஷாத்திரி தாமதியாமல் விமானத
ழுதுகிறார். ஆரணி மாணவர் டி. வி. ரங்கசாமி தம்
டரின் மேலொப்பத்தோடு எழுதுகிறார். இன்னும்
எஸ். ராஜம், நீலகிரி கே. எஸ். பழனிசாமி, முடி
ான் எம். எஸ். ராமமூர்த்தி ஆகியவர்களும் எழுதி
். இந்தக் கடிதங்கள் 'மஞ்சரி' யிடம் வாசகருக்கு
வற்ற அன்பையும் மதிப்பையும் காட்டுவதோடு,
் எவ்வளவு கூர்மையாக வாசிக்கிறார்கள் என்பதை
டுகின்றன.

தைக் காண நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நண்பர்
அன்புக்கு நன்றி. இனி இத்தகைய சிறுபிழையும்
ன்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்